

பேசும் படம்
960 ....75 காசு
மீண்ட
சொர்கம்
சலபதிராவ்
கதை, வசனம், டைரக்ஷன் - ஸ்ரீதர்

பேசும் படம் மலர் 1960

1960 ஏப்ரல் மாத 'பேசும் படம்' வழக்கம்போல ஆண்டு மலராக வெளி வருகிறது.

வழக்கமான அம்சங்களுடன் ஏராளமான வர்ணப் படங்களும் புதிய ரசமான அம்சங்களும் கொண்டு வெளி வருகிறது.

சுமார் 220 பக்கங்கள் : : விலை ரூ 1.25

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை - 24

PICTURPOST

பிக்சர்போஸ்ட்

ஆங்கில சினிமா மாதப் பத்திரிகை

நமது தமிழ் தெலுங்குப் பதிப்புகளுடன் ஆங்கிலத்திலும் ஒரு சினிமா மாதப்பத்திரிகை பிரசுரம் செய்யத் தீர்மானித்துள்ளோம். பிக்சர்போஸ்ட் முதல் பிரதி ஏப்ரல் முதல் தேதி வெளிவருகிறது.

தனிப்பிரதி விலை 75 காசு *வருஷ சந்தா ரூ. 9*

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

37, சர் தியாகராயா ரோட் : : சென்னை-17

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 MAR 1959
MADRAS
931
1-60

இப்பொழுது நடைபெறுகிறது

சென்னை காஸினோ & பிராட்வே

மற்றும் தென்னாடெங்கும்

வாஹினியின்

ராஜமகுடம்

தயாரிப்பு & டைரக்ஷன்: பி.என்.ரெட்டி

N.T.ராமா ராவ், ராஜசுலோசனா, கண்ணாம்பா
சகஸ்ரநாமம், V.R.ராஜகோபால், பாலாஜீ
மற்றும் பலர்

கதை: டி.வி.நரஸராஜு பி.ஏ. பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ்
வசனம்: பி.எஸ்.ராமையா சங்கீதம்: மாஸ்டர் வேணு
ஒளிப்பதிவு: கொண்டாரெட்டி கலை: A.K.சேகர் & வாலி

ஸ்டுடியோ:
விஜயா & வாஹினி

S.A. SERVICE

ரூ. 10,000 இனும்.

தங்கம் தோலா ஒன்று ரூ. 2. 50 nP

அமெரிக்கன் நியூ கோல்டின் பிராபல்யம்

ஒரு முறை பரீட்சித்தால் எப்பொழுதும் திருப்தி. L. ஹஸாரிலால் பதன்கோட் எழுதுவது :

''உமது ''அமெரிக்கன் நியூ கோல்ட்'' பார்ஸல் கிடைத்தது, எனது நன்றி. இந்த தங்கத்துக்கும் உண்மையான தங்கத்துக்கும் வித்தியாசமே எனக்கு புலனாகவில்லை. மறு தபாலில் தயவுசெய்து எனக்கு 6 தோலா அனுப்புங்கள். மற்ற ஆர்டர்கள் அடுத்து வரும்.''

உறை கல் மேல் இந்தத் தங்கம் உண்மை தங்கத்தின் அடையாளத்தை செய்கிறது. இதை கம்பியாகவும், தகடுகளாகவும் செய்யலாம், இதைக் கொண்டு பலவித ஆபரணங்களும் தயாரிக்கலாம். மிக்க புத்திசாலியான நகை வியாபாரியும் இதை உண்மை தங்கமில்லை என்று கூறுவது அசாத்தியம். மேற்படி சர்டிபிகேட்டை பொய் என்று நிரூபிப்பவருக்கு ரூ. 10,000 இனும் கொடுக்கப்படும்.

இதை பிரசித்தப்படுத்தவே தோலா விலை ரூ. 2. 50 nP நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தபால் செலவு பிரத்யேகம். 3 தோலாவுக்கு ரூ. 7. 6 தோலாவுக்கு ரூ. 13. 15 தோலாவுக்கு ரூ. 30. 40 தோலாவுக்கு ரூ. 70.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ் அனுப்ப உத்தரவாதம்.

இலவசம் : மூன்று தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் இலவசம். ஆறு தோலா வாங்குபவருக்கு பாக்கிங்கும், தபால் செலவும் இலவசம்.

Imperial Commercial Company Regd. (P.P.M.)
JULLUNDUR CITY.

89699

மாதம் ரூ. 200/-
சம்பாதிக்கலாம்

வீட்டில் சினிமா புரொஜக்டர். 10 அடி பிலிமுடன் ரூ. 13/8. தபால் செலவு ரூ. 3/8. திரை 3/-. தனி பிலிம் அடி ஒன்றுக்கு ரூ. 0-8-0. 50 முறை சுடும் ஆடோமேடிக் பிஸ்டல் 25 குண்டுகளுடன் ரூ. 8/8. தபால் செலவு ரூ. 2/8. உறை ரூ. 3/- தனி குண்டுகள் ரூ. 1/. (டஜன் 1-க்கு). மடிக்கக்கூடிய புல்லாங்குழல் ரூ. 5/- தபால் செலவு 1/8. மாத் திரைகள் செய்யும் கருவி ரூ. 5/- தபால் செலவு ரூ. 3/- சேமியா தயாரிக்கும் இயந்திரம் ரூ. 20/- தபால் செலவு ரூ. 5/-.

ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். ¼ பங்கு முன் பணம் மணியார்டர் மூலம் அனுப்பவும்.

Ilfa Products (P.P.) Rajatganj
Aligarh (U. P.)

வழி பிறந்தது !

மிகக் குறைந்த சிலவில் தயாரிப்பதற்கும், நிறைந்த கதையம்சம் பொருந்தியதும், இன்றைய 'சென்சார்' சட்ட திட்டங்களைக் கவனத்தோடு ஆராய்ந்தும் உருவாக்கப்பட்ட நவசுவைகளும் நிரம்பிய ஒரு புதுமைச் சித்திரம் 'வழி பிறந்தது'.

'அமர காவியம்', 'எதிர்பார்த்த நாள்', 'நீதி எங்கே', 'மூன்று மணிநேரத்தில்', 'இரும்பு நெஞ்சன்', 'படியாத புத்திசாலி' மற்றும் பல கதைகளை உருவாக்கிய நான், இன்றைய பலதரப்பட்ட ரசிகர்களின் மனோபாவத்தை முக்கியமாகக் கொண்டு அதற்கேற்ற முறையிலே 'வழி பிறந்தது' திரைக் கதையையும் அமைத்திருக்கிறேன்.

நல்லதொரு குடும்பக் கதையைப் படமாக்க விரும்பும் படத்தயாரிப்பாளர்களை 'வழி பிறந்தது' கதையை பரிசீலிக்க அன்புடன் அழைக்கிறேன்.

அன்பன்,
பூவை. எஸ். இராமசாமி,
33, தாமோதர செட்டி தெரு.
தியாகராயநகர், சென்னை-17.

கேச பராமரிப்பு—ஒரு கலை
கலைக்காகவே பாடுபடுவது கஷ்டந்தான். ஆனால் முயற்சி வீண்போவதில்லை. சரியான பலன் நிச்சயம் கிடைக்கிறது.
கேசப் பராமரிப்பும் ஒரு கலைதான். மற்ற கலைகளைப் போல் அதுவும் கடினமானது. ஆனால் பிரமாதமான பலன் தரக்கூடியது. ஒரு பெண்ணின் அழகைப் பொலிவுறச் செய்வது வசீகரமான கூந்தலே.
கேசவர்த்தினி
ஹேர் ஆயில்,
ஷாம்பூ,
கண் மை
உங்கள் பின்னல் பழைய சம்பிரதாயப்படி இருந்தாலும் சரி, அல்லது புது மோஸ்தரில் அமைந்திருந்தாலும் சரி, கேசவர்த்தினியே உங்களுக்குச் சிறந்த அழகுச் சாதனமாகும். கேசவர்த்தினி, கூந்தல் வளர்ச்சிக்கும் அலங்கரிப்புக்கும் சிறந்தது. தலையில் ஏற்படும் சங்கடமான பொடுகைப் போக்குகிறது. அடர்ந்த நீண்ட, கருமையான கூந்தலை வளர்க்கிறது.
KESAVARDHINI
KESAVARDHINI PRODUCTS
COIMBATORE
கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்,
கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர்.
KSV-3 TM

1960 வருடத்திய சிறந்த 6 குண்டு கைத்துப்பாக்கி

லைசென்ஸ் தேவைப்படமாட்டாது

இந்தக் கைத்துப்பாக்கியைப் புகழ முற்படுவது சூரியனுக்கு வெளிச்சம் காட்டுவது போலாகும். எனினும் இவை அமெரிக்காவில் தயாராகி சமீபத்தில்தான் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விசேஷ மென்னவெனில் ஒரே தடவையில் 6 குண்டுகளை நிறைக்கக்கூடிய ஒரு அறை இதிலுண்டு. விசையை அழுத்தியதும் இந்த அறை சுழன்று ஆறு குண்டுகளையும் ஒன்றன்பின் ஒன்ருக துரிதமாக வெளியேற்றுகின்றது. இதன் பலமான வெடிச்சத்தம் சுடுபவரையும் பிரமிக்கச் செய்து விடும். உங்கள் உயிரையும் சொத்தையும் பாதுகாப்பதற்கு இதைவிடச் சிறந்த துப்பாக்கி வேறென்றுமில்லை. இதன் தோற்றமும் வேட்டுச் சத்தமும் காட்டு மிருகங்களை பயப்படச் செய்கின்றன. அசல் சுழல் துப்பாக்கியைப் போன்றது. அளவு $7\frac{1}{2}'' \times 4''$ இவை எங்களிடம் மட்டுமே கிடைக்கும்.

நிர் 9999 12 குண்டுகளுடன் ரூ. 6.75 nP.
விசேஷ ரகம் 12 குண்டுகளுடன் ரூ. 8.75 nP.

தபாற் செலவு பிரத்தியேகம்

கைத்துப்பாக்கி எண்ணெய் ஒரு குப்பி *0·50* nP.
மேலதிக குண்டுகள் *1* டஜன் ரூ. *1·50* nP.

AMERICAN TRADING CO., (P.P.M.):
Jullunder City (India)

படம் 18

காட்சி 7

பேசும்படம்

★ மார்ச் - 1960 ★

பொருளடக்கம் பக்கம்

1.	செய்திச் சுருள்	... 6
2.	புதிய வெளியீடுகள்	... 8
3.	செய்திப் படங்கள்	... 11
4.	சரஸ்வதி பிக்சர்ஸ் "ராணி சம்யுக்தா" படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன்	... 17
5.	"கவி காளிதாஸ்" படத்தில் நாகேஸ்வரராவ் - ராஜசுலோசனு	... 18
6.	என். ஏ. டி. பிக்சர்ஸ் 'சீதாராம கல்யாணம்' படத்தில் என். டி. ராமராவ்- பி. சரோஜாதேவி	... 19
7.	பண்டரிபாய்	... 20
8.	தங்கவேலு - எம். சரோஜா	... 21
9.	மோகனு	... 22
10.	மனேரமா	... 23
11.	சஹஸ்ரநாமம் (இயற்கை வர்ணப் படங்கள்)	... 24
12.	என் அப்பா கலேஞர் அசோக்குமார்	... 25
13.	திரையுலகில் நான் மறக்க முடியாதவர்	... 33
14.	குணசித்திர நடிகர் ஜி. வி. சர்மா	... 41
15.	ஸ்டுடியோ விஜயம்	... 47
16.	பிறந்த நாள் (படக்காட்சிகள்)	... 57
17.	கேள்வி - பதில்	... 66
18.	தபால் பெட்டி	... 75
19.	பொன்னித் திருநாள் (படக் காட்சிகள்)	... 81
20.	நான் ரசித்த காட்சி	... 89
21.	லேட்பாய் மாணிக்கம்	... 96
22.	வெட்டுங்கள் - வெட்டுங்கள்	... 102
23.	'பேசும் - படம்' போட்டோ ஆல்பம்	... 105
24.	தங்கம் மனசு தங்கம் (திரைக்கதை - வசனம்)	... 115

★ EIGHTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

செய்திச் சுருள்

மீண்ட ஸ்வர்க்கம்

மதுரம் பிக்சர்ஸ் முதல் தயாரிப்பான 'மீண்டஸ்வர்க்கம்' ஏப்ரல் மாதம் வெளிவரப் போகிறது. ஒரு நடன மங்கையின் வாழ்க்கையைப் பின்னணியில் கொண்ட இப்படம் நம் நாட்டின் கலைப் பெருமையை விளக்கும் உணர்ச்சி மயமான திரை ஓவியமாக இருக்கும். நடன மங்கையாக இதில் பத்மினியும், அவளது வாழ்க்கையில் திருப்பு முனைகளை ஏற்படுத்தியவராகி ஜெமினி கணேசனும் இதில் நடிக்கிறார்கள். மற்றும் தாம்பரம் லலிதா, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கும் இந்தப்படம் விஜயா — வாஹினி ஸ்டூடியோக்களில் தயாராகி வருகிறது. படத்தின் கதை, வசன கர்த்தாவான ஸ்ரீதரே இதை டைரக்ட் செய்து வருகிறார்.

'மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே' என்ற படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன்

பிறந்த நாள்

எம். என். ராஜம். சூர்யகலா, தேவிகா, மனோரமா, பிரேம்நசிர், கள்ளபார்ட் நடராஜன், வி. கே. ராமசாமி முதலிய முன்னணி நடிகர்கள் நடித்து வரும் 'பிறந்த நாள்' விரைவில் வெளிவர விருக்கிறது. சமூகத்தில் இழைக்கப்படும் கொடுமைகளைப் படம் பிடித்துக் காட்டும் இப்படத்தை ஜே.பி. ராஜ், கே. நாராயணன் இருவரும் டைரக்ட் செய்து வருகிறார்கள். விஜய் ஆர்ட்ஸ் தயாரிக்கும் படம் இது.

ஜூபிடரின் சமூகப்படம்

நீண்டகால இடைவெளிக்குப் பின் ஜூபிடர்பிக்சர்ஸார் ஒருசமூகப் படத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கே. சங்கர் டைரக்ஷனில் வளரப் போகும் இதில் ஜெமினி கணேசன் - சரோஜாதேவி இருவரும் பிரதம பாகத்தில் நடிக்கிறார்கள். சோலைமலை கதை, வசனம் எழுதும் இப்படத்தில் பாலய்யா, தங்கவேலு முதலியோரும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சங்கம் பிக்சர்ஸ்

டைரக்டர் கே. சங்கர், கதாசிரியர் வசனகர்த்தா சோலைமலை, லக்ஷ்மணன் மூவரும் ஒன்று சேர்ந்து 'சங்கம் பிக்சர்ஸ்' என்ற படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் முதன் முதலாக தயாரிக்கப் போகும் சமூகப்படத்தில் சிவாஜி கணேசன் பிரதம பாகத்தில் நடிப்பார்.

டைரக்டர் மாற்றம்

ஏவி. எம். மில் உருவாகி வரும் 'களத்தூர் கண்ணம்மா' படத்தின் டைரக்டர் மாற்றப்பட்டிருக்கிறார். டி. பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்து வந்தபடம் இது. ஜெமினி கணேசன்

சாவித்திரி காதல் ஜோடியாக நடிக்கும் இப்படம் அனுதைக் குழந்தை ஒன்றைச் சுற்றி பின்னப்பட்டு, நல்லதொரு படிப்பினையைப் புகட்டுகிறது.

கலைமணியின் படம்

கலைமணி பிக்சர்ஸ் தயாரிக்கும் முதல் சமூகப் படத்தில் ஜெமினி கணேசன் - எம். ஆர். ராதா இருவரும் ஒன்று சேர்ந்து நடிக்கப் போகிருர்கள். மக்களன்பன் கதை வசனம் எழுதியுள்ள இந்தப் படத்தில் சாவித்திரி, தேவிகா, தங்கவேலு முதலியோரும் ஒப்பந்தமாகி யிருக்கின்றனர். நாராயணன் டைரக்ட் செய்யும் இப்படம் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

பெண்குலத்தின் பெருமை

எம். எஸ். மணி டைரக்ஷனில், மகாதேவி பிக்சர்ஸ் தயாரித்து வரும் முதல் படத்திற்கு 'பெண்குலத்தின் பெருமை' என்று பெயர் தந்திருக்கிருர்கள். வங்கக் கதை யொன்றைத் தழுவி எடுக்கப்பட்டு வரும் இப்படத்தில் சாவித்திரி, கண்ணப்பா, இ. வி. சரோஜா, மனேரமா, ஏ. நாகேஸ்வரராவ், ராமராவ், எம். ஜி. சக்ரபாணி முதலியோர் நடித்து வருகிருர்கள். ஜி. ராமனுதன் இசை அமைக்கும் இப்படம் விஜயா-வாஹினி ஸ்டுடியோக்களில் தயாராகி வருகிறது.

ஆர்.ஏ.யின் அடுத்தது

'பண்ணையார் மகன்' தயாரிப்பாளர்களான ஆர். ஏ. பிக்சர்ஸார் அடுத்து ஒரு முழுநீள ஹாஸ்யப் படத்தைத்தயாரிக்கப்போகிருர்கள். இதற்கான பூஜையும் சமீபத்தில் போடப்பட்டது. மாலினி பிரதம பாகத்தில் நடிக்கும் இதை, ஆர். ஏ. பிக்சர்ஸ் உரிமையாளரான ராகவன் டைரக்ட் செய்கிருர். சோலைமலை வசனம் எழுதும் இப்படம் மெஜஸ்டிக்கில் வளரப் போகிறது.

எங்கள் செல்வி

'முரசொலி' மாறன் கதை, வசனம் எழுதிவரும் அசோசியேடட் புரொட்யூசர்ஸின் படத்திற்கு 'எங்கள் செல்வி' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. அஞ்சலிதேவி, ஏ. நகேஸ்வரராவ், பாலாஜி, பாலய்யா, குலதெய்வம் ராஜகோபால் மற்றும் பலர் நடிக்கும் இப்படம் 'லஜ்வந்தி' என்ற ஹிந்திப் படத்தைத் தழுவி எடுக்கப்பட்டு வருகிறது. யோகானந்த் இதை டைரக்ட் செய்கிருர்.

சந்திரபாபு நடிக்கிருர்

பிரகாஷ் புரொடக்ஷன்ஸார் தயாரிக்கப் போகும் துப்பறியும் படத்தில் நடிக்க சந்திரபாபு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருர். கே. எஸ். பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கு விஸ்வநாதன், ராமமூர்த்தி இசை அமைக்கிருர்கள்.

உதயணன் மீண்டும்

மகாலிங்கத்தை உதயணனுக நடிக்கவைத்து, 'உதயணன்-வாசவதத்தா' கதையைப் படமாக்க டி. என். ஆர். புரொடக்ஷன்ஸார் ஏற்பாடுகள் செய்து வருகிருர்கள். ஜி. ராமனுதன் இசை அமைக்கும் இதில் கதாநாயகியாக ஒரு பிரபல நடிகை நடிப்பார்.

பட்டிணத்தார்

பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராஜனைப் பிரதம பாகத்தில் வைத்து, 'பட்டிணத்தார்' கதையை, சங்கீத டைரக்டர் ஜி. ராமனுதன் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிருர். இதற்கான சில பாடல்களும் பதிவாக்கப்பட்டுள்ளன.

நல்லதும் கெட்டதும்

'அன்புக்கோர் அண்ணி' படத்தை அடுத்து, 'நல்லதும் கெட்டதும்' என்ற பிரபல நாடகத்தைப் படமாக்க பத்மா பிலிம்ஸார் ஏற்பாடு செய்து வருகிருர்கள்.

கெய்ரோவில் கட்டபொம்மன்

எகிப்தின் தலைநகரமான கெய்ரோவில் நடைபெறும் படவிழாவில் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' திரையிடத் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதையொட்டி படத்தயாரிப்பாளர் பி.ஆர். பந்துலு, சிவாஜி கணேசன், சித்ரா கிருஷ்ணசாமி, ஏஎல். ஸ்ரீநிவாசன் முதலியோரும் கெய்ரோ சென்றிருக்கிருர்கள்.

அமரா புரொடக்ஷன்ஸாரின் ''உத்தமி பெற்ற ரத்தினம்'' விரைவில் திரைக்கு வரப் போகிறது.

புதிய வெளியீடுகள்

அடுத்த வீட்டுப் பெண்

தயாரிப்பு: அஞ்சலி பிக்சர்ஸ்
டைரக்ஷன்: வேதாந்தம் ராகவய்யா
வசனம்: தஞ்சை ராமய்யாதாஸ்
நீளம்: 16,787 அடி
வெளியிட்ட தேதி: 12-2-60
நடிகர்கள்: டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, சாரங்கபாணி, பக்கிரிசாமி, அஞ்சலிதேவி, எம். சரோஜா.

பணக்காரப் பெண் லீலாவை அவள் பாட்டு வாத்தியார் பூவரசு காதலித்தான். கலையில் பற்றுள்ள லீலா அழகனை அடுத்த வீட்டு மன்னுருவை ஒரு சிறந்த பாடகன் என எண்ணி மனதைப் பறிகொடுத்தாள். ஆனால் உண்மை வெளிப்படவே அவள் மனம் வெறுத்து ஒரு கிழவனை மணக்கப்போகும் போது, மன்னுரு தூக்கிட்டுக் கொள்வது போல நடித்து, லீலாவின் மனதை மாற்றி அவளை மணக்கிறான்.

முழுநீள ஹாஸ்யப் படமான இதில் சிறப்பான சங்கீத அம்சம் இருக்கிறது.

விஜயபுரி வீரன்

தயாரிப்பு: ஸிட்டடெல்
டைரக்ஷன்: ஜோஸப் தளியத் ஜூனியர்
வசனம்: நாஞ்சில் நாடு ராஜப்பா
நீளம்: 16,654 அடி
வெளியிட்ட தேதி: 12-2-60
நடிகர்கள்: ஆனந்த், அசோகன், ராமராவ், ஹேமலதா, காமினி, சந்திரகாந்தா.

அலெக்ஸாண்டர் டுமாஸ் என்ற பிரபல பிரஞ்சு நாவலாசிரியரின் "மூன்று வாள் வீரர்கள்" என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள மாபெரும் கதையைத் தமிழில் பல மாறுதல்களோடு திரைப்படமாக உருவாக்கியிருக்கிறார்கள்.

அழகாபுரி மன்னன் மாள்கிறான். இளவரசி காஞ்சனாவும், சிறுவனான இளவரசன் மதிவாணனும் சர்வாதிகாரி நஞ்சப்பனின் பாதுகாப்பில் வாழ்கின்றனர். அந்த வஞ்சகனின் கொடுமைகளிலிருந்து இவர்களைக் காப்பாற்ற விஜயபுரி இளவரசன் ஆனந்தன் அழகாபுரிக்கு வருகிறான். மாயாதேவியும் சர்வாதிகாரியும் மன்னரைக் கொல்லச் செய்யும் முயற்சிகள் யாவும் ஆனந்தனால் முறியடிக்கப்படுகின்றன. கடைசியில் இளவரசனைச் சிறைப்பிடித்து, இளவரசியை மணக்க முயற்சிக்கும் நஞ்சப்பன் விஜயபுரி வீரனால் கொல்லப்படுகிறான்.

ஆரம்பக் காட்சிகளில் அன்னிய வாடை அபரிமிதமாக வீசுகிறது. காட்சிகள் விறுவிறுப்புடன் செல்வதால் சுவாரஸ்யம் குன்றாமலிருக்கிறது. எல்லா அம்சங்களிலும் விஜயபுரி வீரன் ஒரு சராசரிப்படம். புதுமுகம் ஆனந்தன் நன்றாக நடித்திருக்கிறார்.

அன்புக்கோர் அண்ணி

தயாரிப்பு: பத்மா பிலிம்ஸ்
டைரக்ஷன்: டி. ஆர். ரகுநாத்
கதை-வசனம்: மா. ரா.
நீளம்: 16,794 அடி
வெளியிட்ட தேதி: 5-2-60
நடிகர்கள்: பிரேம் நஸீர், தங்கவேலு, பாலய்யா, சகஸ்ரநாமம், பண்டரிபாய், மைனாவதி, எம். சரோஜா.

தம்பியின் வாழ்வுக்காகத் தன்னையே தியாகம் செய்து வாழ்ந்தான் சங்கர். படித்துப் பட்டம் பெற்றுப் போலீஸ் இன்ஸ்பெக்டரான தம்பி ராஜு தன் திருமணத்தன்றே கடமையை நிறைவேற்றத் தன் அண்ணனை கைதுசெய்தான். பொருபைக்காரி விஜயாவின் தூண்டுதலால் குடும்பத்தைக் கலைத்த ஹேமாவுக்கு ஒரு நாள் உண்மை தெரிகிறது. விஜயாவின் தந்தையும், சங்கர் - ராஜூ ஆகியவர்களின் மாமாவுமான

ரத்தினசாமிதான் எல்லாக் குற்றங்களுக்கும் ஆதிகாரணமானவன் என்பதை நண்பன் பேபி நிரூபிக்கிறான்.

கதைப்போக்கில் புதுமை எதுவுமேயில்லை.

தங்கம் மனசு தங்கம்

தயாரிப்பு : பிரண்ட் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : ஆர். எம். கிருஷ்ணசாமி
வசனம் : ஏ. எல். நாராயணன்
நீளம் : 16,931 அடி
வெளியிட்டதேதி : 5-2-60
நடிகர்கள் : பிரேம்நஸீர் தங்கவேலு, பிரண்ட் ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், எம். என். ராஜம், விஜயகுமாரி, சரோஜா.

படித்து டாக்டர் பட்டம் பெற்றவன் ராஜா. தன் தாயாரின் தூண்டுதலால் தன் காதலி தங்கத்தை மணக்க முடியாமல் இந்திராவை மனைவியாக அடைகிறான். புலவர் மகள் தங்கம் தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டு தன் அத்தான் ராமுவை மணக்கிறாள். வறுமை காரணமாகப் பட்டாளத்தில் சேர்ந்த ராமு கார் விபத்தில் கொல்லப்பட்டதாக அறிகிறாள் தங்கம். அனாதையான அவளை ஆதரிக்கும் டாக்டரை ஊராரும் இந்திராவும் சந்தேகிக்கின்றனர். விபத்திலிருந்து தப்பிக் குணமடைந்த ராமுவும் ஊர் திரும்பியதும் மனைவியைச் சந்தேகிக்கிறான். இதற்கிடையில் உண்மையறிந்த இந்திரா தற்கொலை செய்து கொள்கிறாள். ராமுவும் தெளிவடைகிறான்.

ஓர் அப்பாவிப்பெண் ஊராரின் சந்தேகத்துக்கு இலக்காகும் இக்கதையின் கருத்து சலிப்பூட்டுகிறது.

பாட்டாளியின் வெற்றி

தயாரிப்பு : சம்பு பிலிம்ஸ்
டைரக்ஷன் : ஏ. சுப்பாராவ்
வசனம் : ரா. வே.
நீளம் : 16,000 அடி
வெளியிட்ட தேதி : 19-2-60
நடிகர்கள் . ஏ. நாகேஸ்வரராவ், பாலய்யா, தங்கவேலு, சாவித்திரி, கிரிஜா.

ஆளவந்தார் என்ற ஆணவக்காரரிடம் வேலை செய்கிறான் பரமசிவம். அவனது கூலிக்காக இரண்டு ஏகரா நிலத்தைக் கொடுக்கிறார் பண்ணையார். அதில் கிணறு தோண்டுவதற்காக ஏற்பாடு செய்கிறான் பரமசிவம். இதனால் பண்ணையாருக்கும் பரமசிவத்துக்கும் விரோதம் வளருகிறது. முடிவில் பண்ணையாரின் துப்பாக்கிக்கு இரையாகிறான் பரமசிவம். அவன் மகள் லக்ஷ்மியை ஆளவந்தார் கெடுக்க முயற்சிக்கும்போது லக்ஷ்மியின் காதலன் கண்ணன் குறுக்கிடுகிறான். அவனிடமிருந்து தப்புவதற்காக ஓடும்போது தானே உண்டாக்கிய புதைகுழியில் விழுந்து சாகிறார் ஆளவந்தார்.

விவசாய சூழ்நிலையில் வந்து போன பல படங்களைத் தழுவியதாக இருக்கிறது இப்படக்கதை.

சிவகாமி

தயாரிப்பு : எம்.ஏ.வி. பிக்சர்ஸ்
டைரக்ஷன் : மித்ரதாஸ்
வசனம் : வேங்கடராமானுஜம்
நீளம் : 16,494 அடி
வெளியிட்ட தேதி : 19-2-60
நடிகர்கள் : பாகவதர், ஜக்கய்யா, ஜி. வரலக்ஷ்மி, ஜெயஸ்ரீ, லக்ஷ்மி பிரபா, முத்துலக்ஷ்மி.

பாகவதரும் அவர்மனைவி சிவகாமியும் அமைதியாக வாழ்கின்றனர். விருந்தில் மருந்து வைத்து பாகவதரின் விழிகளைக் குருடாக்கி விடுகிறார் ஒரு பணக்காரர். அவர் தம்பி ஒருவன் அண்ணனின் சொத்துக்கு ஆசைப்பட்டு, அன்னையற்ற அண்ணனின் குழந்தையை அப்புறப்படுத்துகிறான். அது பாகவதர் வீட்டில் வளருகிறது. திடீரென்று பாகவதர் காலமாகிறார். அவரது இன்ஷூரன்ஸ் பணத்தால் படித்துப் பெரியவனாகிறான் முத்து என்ற அந்தக் குழந்தை.

பாரஸ்ட் ஆபீசர் நடராஜனின் மகள் முத்துவைக் காதலிக்கிறாள். ஆனால் குலம்கோத்திரம் தெரியாத அவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கிறார் ஆபீசர். குழந்தை காணாததால் தேசாந்திரியான தனவந்தர் அப்போது அங்கு வரவே முத்து யாரெனத் தெரிகிறது.

கந்தர்வகான எம். கே. தியாகராஜ பாகவதர் கடைசியாகத் தோன்றும் இப்படத்தில் அவரது பாடல்களைக் கேட்கும் கடைசி சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

செய்திப் படங்கள்

உலக பிலிம் டெலிவிஷன் கவுன்சலில் இந்தியாவின் கௌரவ ஆலோசகராக டைரக்டர் சுப்ரமண்யம் தேர்ந்தெடுக்கப்பட்டதை யொட்டி தென்னிந்திய நடிகர் சங்கத்தினர் அவரைப் பாராட்டினர்.

அகில இந்திய கைத்தொழில் பிரதிநிதிகளுக்கு எம். ஜி. ஆர். ஒரு விருந்து நடத்தினர்.



போட்டோக்கள்:
டி. ஐ. சந்தாமியா



பாகப்பிரிவினை படத்தின் நூறாவது நாள் விழாவிற்குத் தலைமை வகித்த மந்திரி சுப்ரமண்யம் பரிசளித்தார்.

ஆர். ஏ. பிக்சர் ஸாரின் இரண்டாவது தயாரிப்பு ஆரம்பமாகிய அன்று எடுத்த படம்.

சென்னை வந்திருந்த ரஷ்ய ஜனாதிபதி வொரோஷிலாவிடம் நாட்டிய நடிகை அம்பிகா 'ஆட்டோகிராப்' வாங்குகிறார்.



பூரட்டாதி புரொடக்ஷன்ஸாரின் 'புரொடக்ஷன் - 1' தமிழ்ப் பட ஆரம்ப விழாவும் காரியாலய பூஜையும் மதார் சாயபு தலைமையில் நடைபெற்றன.

வின்னர் பிலிப்ஸ் ஸ்தாபனத்தை சமீபத்தில் ஜெமினி கணேசன் ஆரம்பித்து வைத்தார்.



சிவாஜி கணேசனை ஜெர்மன் ரஸிகர் ஒருவர் பேட்டி கண்டார்.

லக்ஸ் ஸ்தாபனத்தார் நடத்திய ரெயின்போ பார்ட்டியில் ஜெமினி, சாவித்திரி, பப்பி, ராஜசுலோசனா, ராஜம், சகுந்தலா முதலானோருடன், 'லின்டாஸ்' எஸ். வி. வேணுகோபாலும் மேனனும்.

சென்னையில் அமெரிக்க நடிகர்



அமெரிக்காவின் புகழ் பெற்ற நடிகர்களுள் ஒருவரான பிடரிக் மார்ச், சென்ற மாதம் சென்னைக்கு வந்திருந்தார். இந்தியாவைச் சுற்றிப் பார்க்க தன் மனைவியுடன் வந்த அவரை, டில்லி விமான நிலையத்தில் ராகினியும் பத்மினியும் அடையாளம் கண்டு கொண்டு, சென்னைக்கு வரும்படி அழைத்தனர். காசியில், சகோதரிகளின் நடனத்தைப் பார்க்க "பதினைந்தே நிமிஷங்கள்தான் இருப்பேன்" என்று சொன்ன பிடரிக் மார்ச், மூன்றுமணி நேரம் வரை இருந்து நடனம் முடிந்த பின்னரே சென்றார்.

சென்னைக்கு அவர் வந்தபோது, ஏவி. எம். ஸ்டுடியோவுக்குச் சென்று சுற்றிப் பார்த்தார். ஸ்டுடியோவில், அவரை ஸ்டுடியோவின் அதிபர் ஏவி. மெய்யப்பன் வரவேற்றார்.

சில நடனக் காட்சிகளையும் பார்த்த பிடரெக் மார்ச், 'தெய்வப் பிறவி' படப்பிடிப்பு நடை பெறுவதையும் கவனித்தார். ஸ்டுடியோவின் அமைப்பை அவர் பெரிதும் பாராட்டினார்.

ஏவி. எம்.மில் பிடரிக் வந்த சமயம் எடுத்த படங்களை இங்கே பார்க்கலாம்.

1960 பிப்ரவரி 26-ம் தேதியன்று மகத்தான ஆரம்பம்

மதராஸ் **S.I.A.A.** மைதானம் (மூர்மார்க்கெட் சமீபம்)

ஜெமினி சர்க்கஸ்

உலகத்திலேயே இரண்டாவது பெரிய காட்சி போன் : 5491

சர்க்கஸ் சரித்திரத்திலேயே இணையற்று விளங்குகிறது

அற்புதமான ரஷ்ய சர்க்கஸ் வித்தைகள் செய்யும் இந்திய இளைஞன்; 200 இந்திய, மற்றும் அயல்நாட்டு அழகிய பெண்மணிகள், ஆண்கள் உள்ள புகழ்பெற்ற கோஷ்டி; நல்ல தேர்ச்சி பெற்ற காட்டு மிருகங்கள்; மனித பீரங்கி (உலகத்தின் எட்டாவது அற்புதம்) அடங்கிய ஓர் ஒப்பற்ற காட்சி.

'கமலா' ஜெமினியின் பிரதான நடிகை 40 அடி உயரத்தில் சாய்ந்த கம்பி மேல் இரு பெண்மணிகளின் தோள்களில் சைக்கிள் நிறுத்துவது.

'ஷீலா' ஸிலோனைச் சார்ந்த பிளாஸ்டிக் பெண்மணி.

'இட்டாலியோ' 'ஜிப் ஜம்பர்', இதாலி தேசத்து அசகாய சூரன். ரஷ்யன் காமிக் மோட்டார் பவனி ஒரு நகைப்பூட்டும் காட்சி. வர்ணஜாலங்களுடன் ஜ்வலிக்கும் சர்க்கஸ் அணிவகுப்பு பிரசித்தி பெற்றது.

டிக்கட் விபரம் : பாக்ஸ் ரூ. 4/- டிரஸ் சர்கிள் ரூ. 3.25, முதல் வகுப்பு ரூ. 2.25, இரண்டாவது வகுப்பு ரூ. 1.25 காலரி ரூ. 0-65.

24-2-60 முதல் தினசரி காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை சர்க்கஸ் புக்கிங் ஆபிஸில் ரூ. 4, 3-25 & 2-25 டிக்கெட்டுகள் அட்வான்ஸ் புக்கிங் செய்யப்படும்.

தினசரி 2 காட்சிகள் 6-30 & 9-30 மணி.

சனி, ஞாயிறுகளில் 3 காட்சிகள். 3, 6-30, & 9-30 மணி.

★ ''ஏங்க, ஜோடிப் பொருத்தம் நல்லா இருக்குதா?'' - பி. எஸ். வியின் ''வீரக் கன''லில் தங்கவேலு - எம். சரோஜா.

மகாதேவி பிக்சர்ஸின் முதல் படத்தில் முக்கியமான தொரு வேடத்தை ஏற்று நடித்து வருகிறார் இளம் நடிகை மோகனா.

முன்னணிக்கு வேகமாக வந்து கொண்டிருக்கும் ஹாஸ்ய நடிகை மனேரமா மகாதேவி பிக்சர்ஸ் முதல் தயாரிப்பில் நடித்து வருகிருர்.

பார்வையைப் பார்த்தால் நல்லவராகத்
தோன்றவில்லையே! - சரஸ்வதி பிக்சர்ஸ்
''ராணி சம்யுக்தா''வில் சகஸ்ரநாமம்.

என்
'அப்பா'
நடிகர் பாலாஜி தனது நண்பர்
கலைஞர்
அசோக்குமாரைப் பற்றிக் கூறுகிறார்
அசோக்குமார்
MDR

அந்தப் பள்ளிக்கூடச் சிறுவன் அன்றைக்குத் தன் தயாரிடம் 'அடம்' பிடித்தான். "நீ தினம் இப் படித்தான் நாளைக்கு ஆகட்டும்... நாளைக்கு ஆகட்டும் என்று சொல் லிக்கிட்டே யிருக்கே. இன்னிக்கும் அதே மாதிரி சொல்லாதேம்மா. நான் இன்னிக்கு வர்றதா போட்டோ ஸ்டுடியோவிலே சொல் லிட்டு வந்துட்டேம்மா." என்று தன் தாயிடம் கெஞ்சினான்.

தாய் தன் மகனைப் பார்த்தாள்.

தன் உதவியின்றி அவனாகவே அருமையாக 'டிரஸ்' செய்து கொண்டு விட்டதைக் கண்டாள். இனி அவனுக்கு ஏமாற்றம் தருவது தவறு என்றெண்ணி போட்டோ பிடித்துக் கொள்ளப் பணம் கொடுத் தனுப்பினாள்.

கையில் காசு விழுந்தவுடன் நேரே போட்டோ ஸ்டுடியோவுக்கு ஓடினான் அச்சிறுவன். அலங்காரத் தோடு அழகாகப் படம் பிடித்துக் கொண்டான்.

இரண்டொரு தினங்கள் சென்ற தும் போட்டோ அவன் கைக்கு வந்தது. நேரே தபால் நிலையத் திற்குப் போனான். ஒரு கவர் வாங் கினான். கையிலிருந்த 'நோட்புக்'கி லிருந்து இரண்டு ஏடுகளைக் கிழித் தான்!

அன்புள்ள அசோக்குமார் அவர் களுக்கு, வணக்கம். தாங்கள் நடித்த 'சங்ராம்' என்ற ஹிந்திப் படத்தைப் பார்த்தேன். அது முதல் தங்கள் நினைவாகவே இருக்கிறேன். என் அன்பளிப்பாக என் போட்டோவை அனுப்பி யிருக்கிறேன். தயவு செய்து தங்களுடைய போட்டோ ஒன்றை கையெழுத்திட்டு எனக்கு அனுப்ப வேண்டுகிறேன். தங்கள் பதிலையும் போட்டோவையும் ஆவ லுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் விசிறி,
பாலாஜி.

ஆமாம். சாக்ஷாத் நானேதான்! மிக விரைவில் நான் எதிர்பார்த்த அந்தக் கடிதத்திற்குப் பதில் கடிதம் இன்று வரை வரவில்லை!

நரசு ஸ்டுடியோவில் நான் அப் போது, அதாவது 1954-ல் தயாரிப்பு நிர்வாகியாகப் பணியாற்றி வந் தேன். குணசித்திர நடிகரும் அனு பவ மேதையுமான திரு. நாகையா அவர்கள் என்னை அழைத்தார்.

"தம்பி! ஜூனியர் அசோக் குமார்!" என்று அழைத்தார்.

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது! யாரை நான் இதயக் கோயிலில் வைத்துப் பூஜித்தேனோ அதே பெய ரால் என்னை இன்னொரு கலாமேதை அழைத்தார்.

"ஏன் தம்பி விழிக்கிறாய்? நீ அசோக்குமார்போலவே இருக்கிறாய். அதேபோல திறமையும் புகழும் பெறுவாய். இது நிச்சயம்" என்றார். அந்த வார்த்தைகள்-வார்த்தைகளா அவை? பொன்மொழிகள் அல் லவா?—பசுமையாக என் இதயத் திலே நின்று எதிரொலித்து என்னைப் பூரிக்கச் செய்கின்றன.

அசோக்குமாரிடமிருந்து போட்டோ வரும் என்று எதிர் பார்த்தேன். ஏமாற்றம் கண்டேன். இன்று நாகையா என்னையே ஜூனி யர் அசோக்குமார் என்றுகூறி அசீர் வதிக்கிறார்.

என் மகிழ்ச்சி இரட்டிப்பாகும் செய்தி வந்தது. நரசு ஸ்டுடியோ வினர் தயாரிக்கப்போகும் 'சிதாரன் சே ஆகே' ஹிந்திப்படத்தில் அசோக் குமார் நடிப்பார்' என்பதுதான் அது. நான் எதிர்பார்த்தது நடக்கப் போகிறது.

ஆனால்...?

மீண்டும் ஏமாற்றம். அசோக் குமார் நரசுவிற்கு வந்தார். நான் அங்கிருந்து வெளியேற நேர்ந்தது!

என் ஆசைக்கனவுகள் அழிந்தன. என் மனக்கோட்டை மணல் கோட் டையாகிச் சிதறிவிட்டது. அசோக் குமாரை நான் பார்த்தேன். ஆனால்

பிரபல நடிகர் அசோக் குமாருடன் அவரது புத்தம் புதிய கிரைஸ்லர் காரில் பம்பாயில் உல்லாசமாகச் சுற்றி வருகிருர் பாலாஜி.

அறிமுகம்கூட ஏற்படாமல் போய் விட்டது.

அதிர்ஷ்ட சக்கரம் என் பக்கம் உருண்டது. ஏவி. எம். ஸ்டூடியோ வில் ஜி. கே. புரொடக்ஷன்ஸாரின், ''சகோதரி'' (அப்போது படத்திற்கு இப்பெயர் வைக்கப்பட வில்லை) படத்திற்காக ஒப்பந்தமான நான், ஏவி. எம். மின் குமாரர் சரவணன், முகைதீன் இருவருடனும் பேசிக் கொண்டிருந்தேன். ' ''பாப் பேடே'' ஹிந்திப் படத்தில் நடிப்பதற்காக அசோக்குமார் வந்திருக்கிருர். இன்று ஒரு 'பேக் புரொஜக்டின்' ஷாட்டுக்காக வந்திருக்கிருர். வாருங் கள் அவரைச் சந்திப்போம்' என் ருர் சரவணன்.

நான் சிலையாகி நின்றேன். ஆனந் தமா, வேதனையா? எனக்கே தெரியாது.

யந்திரம்போல செட்டுக்குள் நுழைந்தேன்.

சரவணன் இருவரையும் அறிமுகப் படுத்தி வைத்தார். அசோக்குமார் ஒரு கணம் என்னையே பார்த்தார். என் கோட்டுகூட நனைந்து விட்டது. 'மிக்க மகிழ்ச்சி' என்ருர் அசோக். பிறகு ஒரு சிகரெட்டை என்முன் நீட்டினுர். நடுங்கும் கரங்களுடன் அதை வாங்கிக் கொண்டேன்.

சிறிது நேரம் சென்ற பிறகே எனக்குத் தென்பு வந்தது. என்தாய் மாமன் வடநாட்டில் சுமார் இருப தாண்டுகள் பணியாற்றினுர். அவ ருக்குத் தெரியாதவர்களே அந்தப் பக்கத்தில் இருக்க முடியாது. அவ ரைப்பற்றி அசோக்குமாரிடம் கூறி னேன். அவர் மகிழ்ச்சியடைந்தார்.

நான்...?

சொர்க்கலோகத்திலே இருந்தேன்!

வீடு திரும்பிய நான் புது மனித ஞக இன்பத்தின் இருப்பிடமாக அசட்டுப் பிசட்டென்றுகூடப் பேசி விளையாடினேன். மாமா என்னை விவரம் கேட்டார். அசோக்குமா ரைச் சந்தித்தது பற்றிக் கூறினேன். மாலை விருந்துக்கு அவரை அழைக் கும்படிக் கூறினுர்.

அடடா! அவரைச் சந்தித்த மகிழ்ச்சியில் அவரை வீட்டுக்கு அழைக்கக்கூட மறந்து விட் டேனே!

மாலையில் அசோக்குமாரைச் சந்தித்து சிற்றுண்டிக்கு அழைக்கச் சென்றேன்.

'ஸ்நான அறையில் இருக்கிறார்' என்று செய்தி வந்தது. சுமார் முக்கால் மணி நேரம் காத்திருந்தேன். அவர் வந்து, மறுநாள் வருவதாகச் சொன்னார். ஏமாற்றத்துடன் வீடு திரும்பினேன்.

மறுதினம் அவர் இருப்பிடம் சென்றேன். சுமார் ஒன்றேகால்மணி நேரம் காத்திருந்தேன். குளித்து விட்டு வெளியேறி வந்த அவருக்கு நான் காத்திருந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது போலும்! ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்டார். அதிசய மனிதரான அவரை வீட்டுக்கு சிற்றுண்டி அருந்த வருமாறு பணிவுடன் கேட்டேன்.

நேரம் குறிப்பிட்டுவிட்டு மனைவி சோபாவுடன் என் வீட்டிற்கு வந்தார்! 'இன்று மற்றொரு முக்கிய வேலை இருக்கிறது. பத்து நிமிடங்கள்தான் தங்கமுடியும்' என்றார். எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமே. 'சரி' என்று சொல்லிவிட்டு கடியாரத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் அதற்குள் என் உயிர்த் தோழராகி விட்டார். பத்து நிமிடங்களாயிற்று. என் அசடு வழியும் முகத்தைப் பார்த்துவிட்டோ என்னமோ, "நான் என் புரோகிராமை கான்ஸல் செய்துவிட்டேன். இங்கேயே சிலமணி நேரம் தங்கப் போகிறேன்" என்றார். கொதிக்கும் வெய்யிலில் ஐஸ்கிரீம் சாப்பிட்டது போலிருந்தது எனக்கு! மாலை சுமார் ஏழுமணிக்கு வந்தவர் இரவு பதினேரு மணிக்குத்தான் விடை பெற்றார். பிரியா விடைகொடுத்து அனுப்பினேன். சென்னை வந்தால் இங்கு வரவேண்டும் என்று கேட்கத் தவறவில்லை நான்.

"ஹிந்தி கற்றுக்கொள் என் படங்களில் சந்தர்ப்பம் தருகிறேன்" என்று கடைசியாகக் கூறி விட்டுப் போனார். நான் ஹிந்தி ஆசிரியர் வீடு தேடிப்போனேன்! யாரிடமும் உடனடியாகப் பழகி விடக்கூடியவரல்ல அவர். அப்படிப்பட்டவர் என்னிடம் சில மணி நேரங்களில் பழகி, குடும்பத்தாருடன் ஒருவராகி விட்டார். எத்தகைய அதிசய மனிதர் அவர்.

பம்பாயிலிருந்து மாதத்திற்கு நான்கைந்து 'டிரங்க்கால்'களாவது போட்டு என்னைப்பற்றி விசாரிக்காமலிருக்கவே மாட்டார் அவர்.

அவரது மகள் பாரதிக்கு திருமணம் ஏற்பாடாகியது. நான் வரவேண்டும் என்று அழைப்பு வந்தது. சந்தர்ப்பத்தைத் தவறவிட எனக்குப் பைத்தியமா என்ன? வருவதாகச் செய்தி கொடுத்தேன்.

பம்பாயில் சென்று இறங்கிய நான் திடுக்கிட்டேன்! அந்தக் கல்யாண சந்தடியிலும் என்னை அழைத்துப் போக அவரே நேரில் விமான நிலையத்திற்கு வந்திருந்தார். "ஒருவரை வரவேற்க நான் வருவது இதுவே முதல்தடவை" என்று அவரே கூறினார்.

இந்தியாவிலேயே விலையுயர்ந்த கார்களை பெருமளவில் வைத்திருக்கும் ஒரே நடிகர் அசோக்குமார் தான். தினமொரு காராக என்னிடம் ஒப்படைத்து ஊரையெல்லாம் சுற்றிப் பார்க்கக் கட்டளையிட்டார்.

அசோக்குமார் தன் பணியாட்களிடம் பழகும் விதம் ஒவ்வொரு முதலாளியும் கவனிக்க வேண்டியது அவசியம்.

வெளியூரில் கார் டிரைவரிடமிருந்து உத்தரவு பெறும்போது அசோக்குமார் அவரை ஆலிங்கனம் செய்து ஏதாவது இனும் கொடுப்பார். அவன் தாழ்ந்தவன் என்ற எண்ணமே இல்லாத பண்பாளர் அவர். வேலை யாட்களை கோபிக்காமல் அவர் கண்டிப்பது பிரமாதம்.

சாப்பிடும்போது யார் பேசினாலும் அவரால் சகிக்க முடியாது. சிந்தனையை எங்கோ விட்டுவிட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடுவதில் பலனில்லை என்ற எண்ணம் போலும்.

உணவு பரிமாறு முன் குடிநீர் வைக்க வேண்டும். ஆனால் அவர்

பணியாள் அதைச் செய்வதில்லை. இரண்டொரு முறை அவர் கேட்டார். பணியாள் அதை கவனிக்கவில்லை. ஒரு நாள் அவனை அருகே அழைத்தார். "மேலே குடியிருக்கும் முகர்ஜியிடம் நான் கேட்டதாக ஒரு தம்ளர் குடிநீர் கேட்டு வாங்கி வா" என்றார். எங்களுக்கு விஷயம் புரியவில்லை. அவன் மன்னிப்பு கேட்டுக்கொண்டு குடிநீர் கொண்டு வந்து கொடுத்தான்.

ரொட்டி சூடாக இருந்தால்தான் சாப்பிட முடியும். அவரது பணியாள் யாவரும் உட்கார்ந்த பின் மொத்தமாக இருபது ரொட்டிகளைக் கொண்டுவந்து ஆளுக்கு இரண்டு மூன்று போட்டுவிட்டுப் போனான். அவர் சாப்பிடாமல் தன் அறைக்குப் போய் விட்டார். நானும் உடன் சென்றேன். பணியாள் வந்து, 'ஏன் சாப்பிடாமல் வந்து விட்டீர்கள்?' என்று கேட்டு நின்றான். 'நாங்கள் சாப்பிட்டு விட்டோம் மீதியை நீ சாப்பிட்டு விடு' என்றார். அவன் மன்னிப்பு கேட்டுக் கொண்டான்!

வீட்டிலே அவரைப் புரிந்து



சென்னைக்கு வந்திருந்த அசோக் குமார் "உத்தமி பெற்ற ரத்தினம்" படத்தில் நடித்துக் கொண்டிருந்த பாலாஜியைச் சந்தித்தார். இருவருக்கும் இடையே நிற்பவர் தேவர் பிலிம்ஸ் சின்னப்பதேவர்.

கொள்ள மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

அவர் மனைவி அடிக்கடி கொஞ்சம் உரத்த குரலில் யாவருக்கும் வேலையிட்டபடி தன் காரியங்களைக் கவனிப்பார். அடிக்கடி அசோக்குமார் உரக்கக் கத்தாதே என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் சுபாவம் உடனே மாறிவிடுமா?

ஒருநாள் அசோக்குமார் சாப்பிடும்போது, அவர் மனைவி சோபா இதே போல பேசிக் கொண்டே இருந்தார். உடனே அசோக்குமார் தட்டிலிருந்த கறியை தன் தலையில் வைத்துக் கொண்டார். ஒவ்வொரு தரமும் மனைவி பேசும்போது ஒவ்வொரு அயிட்டத்தைத் தலையில் வைத்துக்கொண்டார். கடைசியில் ஐஸ்கிரீமை தலையில் கொட்டிக் கொண்டு வழிய வழிய நின்றார். அவர் மனைவி அவரைக் கவனித்து விட்டு 'இது என்ன?' என்றார். "உரக்கப் பேசாதே என்றால் நீ கேட்க மாட்டேனென்கிறாய். எனக்கு கோபம் வருகிறது. தலையை குளிர்வித்துக் கோபத்தை அடக்க இப்படிச் செய்தேன்" என்றார். அது முதல் அவர் மனைவி ஈனஸ்வரத்தில் தான் பேசுகிறார்!

நான் ஒரு நாள் அவர் வீட்டில் ஸ்நான அறைக்குச் சென்றேன். அப்போது பாரதியின் திருமண சமயம். ஸ்நான அறைக்குள் அசோக்குமார் நுழைந்தார். அவர் கையில் துவாலையும் புதிய சோப்புக்கட்டியுமிருந்தன. அவற்றைக் கொடுத்து விட்டு ஒன்றும் பேசாமல் போய் விட்டார். கொதிக்கக் கொதிக்க நான் கொட்டிக் கொண்ட சுடுநீர், ஐஸ்மாதிரி சில்லிட்டது எனக்கு!

'ஹிந்தி கற்றுக் கொள்' என்று என்னிடம் கூறிய அவர் தானும் தமிழ் கற்று வருகிறார். நம் படவுலகம் பற்றிப் பெருமையாகப் பேசுகிறார் அவர்.

"பெங்களூரைப் போன்ற சிறந்த இடம் எதுவுமே இல்லை. ஆகவே தான் அதை என் வாசஸ்தலமாக ஆக்கிக் கொண்டேன்" என்றார்.

"சென்னையில் படங்கள் தயாரிக்கப்படும் முறை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இங்கே பணியாற்றுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. வருடத்திற்கு ஒரு படமாவது சென்னையில் நடிக்க எனக்கு ஆவல்" என்று கூறுகிறார் அசோக்.

நமது நக்ஷத்திரங்களைப் பற்றி அவர் நன்கறிந்திருக்கிறார். "நன்றாக நடிக்கிறாரே அவர்தானே சிவாஜி கணேசன்?", "அடிக்கடி விழா மேடைகளில் பார்க்கிறேனே சிவந்த மனிதர், அவர்தானே எம். ஜி. ராமச்சந்திரன்?", "நடிகையை மணந்துகொண்டு ஹிந்திப் படங்களில்கூட நடிக்கிறாரே, அவர்தானே ஜெமினி கணேசன்?" என்றெல்லாம் இப்படி ஒவ்வொருவரையும் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார் அவர்.

அசோக்குமார் ஒரு நடிகர் மட்டுமல்ல. சகல கலைகளிலும் அவர் பாண்டித்தியமுள்ளவர்.

ஸ்நானத் தொட்டியில் உட்கார்ந்து விட்டால் எழுந்திருக்கவே அவருக்கு மனம் வராது. அங்கேயே படுத்தபடி அருமையாகச் சித்திரம் வரைவார். செஸ் விளையாடுவது அவருக்கு மிகவும் பிரியமான பொழுதுபோக்கு.

அவருக்கு நன்றாகக் கைரேகை பார்க்கத்தெரியும். ஒருநாள் என் கையைப் பிடித்துப் பார்த்தார். 'உன் தந்தை இறந்து விட்டாரே!' என்றார். என் கண்கள் கலங்கின. அன்புடன் தடவிக்கொடுத்தார். 'இனி நான்தான் உன் தந்தை. என் மனைவிதான் உன் தாய். உனக்கு நானிருக்கிறேன். எதற்கும் கவலைப் படாதே' என்றார். அதே போல நடந்து கொண்டும் வருகிறார்.

கலைகளில் அவருக்கு மிகவும் பிரியமானது இசைக்கலை. அவர் அறியாத இசைக்கருவியே இருக்காதென்று நினைக்கிறேன். அவரே ரோஸ் கம்பெனி என்ற இசைக் கருவிகள் ஸ்தாபனத்தை நடத்தி வருகிறார். மேல்நாட்டு நடன வகைகள் முழுவதும் அவருக்குத் தெரியும். இந்த வயதிலும் தாளம் பிசகாமல் அற்புதமாக ஆடுகிறார். அவர் ஒரு தரம் ஒருவரை நண்பராக்கிக் கொள்ளுமுன் நன்கு சோதித்து விடுவார். பிறகு அவ

மணங்கமழும்
தென்றல்
வீச

அணங்கே நின் அழகைப் பேச...

பூர்த்திபெற்ற அழகியாக விளங்குவதற்கு இன்றியமையாதது நேர்த்தியான மேனியெழிலே என்ற உண்மையை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய பத்மினி பிரியதரிசினி கூறுகிறார். "அதனால்தான் அதிமென்மை வாய்ந்த லக்ஸ் மீது எனக்குப் பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டதுபோன்ற அதன் நுரை எனது சருமத்தை மழமழப்புடனும் சோபையுடனும் நிலைபெறச் செய்கிறது!" உங்கள் அழகும் உன்னத அழகாக மிளிர-உபயோகியுங்கள் லக்ஸ்!

LUX
TOILET SOAP

சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மை குலவும் அழகுசாதன சோப்.

ஜி. கே. ப்ரொடக்ஷன்ஸ்
'சகோதரி'யில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
பத்மினி பிரியதர்சினி.

ரில்லாமல் இருக்க அசோக்குமாரால் முடியாது. அவர்களிடம் அவர் பேசும்போது சிலேடையாகப் பேசுவார். ஹாஸ்யமாக ஏதாவது புதிர்களை உதிர்த்து வேடிக்கைகள் செய்வார்.

சமயத்தில் அவர் கேலி செய்து நம்மை ஆபத்திலும் சிக்க வைத்தும் விடுவார். ஒரு சமயம் அவர் வீட்டில் நானும் சாப்பிடச் சென்றிருந்தேன். அவர் உடல் நிலை காரணமாக அவர் இனிப்புப்பண்டம் சாப்பிடக்கூடாது என்பது டாக்டர்களின் கட்டளை. அவர் மனைவி, அவர் இனிப்பு சாப்பிடாதபடி பார்த்துக்கொண்டார். இது எனக்குத் தெரியாது. எனக்குப் பரிமாறுவதற்காக இனிப்புகளை மேஜையில் வைத்துவிட்டு உள்ளே சென்ருர் என் தாயார் சோபா. அசோக்குமார் அவர் போய் விட்டாரா என்று நன்ருக எட்டிப் பார்த்துவிட்டு, அந்த இனிப்பை எடுத்துத் தின்ருர். அவர் சாப்பிட்டு விட்டதும் சோபா வந்தார். கணவனைப்பற்றி நன்கு தெரியும் அவருக்கு.

''இனிப்பு எங்கே? நீங்கள் 'எடுத்துச்' சாப்பிட்டு விட்டீர்களா?'' என்ருர். இல்லை என்பது போல் தலையசைத்தார் அசோக். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''நீங்கள் சாப்பிடவில்லை என்று சத்தியம் செய்யுங்கள்'' என்று உரக்கக் கேட்டார் சோபா.

''பாலாஜி! நீதானே இனிப்பை எடுத்து என்னிடம் கொடுத்தாய்?'' என்ருர். சோபா என்னைப் பார்த்த பார்வை முக்கண்ணனின் பார்வையைவிடக் கொடியதாக இருந்தது. டாக்டர் என் நாக்கின் இடுக்கிலே தர்மாமீட்டரை வைத்திருந்தால் '106 டிகிரி ஜுரம்' என்று தான் கூறியிருப்பார். பிறகு என்னைத் தேற்றி 'அவருக்கு இனிப்பு கூடாது. நான் இல்லாதபோது நீ பார்த்துக்கொள்' என்ருர்.

அசோக்குமார் புதுமைப் பிரியரானுலும் பழமையை வெறுக்காதவர். தன் காரியதரிசி கணேஷ் சொல்வதை மீறி எதையும் செய்ய மாட்டார். அவரிடம் அவருக்கு அவ்வளவு மதிப்பு!

அவரிடம் ஒரு ஜதை பழைய பூட்ஸ் இருக்கிறது. தான் நடிக்கும் படத்தில் ஏதாவது ஒரு காட்சியிலாவது அதை அணியாமல் இருக்கவே மாட்டார். அதைப்போடாமல் தான் நடித்தால் அந்தப்படம் தோல்வியுறும் என்ற நம்பிக்கை அவருக்கு.

எந்தப்படத்தின் ஆரம்ப விபாவிலும் அவர் கலந்து கொள்ள மாட்டார். தான் கலந்து கொண்டால் அந்தப்படம் உருப்படாது என்பது அவரது நம்பிக்கை.

அவர் எப்படி முகபாவங்களை அருமையாகச் சித்தரித்து அற்புதமாக நடிக்கிருர்? நான் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். வலது கையை முகவாயில் தடவியபடி பேசாமல் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். ''ஏன் என்னையே இப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஒருவன் ஒரு பாத்திரத்தை ஏற்றுவிட்டால் அந்தப் பாத்திரமாகவே மாறுவது என்பது எளிதல்ல. நாம் சாதாரணமாக ஒவ்வொருவருடைய முகபாவத்தையும் அளந்து வைத்துக்கொண்டால் நாம் ஏற்கும் பாத்திரங்களின் — தன்மைக்கேற்ப அவற்றைப் பிரதிபலிக்க முடியும். இயற்கையாகவுள்ள எதையும் மக்கள் நன்கு ரசிப்பார்கள்.'' என்ருர். லண்டனில் அசோக்குமார் ஒரு சமயம் சார்லஸ் லாட்டன் என்ற பிரபல நடிகருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் அசோக்குமாரின் முகபாவங்களை அளந்து கொண்டிருப்பதைக்கண்டு, விவரமறிந்தாராம். அதே முறையை அவரிடமிருந்து அறிந்தார் போலும்.

தாதாமுனி (முத்தண்ணுச்சி என்கிருேமே அதுபோன்ற சொல் இது) அசோக்குமார் ஒரு பெரிய கலாமேதை. அவரிடம் பழகும் பாக்கியம் பெற்றவர்களில் நான் ஒருவன். இளம் பருவத்தில் நான் கண்ட ஆசைக்கனவுகளைப் பலிக்கச் செய்த தாதாமுனி எனக்குத் தந்தையாக இருந்து, என்வாழ்வு சிறப்படையப் பாடுபடுகிருர்.

எழுதியவர் :

எஸ். வி. சம்பத்குமார்.

திரையுலகில் நான் மறக்க முடியாதவர்

அணுகுண்டை உலகுக்கு அறிமுகப்படுத்திய இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமாகியிருந்த சமயம் அது.

ஜெர்மெனியின் ஹிட்லரும், இதாலியின் முஸோலினியும், இங்கிலாந்தின் வின்ஸ்டன் சர்ச்சிலும், அமெரிக்காவின் ரூஸ்வெல்டும் அனைவரது நாவிலும் அடிபட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

அதாவது 1939-ம் ஆண்டின் தொடக்கம்.

இனம் தெரியாத பீதியும் தேவையற்ற பரபரப்பும் மக்களிடையே குடி கொண்டிருந்ததைப் போலவே என் மனதிலும் ஏதோ ஒரு பரபரப்பு நிரவி நின்று கொண்டிருந்தது.

'தியாகபூமி' படத்தில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருந்த நான், அப்போது சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தில், பெங்களூர் செல்லும் ரயில் வண்டி நின்றிருந்த பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

என் கண்களுக்கு முன்னால் ஒன்றையொன்று கடந்து சென்று கொண்டிருந்த ரயில் தண்டவாளங்கள் எல்லை காண முடியாமல் நீண்டு சென்று கொண்டிருந்தன. ஆம்; தண்டவாளங்கள் ஒன்றையொன்று கடக்கும்போது, போகும் பாதையையும் சந்திக்கப் போகும் மக்களையும்கூட அடியோடு மாற்றி விடுகின்றன அல்லவா?

கே. ஜெ. மகாதேவன்





இந்தியாவின் முடிசூடா மன்னன் நேருஜியுடன் தென் இந்தியப் பட உலகின் முடிசூடா மன்னன் வாஸன் இந்தச் சந்திப்பு பிலிம் விவாத அரங்கின்போது நடந்தது. ஜெமினி வர்ணப்பட லாபரடரி ஆரம்ப விழாவிற்குத் தலைமை வகித்த திரு. காமராஜருடன் - கீழே.

மேலே: மத்திய மந்திரி கேஸ்கருக்கு லாப ரடரியைச் சுற்றிக் காட்டுகிறார்.
கீழே: டில்லி தமிழ்ச்சங்கம் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கிறார் வாஸன்.

இன்று நான் சந்திக்கப்போகும் மனிதர்-ஆம், என் வாழ்க்கையை மாற்றி, அமைத்துவிடப் போகிறவர்-என்று நான் அன்று கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை.

எதையெதை யெல்லாமோ பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த என்னை ''மகாதேவா! இங்கே வா'' என்ற குரல் இந்த உலகுக்கு இழுத்து வந்தது.

தியாகபூமியின் தயாரிப்பாளரும் டைரக்டருமான திரு.கே. சுப்ரமண்யம் குரல்வந்த திசையில் நின்று கொண்டிருந்தார். அவருடன் சாதாரணமான தோற்றத்தில் - வெள்ளை வேட்டியும் சட்டையும் அணிந்தவராக, நடுத்தரமான உயரத்தில் ஒருவர் நின்றிருந்தார். நான் சுப்ரமண்யத்தின் அருகில் வந்து நின்றேன்.

'இவன்தான் மகாதேவன்'' என்று என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினர் சுப்ரமண்யம். ''இவர் தான் மிஸ்டர் வாசன்'' என்று அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். என்னுள்ளத்தில் எழுந்த வியப்பையும் ஏமாற்றத்தையும் உடனடியாக சில வினடிகள் வரை அடக்கவே முடியவில்லை.

''படவுலகில் நான் சாந்தாராமை என் குருவாகப் போற்றுகிறேன்'' - என்றார் வாஸன். இங்கே குருவுடன் விவாதிக்கிறார்.

திரு. வாசன் அவர்களைப்பற்றி நான் அவரைச் சந்திப்பதற்கு முன் பாக நிறையக் கேள்விப்பட்டிருந் தேன். காலஞ் சென்ற எனது தந் தையின் நெருங்கிய நண்பர் திரு. வாசன். என் தந்தையும் அடிக்கடி அவரைப்பற்றிக் குறிப்பிடுவ துண்டு.

நான் கேள்விப்பட்டதை யெல் லாம் கொண்டு வாசனை கற்பனை செய்திருந்த உருவத்திற்கு நேர் மாருக அவர் இருந்தபோது என் வியப்பை அடக்க முடியவில்லை. டாம்பீகமான பழக்க வழக்கங்க ளோடு, பகட்டான முறையில் வாசன் இருப்பார் என்று என் மனக்கண் கண்டிருந்ததற்கு எதி ரிடையாக எளிமையே உருவாக, அடக்கமே குடிகொண்டிருந்த வாச னைக் கண்டபோது ஏமாற்றம்தான் எனக்குக் கிடைத்தது.

வாசன் அவர்கள் என்னைப் பற்றி சுப்ரமண்யத்திடம் சாரிவித் தார். பிறகு என் தந்தையைப் பற்றி என்னிடம் விசாரித்தார்.

இதற்குள்ளாக ரயில் கிளம்பும் நேரம் வந்து விட்டது.

புன்னகையுடன் என் முதுகைத் தட்டிக் கொடுத்து விடைபெற்றுக் கொண்டார் அவர்.

இதுதான் நான் அவரை முதன் முதலில் சந்தித்த விதம். இச் சந்திப்பு நடைபெற்ற ஐந்து வரு ஷங்களுக்குப் பிறகு, அதாவது 1944-ல் நான் கொடைக்கானலுக் குப் போயிருந்தேன். விடுமுறைக் காக வாசனும் அங்கே வந்திருந் தார். அப்போது அவருடன் நான் சற்று நெருங்கிப் பழகமுடிந்தது.

காலை மாலை நேரங்களில் நாங்கள் இருவரும் சேர்ந்து உலாவப்போ வோம். அப்போதெல்லாம் அவர் சொன்ன விஷயங்கள் என் மனதில் அவரைப்பற்றிய மதிப்பை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. நான் அவருடன் உலாவிவிட்டுத் திரும்பி வரும் ஒவ்வொரு சமயமும் என் மனதில் ஏதாவது ஒரு புதிய கருத்து முளைத்திருக்கும். முந்திய தினம் நான் இருந்ததைவிட, இன்று கொஞ்சம் கூடவே படித்தவனுக இருப்பேன். இது அவருடன் நான் பழகியதால் கிடைத்த பரிசு என் றும் கூறுவேன்.

இந்த எண்ணம் என் மனதில் படரப்படர வாசனுடன் சேர்ந்து இன்னும் நெருங்கிப்பழக வேண்டும்; அவருடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற ஆசை என் மனத்துள் துளிர்த்தது. பேராசைதான் இது! இருந்தாலும் இதை என்னுல் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

ஒருநாள் வழக்கம்போல் உலாவச் சென்றபோது என்னுடைய ஆசையை அவரிடம் வெளியிட் டேன்.

''நான் சென்னை சென்றதும் அங் குள்ள எனது ஸ்டுடியோ அதிகாரி களைக் கலந்தாலோசித்துச் சொல் கிறேன்'' என்ருர் அவர்.

ஜெமினி ஸ்தாபனத்தின் உரிமை யாளர் அவர். எனது தந்தை அவ ருக்கு நெருங்கிய நண்பர். அவர் நினைத்தால் எனக்கு உடனே வேலை கொடுக்கவும் முடியும். ஆனுல் அவர் அவ்வாறு செய்யவில்லை.

இந்தப் பதிலிலிருந்து நான் வாசன் தன் சிப்பந்திகளை எவ்வாறு நடத்துகிருர்; எவ்வளவு மதிப்புக் கொடுத்து வைத்திருக்கிருர் என் பதை அறிய முடிந்தது.

அதன்படியே சென்னை சென்ற தும் காலஞ்சென்ற திரு. கே. ராம் னுக் மற்றுமுள்ளவர்களுடன் ஆலோசனை செய்து, அவர்களது அபிப்பிராயத்தையும் கேட்டறிந்து, என்னை ஒரு உதவி டைரக்டராகச் சேர்ந்துக் கொண்டார்.

ஜெமினியில் அன்று நான் சேர்ந் ததிலிருந்து, நான் அங்கிருந்து விலகியது வரை, அவருடன் நெருங் கிப்பழகும் பல சந்தர்ப்பங்களும், அவரைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து பார்க்கவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

வாசன் ஒரு தொழிலாளி; வாசன் ஒரு பெருந்தகை; வாசன் பண்புள்ள

வர்; வாசன் துணிச்சல்காரர்; வாசன்பெரியகொடையாளி; வாசன் சாமர்த்தியம் மிக்கவர்; வாசன் தமிழ் அபிமானம் மிக்கவர்; வாசன் ஒரு சிறந்த ரசிகர்; வாசன் ஒரு பெரிய கலைஞர்; வாசன் சிறந்த டைரக்டர்; வாசன் ஒரு வியாபாரி என்பதையெல்லாம் என் ஆராய்ச்சியின் முடிவில் கண்டு கொண்டேன்.

விரிந்து பரந்து கிடக்கும் ஜெமினி ஸ்டுடியோவின் 'குளுகுளு' அறையில் ஆபீஸ் பைல்களைப் புரட்டிக் கையெழுத்திடும் சமயம் மட்டும்



கட்டுரை ஆசிரியர்
கே. ஜெ. மகாதேவன்

தான் அவர் முதலாளி; அந்த அறையை விட்டு ஸெட்டுக்கு வந்து விட்டால் வாசன் தொழிலாளிதான்; ஸெட்டிலே அவர் உட்கார ஆசனத்தையும் எதிர்பார்க்க மாட்டார்; ஏன் எந்த சௌகரியத்தையுமே விரும்பமாட்டார்! எனக்குத் தெரிந்து அவர் லைட் தூக்கி நிறுத்தும் பையனுடைக்கூட மாறிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. படப்பிடிப்பு முடிந்து சாப்பிட அமரும் போதும் அவர் முதலாளி தோரணையைத் தூக்கி எறிந்து விட்டு, தொழிலாளர்களுக்கு மத்தியில் 'ஜம்' என்று உட்கார்ந்து விடுவார்!

எந்த விஷயத்தையும் தீர ஆலோசிப்பது என்பது அவருடன் பிறந்த ஒரு குணம். நாங்கள் கதை இலாகாவில் எந்தச் சிறு விஷயத்தையும் நன்கு விவாதிக்காமல் படப்பிடிப்புக்குச் செல்லமாட்டோம். 'ஸெட்'டில் நுழைந்து விட்டால் படப்பிடிப்புதான் நடக்குமே தவிர, விவாதம் நடக்காது. விவாதத்தில் அவர் எல்லோரையும் அபிப்பிராயம் சொல்லும்படிக் கேட்பார்; அது எப்படி யிருந்தாலும் யார் சொன்னாலும் தீவிரமாகக் கேட்பார். முடிவில் 'மெஜாரிடி' எப்படி யிருக்கிறதோ அப்படியே நடப்பார். இதற்காக தான் முடிவு செய்திருந்த கருத்தை மாற்றிக் கொள்ளவும் தயங்கமாட்டார்; அதே சமயம் சொல்லப்பட்ட கருத்து நன்றாக இருந்தால் அதைப் பாராட்டாமல் இருக்கவும் மாட்டார்.

ஒரு சமயம் இம்மாதிரி விவாதத்தில் எனக்கும் அவருக்கும் விவாதம் முற்றி விட்டது. விவாதத்தில் வீசப்பட்ட சொற்களும் ரொம்பவும் காரமாகி விட்டன.

வாசன் திடீரென்று எழுந்து போய் விட்டார். நாங்களும் எங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி விட்டோம்.

ரொம்பவும் காரசாரமாக முடிந்து விட்ட அந்த விவாதத்தைப்பற்றி என் மனம் மிகவும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது. "அவர் முதலாளி! நான்தான் சற்று விட்டுக் கொடுத்துப் பேசியிருக்க வேண்டும்" என்றெல்லாம் என் சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அப்போது திடீரென்று வாசனிடமிருந்து எனக்கு ஒரு குறிப்பு வந்தது. அதை அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தேன்.

"என்னதான் இருந்தாலும் விவாதத்தில் நான் நிதானத்தை இழந்திருக்கக் கூடாது. அதற்காக வருத்தப் படுகிறேன். என்னை மன்னிக்கவும்" என்று அதில் எழுதியிருந்தது!



பத்திராதிபர், படமுதலாளி எஸ். எஸ். வாசன் டைரக்டராக மாறியது "சந்திரலேகா"வில். இங்கே அவர் சர்க்கஸ் காட்சி ஒன்றை டைரக்ட் செய்கிறார்.

எத்தகைய பெருந்தகையாளர் அவர்; பண்பு மிக்கவர் அவர்!

படப்பிடிப்பு முடிந்ததும் நாங்கள் எல்லோரும் ஒன்றாக உணவு அருந்த உட்காருவோம். அப்போது அவர் எடுத்து வீசும் ஹாஸ்ய வெடிகள் அனைவரையும் சிரிப்பி லாழ்த்தி விடும். நல்ல ரசிகர் அவர் என்பதை இவை எடுத்துக் காட்டிவிடும். சில சமயம் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட ரசமான சம்பவங்களையும் சொல்லுவார். இத்தகைய சம்பவங்கள் வாசனின் பல்வேறு குணாதிசயங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாக மட்டுமல்லாமல், அவர் எத்தகைய லக்ஷிய புருஷர் என்பதையும் எடுத்துக் காட்டும்.

அவர் ஒரு பிடிவாதக்காரர்; எடுத்ததைச் செய்து முடிக்க வேண்டும் என்ற திடசித்தம் படைத்தவர்; அவர் செய்வது நியாயம் என்று தெரிந்தால்கூடுமான வரை அது 'சரி' என்று நிரூபித்துக் காட்டவே அவர் விரும்புவார்.

ஒரு சமயம் அவர் பம்பாயில் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.

அப்போதெல்லாம் அவர் ஒரு தீவிர குதிரைப் பந்தய அபிமானி! அவர் கலக்காத ரேஸ் கிடையாது; இன்றும் அவர் சென்னை குதிரைப் பந்தயக் கிளப்பில் ஒரு முக்கிய உறுப்பினராக இருக்கிறார். நான் முதலில் அவரை ரயிலடியில் சந்திக்கச் சென்ற போதும் அவர் இதற்குத்தான் சென்றார். விக்டர் சசூன் என்பவருக்குச் சொந்தமான "ஸ்கூல் பார் ஸ்காண்டல்" என்ற குதிரை அன்று பந்தயத்தில் கலந்து கொண்டிருந்தது. வாசன் அதன் மீது ஏராளமாகப் பணத்தைக் கட்டியிருந்தார். பலர் எதிர்பார்த்தபடி அந்தக் குதிரை வெற்றி பெறவேயில்லை! கையிலிருந்த மொத்தப் பணத்தையும் இழந்துவிட்ட வாசனைக் கண்டு, "தொலைந்தார் அவர்! இனி இந்தப் பக்கமே திரும்ப மாட்டார்" என்று பலர் பேசிக் கொண்டார்கள். 'ஸ்கூல் பார் ஸ்காண்டல்' என்ற அந்தக் குதிரை என்றுமே தோற்காதது. எனவே குறிப்பாக அன்று அக்குதிரை தோல்வியடைந்ததுபற்றி வாசனுக்கு சந்தேகம் உண்டாயிற்று. முன் கூட்டி செய்யப்பட்டது இது என்பது அவரது யூகம்! எனவே அந்தக் குதிரை மிக்க திறமையானது என்பதை நிரூபிக்கஅவர்விரும்பினார். அதனால் தோல்வியை அடைந்த வாசன் சிரித்துக் கொண்டே சென்னைக்கு ரயிலேறினார். தன்னிடமிருந்த உடமைகள் அனைத்தையும் விற்று பணத்தை எடுத்துக் கொண்டு, பம்பாய்க்கு வந்தார். தான் தோல்வியடையக் காரணமாயிருந்த குதிரையின் சொந்தக்காரரான விக்டரைச் சந்தித்து, அந்தக் குதிரையை விலைக்கு வாங்க விரும்புவதாகக் கூறினார்.

விக்டர் சிரித்தார். "உங்களுக்குத் தோல்வியை அளித்த அதையா விலைக்குக் கேட்கிறீர்கள்?" என்ருர்.

வாசன் தொடர்ந்து நிர்ப்பந்திக்கவே, "நீங்களே ஒரு தொகை சொல்லுங்கள். எனக்கு திருப்தியாக அது இருக்குமானுல் குதிரையைக் கொடுத்து விடுகிறேன்" என்ருர் அவர்.

வாஸன் ஒரு பெருந் தொகையைச் சொன்ருர். அவருக்கு எப்படியாவது அந்தக் குதிரையை வாங்கி விட வேண்டும் என்ற ஆசை! குதிரைச் சொந்தக்காரரும் அதற்குச் சம்மதிக்கவே, குதிரையை ஓட்டிக் கொண்டு பூனுவுக்கு வந்தார் அவர்.

பூனுவில் அவர் அந்தக் குதிரைக்கும், சவாரி செய்பவருக்கும் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார். "முதலில் எப்போதும் பின்னுலேயே வா! அதற்குப் பதிலாக முன்னுல் வந்தால் மற்ற குதிரைக்காரர்கள் உன்னைப் பின்னுல் தள்ள முயற்சிப்பார்கள். அதேபோல் பந்தய மைதானத்தில் உள் பக்கம் சுற்றி வராதே. அப்படி வந்தால் மற்ற குதிரைக்காரர்கள் உன்னை வெளியே தள்ளி விடுவார்கள். அதனுல் முதலில் வெளியிலேயே சுற்றிவா. கடைசியில் உன் பலத்தையெல்லாம் காட்டு" என்றெல்லாம் சவாரி செய்பவருக்கு அறிவுரைகள் தந்து பம்பாய்க்கு அழைத்து வந்தார். அங்கு தனது குதிரையைப் பந்தயத்தில் கலந்து கொள்ளவும் ஏற்பாடு செய்தார்.

தனக்குத் தோல்வியைத் தந்த குதிரையை வாசன் வாங்கியிருக்கிருர் என்றும், அதைப் பந்தயத்தில் கலந்து கொள்ளச் செய்திருக்கிருர் என்பதையும் அறிந்த பலர் அவரை மறைமுகமாக நையாண்டி செய்தார்கள்.

ஆனுல் பந்தயத்தில் முதலாவதாக வந்து வெற்றிபெற்ற அந்தக் குதிரை வாசனுக்கு லக்ஷக் கணக்கில் அன்று பணத்தை வாரிக் கொடுத்தது! நையாண்டி செய்தவர்கள் வாசனை அதிசயத்தோடு பார்த்தார்கள்.

"ஒரு விஷயத்தில் நம்பிக்கை வைத்து விட்டால் அதை மாற்ற மாட்டார்? அதை வெற்றிகரமாக முடித்தே வைப்பார்" என்பதற்கு இந்த உதாரணமே போதும்!

நான் ஜெமினியில் சேர்ந்த சமய 'சந்திரலேகா' படத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. வாசன் என்னை அழைத்து, "சசாங்கன் வேஷத்தை உனக்குத் தரலாமென்றிருக்கிறேன். நடிக்கச் சம்மதமா?" என்று கேட்டார்.

"சம்மதம்தான்!" என்று பதில் தெரிவித்து விட்டு வந்தேன்.

இது சம்பந்தமாக அவர் மற்றவர்களிடமும் அபிப்பிராயம் கேட்டிருக்கிருர். அவர்கள் ரஞ்சனைப் போடலாம் என்று அவருக்கு யோசனை தெரிவித்தார்கள்.

அவர் மீண்டும் என்னை அழைத்தார். 'ரஞ்சனைப் போடலாம் என்று சொல்கிருர்கள். நீ என்ன சொல்கிருய்?" என்று என்னிடம் கேட்டார்.

"அப்படியே செய்யலாம்" என்று பதில் தெரிவித்தேன்.

"நான் அதைமட்டும்கேட்கவில்லை. உன்னுடைய அனுமதி எனக்குத் தேவை!" என்ருர் அவர்.

அவர் முதலாளி; நான் அவரிடம் பணியாற்றும் தொழிலாளி! என் அனுமதி அவருக்கு எதற்கு? நான் மௌனமாக நின்றேன்.

"சசாங்கன் வேஷத்தில் நடிக்கச் சம்மதமா என்று கேட்டபோது, நீ சரி என்று சொல்லி விட்டாய். நீயே தான் அந்த வேஷத்தில் நடிக்க வேண்டுமென்ருல், உன்னை மீறி நான் எதையும் செய்யத்தயாராக இல்லை. நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?" என்ருர்.

"நீங்கள் ரஞ்சனையே போடுங்கள்" என்றேன். நான் பதில் தெரிவித்த பின்னரே அவர் ரஞ்சனை அழைத்துப் பேசினுர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்காவிட்டால் வாசனுக்கு தூக்கமே வராது. அதே சமயம் ஒரு வேலையில் அவர் ஈடுபட்டு விட்டால், அதில் அவர் முழுக்கவனத்தையும் செலுத்தி அப்படியே லயித்து விடுவார். இம்மாதிரி தன் வேலையில் கவனம் செலுத்தி

லயித்துவிடும் ஒருவரை இன்று வரை நான் பார்த்ததே கிடையாது! எந்த வேலை நடைபெற்றுகிற்பதையும் விரும்பாதவர் அவர்.

சந்திரலேகா படம் தயாராகி வந்தபோது ஒரு சம்பவம் நடைபெற்றது. அந்தப் படத்தை 'மங்கம்மா சபதம்' புகழ் ஆசார்யா முதலில் டைரக்ட் செய்து வந்தார். அந்தப் படத்திற்காக நூற்றுக்கணக்கான குதிரைகளுடன், வெளிப்புறக் காட்சி படமாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திடீரென அப்போது ஆசார்யா விலகிவிட்டார். ஏற்பாடு செய்யப்பட்டிருந்த படப்பிடிப்பு எப்படி நடக்கப்போகிறது? வாசன் ரத்து செய்து விடுவாரோ என்று பலரும் எண்ணினர்கள். நானும் திகைத்து நின்றேன். ஆனல் அதற்கு நேர்மாருகவே விஷயங்கள் நடந்தன.

வாசனே நேரில் சென்று, அந்தப் படப்பிடிப்பை முடித்து விட்டார்! வாசன் டைரக்டராகக் காரணமாயிருந்ததும் அந்தச் சம்பவம் தான். அன்றுமுதல் அவரே 'சந்திரலேகா'வை டைரக்ட் செய்ய ஆரம்பித்தார். ஒளவையாருக்காக, கேரளத்திலுள்ள வயநாடு காடுகளில் யானைக்காட்சிகளை படம் பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது, காய்ச்சலிலும் வந்து அவர் கலந்துகொண்டதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தன்னல் வேலைகள் தாமதப்படுவதையும் விரும்பாதவர் அவர். ஸ்டூடியோவிலேயே முதன் முதலில் அதிகாலையிலேயே வேலைக்கு வந்து விடும் தொழிலாளி அவர்!

தமிழ்ப் படங்களுக்கு பதினேராயிரம் அடி போதாது என்று அவர் கடைசி வரை வாதாடி வெற்றி பெற்றதை யாரும் மறுக்கமுடியாது. இதற்காக எதிராளியை மதிக்காமலும் இருக்கமாட்டார். குறிப்பிட்ட இந்த 11,000 அடிப் போராட்டத்தில் ஜெமினியில் பணியாற்றி வந்த மேதை கே. ராம்னுத் வாசனுக்கு மாருன கருத்தை உடையவர்! அவர் பதினேராயிரம் அடி போதும் என்று வலியுறுத்தினுலும், வாசன் அவரது கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காமல் இருந்தது கிடையாது. ராம்னுத்திடம் உள்ள மதிப்பும் அவருக்குக் குறையவில்லை.

தன்பொருட்டு எதிராளி நஷ்டப்படுவதையும் அனுமதிப்பதில்லை அவர். பம்பாயில் 'மங்களா' ஹிந்திப் படத்திற்குத் தடை விதிக்கப்பட்டபோது, அந்தப் படத்தை விநியோகத்திற்கு தன்னிடமிருந்து வாங்கியிருந்த ஸ்வஸ்திக் பிக்சர்ஸாரிடமிருந்து, அதை மீண்டும் விலைக்கு வாங்கி, பம்பாய் சர்க்காரின் மீதே வழக்குப் போட்டு, தடையை உடைத்தெரியும்படிச் செய்தவரும் அவர்தான்!

வாசன் செய்யும் ஒவ்வொரு காரியமும் ஒரு புது இலக்கணத்திற்கு விளக்கமாக இருக்க முடியும். திரைப்பட உலகில் அவர் செய்த சாதனைகள் கணக்கிலடங்காதவை. அவரைப்போல் செய்யக்கூடியவர்களும் யாரும் இல்லை என்பதைத் திண்ணமாகக் கூறலாம்.

'ஒளவையார்' படத்தின் வெளியீட்டுக்குப்பின், சென்னை பொது மக்கள் அண்ணுமலை மன்றத்தில் அவருக்கு ஒரு பாராட்டளித்தார்கள். ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் தலைமை வகித்த அவ்விழாவில், காலஞ்சென்ற பேராசிரியர் 'கல்கி'யும் கலந்து கொண்டார். வாசனுடன் ஆரம்ப நாட்களிலிருந்து நெருங்கிப் பழகிய அவர் பேசும்போது, சபையோரிடம் திகைப்பை ஏற்படுத்தி "ஸ்ரீமான் வாஸன் அவர்களை எனக்கு நன்ருகத் தெரியாது!" என்று சொல்லி சிறிது நேரம் நிறுத்திவிட்டு, "ஆமாம்! ஒளவையார் போன்ற இத்தகைய பிரம்மாண்ட கலாச்சாரப் படங்களை எடுக்கும் ஆற்றல் மிக்கவர் அவர் என்பதை இன்று தான் கண்டு கொண்டேன். வாசன் எவ்வளவு பெரிய செயல் வீரர் என்பதை இன்றுதான் அறிந்தேன்" என்று சொன்னுர்.

வாசனுடன் நான் கல்கியைப் போல் நீண்ட காலம் பழகவில்லை. எனவே வாசனிடம் கற்க வேண்டிய பாடங்கள் இன்னும் பல இருக்கின்றன. என்னைப் பொறுத்த வரை முடிவு காண முடியாத தொடுவானமாகவே இவர் இருக்கிருர் என்பதை நிச்சயமாகச் சொல்வேன். ★

குணசித்திர நடிகர்
ஜி.வி. சர்மா

இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் நான் சொல்லும் இந்த ஜோசியரிடம் சென்றால் திருப்தி யடைந்து விடுவார்கள்.

அந்த இளைஞர் ஜோசியத்தில் மிகவும் நம்பிக்கையுள்ளவர். அந்த இளம் வயதிலே அவர் பார்க்காத ஜாதகம் கிடையாது; ஆராயாத கிரகநிலை கிடையாது; படிக்காத ஜோசிய புத்தகங்கள் கிடையாது; இந்த வெறி ஏன் அவருக்கு ஏற்பட்டது? இருபத்து ஏழு நக்ஷத்திரங்களும் ஒன்பது கிரகங்களும் என்ன செய்தன?

வளமான குடும்பத்தில் பிறந்தார்; படித்தார்; பணியாற்றினார்; சொந்தமாகத் தொழில் செய்தார். ஆனால் அவருக்கு எல்லாத் துறையிலும் தோல்வி. ஜோசியம் கேட்டு ஜாதகம் பார்த்துப் பார்த்துக் கடைசியில் அவர் அக்கலையிலே மிகச் சிறந்த பயிற்சி பெற்று விட்டார். அதன் பலன்? ''உன் வாழ்வில் இன்னும் இருபத்திரண்டு ஆண்டுகள் நீ கஷ்டப்படவேண்டும். அதுவரை நீ பொறுமை காட்டித்தான் ஆக வேண்டும்'' என்று அவரது ஜோசியக் குறிப்புகள் அவருக்குக் கூறாமல் கூறி வேதனைப்படுத்தின.

'கிரகங்களாவது நக்ஷத்திரமாவது? அதற்கும் நீ குறிப்பிட வந்த விஷயத்திற்கும் என்ன சம்பந்த'மென்று கேட்கலாம். நாம் புகழேணியில் இருக்கும் கலைஞரை நக்ஷத்திரம் என்றுதானே கூறுகிறோம்? ஆகவே இது முற்றிலும் பிரிய முடியாத—பிரிக்க முடியாத விஷயமாகும்.

இந்த இளம் ஜோசியர் அன்று தனியாகத் தொழில் செய்யும் முயற்சியைக் கைவிட்டுக் கலைத் துறையில் புகுந்து பணியாற்ற முற்பட்டார். தான் ஏற்ற பாத்திரங்களில், சில நிமிடங்கள் வந்தாலும் படநெடுகிலும் வந்தாலும், சபாஷ் வாங்காமலிருந்ததில்லை அவர். ஆனாலும் அவர் தகுந்த புகழை அடையவில்லை. 'காரணம் என் கிரகங்கள்' என்கிறார் அவர். 'தகுந்த விளம்பரம் இல்லாததே' என்றேன் நான். திறமைசாலிகளைத் தேடியெடுத்து ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்துவது ''பேசும் பட''த்தின் நிரந்தரமான கொள்கை. அவர் அபிப்பிராயப்படி அவருக்கு சாதகமாக கிரகங்கள் இருக்கின்றன.

ஜி. வி. சர்மா.

ஆமாம், நான் இதுவரை குறிப்பிட்டது இவரைத்தான்.

ஹைதராபாத் அய்யாசாமி!

காலஞ்சென்ற கலாமேதை கே. ராம்னாத் தயாரித்த 'விடுதலை' படத்திலே ஹைதராபாத் அய்யாசாமியாகத் தோன்றிய சர்மா, அற்புதம் என்ற ஒரு முகமான பாராட்டைத்தான் பெற்றார். அய்யாசாமி பாத்திரம் ஒரு வில்லனின் பாத்திரம். வில்லன் என்பதற்காக சர்மா கண்ணை முழிக்கவில்லை. பயங்கரமாக 'ஹா...ஹா' என்று சிரிக்கவில்லை. ஆனால் அவர் திரையிலே தோன்றியபோது பயத்தால் ரத்தம் உறைந்துவிட்டது. வியர்வை

வாயால் உடல் நனைந்தது. என்ன நடக்குமோ என்ற பீதி உள்ளத்தைப் பிழிந்தெடுத்தது. நடிப்பு என்பதற்காக அங்க அசைவுகளை அதிகமாக்கி, உரக்கக் கத்தி இப்படியெல்லாம் செய்யாமல், சாதாரணமாக நாம் சமூகத்தில் பார்க்கும் நயவஞ்சகர்களின் தன்மையை அப்படியே பிரதிபலித்தார் சர்மா.



ரோஹிணியின் 'ஏழையின் ஆஸ்தி' தமிழ்ப் படத்தில் இப்படித் தோன்றுகிறார் சர்மா.

சர்மா ஒரு திடீர் நக்ஷத்திரமல்ல. 1937-லிருந்து படவுலகில் பணியாற்றி வருகிறார். திரையுலகின் மும்மூர்த்திகளாக அப்போது விளங்கிவந்த கே. ராம்னாத், சேகர், முருகதாஸா மூவரும் 1937-ல் சென்னை கிரீன்வேஸ் ரோடில் சந்திரகலா ஸ்டுடியோஸ் என்ற பெயரில் ஒரு ஸ்டுடியோவை நிர்மாணிக்க முயன்று வந்தனர். இதற்கு பங்கு சேர்க்க பி. எஸ். மணி என்பவர் அவர்கள் சார்பில் தென் இந்திய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அப்போது சர்மாவின் நண்ப

'விடுதலை' படத்தில் ஹைதராபாத் அய்யாசாமியாக பீர்முகம்மதுவுடன்.



ஸாரதி பிலிம்ஸ் 'காலம் மாறிப்போச்சு' தமிழ்ப் படத்தில் இரு குணசித்திர நடிகர்கள்.

றும் செல்வந்தருமான மே. வ. தியாகராஜன் செட்டியார் சொந்தமாக தென்னிந்தியாவில் ஸ்டுடியோ நிர்மாணித்து படத் தயாரிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தார். மணி அவரைச் சந்தித்த போது அவர் சர்மாவைக் கலந்தார். "நாங்களே ஸ்டுடியோ நிர்மாணிப்பதாக இருக்கிறோம். அவர்கள் உழைப்புக் கூட்டாளிகளாகச் சேரட்டுமே!" என்றார் செட்டியார்.

இதன்பின் ராம்னாத், சேகர், முருகதாஸா மூவரும் சென்று இந்த ஏற்பாடுகளுக்குச் சம்மதம் தெரிவித்தனர். சந்திரகலா என்ற பெயரை மாற்றி கார்த்திகேயா ஸ்டுடியோ என்ற பெயரில் ஸ்டுடியோ நிர்மாணிக்கப்பட்டது. வி. என். சுந்தரம் கதாநாயகனாகப் பாத்திர

'டாக்டர் சாவித்திரி'யில் பப்ளிக் பிராஸிக்யூடராக கலைவாணருடன்.

மேற்ற ''சுந்தரமூர்த்தி நாயனர்'' இந்த ஸ்டுடியோவின் முதல் படம். டைரக்டராக அமர்ந்த முருகதாஸா, சர்மாவை நன்கறிந்திருந்தார். ''நீயும் ஒரு பாத்திரமேற்க வேண்டும்'' என்று கூறி, ஏயர்கோன் கலிக்காம நாயனர் பாத்திரத்தில் சர்மாவை நடிக்கச் செய்தார். இதே ஸ்டுடியோவில் ரோஹிணி பிக்சர்ஸின் ''கிரகலக்ஷ்மி''யும் தயாராகியது.

பிறகு ஸ்டுடியோவில் தீ விபத்து ஏற்பட்டது. செட்டியார் பழமையில் நம்பிக்கை கொண்டவர். ஸ்டுடியோ மூடப்பட்டது!

சர்மா அதன் பிறகு கார் புரோக்கராக சிலமாதங்கள் பணியாற்றினர். பிறகு 1938-ல் விஸ்வநாதன் தான் தயாரித்த ''காமதேனு'' படத்தில் வழக்கறிஞராக சர்மாவை நடிக்கச் செய்தார். அதைத் தொடர்ந்து ஜி. பட்டு ஐயர் டைரக்ஷனில் வளர்ந்த ''மன்மத விஜயம்'' படத்திலும் சர்மா தாரகாசுரனுகத் தோன்றி நடித்தார்.

ஜெமினி ஸ்டுடியோ ஆரம்பிக்கப்பட்டபின் சர்மாவுக்கு அங்கே நல்ல வரவேற்பிருந்தது. ஜெமினியின் ஆரம்பமுதல் சமீப வெளியீடான 'இரும்புத்திரை' படம் வரை தயாரிக்கப்பட்ட எல்லாப் படங்களிலும் சர்மா நடித்திருக்கிறுர். 'இரும்புத்திரை'யில் மில் மேனேஜராக வரும் அவரை யாரும் இதற்குள் மறந்திருக்க முடியாது. குணசித்திர நடிகர் சர்மா என்பதை யறிந்து ஜெமினி அதிபர் வாஸன், அவருக்கு எல்லாப் படங்களிலும் சந்தர்ப்பம் தருகிறுர். ஆனுல் சர்மா ஜெமினியின் நிரந்தர நடிகராக மாதச் சம்பளத்தில் பணியாற்றி வரவில்லை.

நாராயணன் கம்பெனியாரின் 'மனம்போல மாங்கல்யம்' படத்தில் ரிக்ஷாக்காரனுகவும் 'கண்திறந்தது' படத்தில் பப்ளிக் பிராஸிக்யூட்டராகவும் நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றுர் சர்மா. ''காலம் மாறிப்போச்சு'' படத்திலே சுந்தரத்தின் தந்தையாகத் தோன்றி அட்டகாசம் செய்த அவரை யார்தான் மறந்திருக்க முடியும்?

ஜெமினியின் ''சம்சாரம்'' படத்தில் புஷ்பவல்லி, எம். கே. ராதாவுடன் சர்மா.

பிரபல சங்கீத டைரக்டர் ஜி. ராமனுதனின் சொந்த வூரான ராஜாமடம்தான் சர்மாவின் பூர்விக கிராமம். அங்கே ஆர். வி. கோபால சாஸ்திரி - பிரஹதாம்பாள் தம்பதிகளின் குமாரராக 1911-ம் வருடம் அக்டோபர் மாதம் 24-ம் தேதி பிறந்தார் சர்மா. தகப்பனுர் நாகப்பட்டினத்தில் சானிடரி இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வந்ததால் குடும்பம் அங்கே குடிபெயர்ந்திருந்தது. அங்கே நேஷனல் உயர்நிலைப்பள்ளியில் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தார். பள்ளி நாடகங்கள் ஏராளமானவற்றில் அவர் நடித்திருக்கிறுர். சர்மா அப்போதெல்லாம் குறும்புதனமும் பிடிவாதமும் கொண்டவராக இருந்தார். அதற்கேற்றுர்ப்போல் எமன், சகுனி, ஆஞ்சநேயர் போன்ற பாத்திரங்கள்தான் அவருக்கு நிறைய கிடைத்தன! ஜி. பட்டு அய்யரும் சர்மாவும் குறவன் - குறத்தி வேடத்தில் தோன்றினுல் சபையிலே அப்ளாஸ் மயம்தான்.

தொழிலாளிகளுக்கும் முதலாளிக்கும் இடையே உள்ள புல்லுருவி மேனேஜராக 'இரும்புத்திரை'யில்.

பள்ளிப் படிப்பை 1928-ல் சர்மா முடித்ததும் அவரது முரட்டு சுபாவம் மாற, எங்கேயாவது வேலைக்கமர்த்தத் தீர்மானித்தார், அவரது தகப்பனுர். ஒரு பண்டகசாலையில் சர்மாகணக்கப்பிள்ளையாக அமர்ந்தார். அங்கே அவர்தான் நீர் மொண்டு வந்து வைக்கவேண்டும். ஒருநாள் பானையில் நீர் மொண்டு கொண்டு தெருவழியே அவர் வரும்போது, அவரது தகப்பனுர் எதிர்ப்பட்டார். "தண்ணி தூக்கச் சொன்னது யார்?" என்றுர். 'பெரிய கணக்கர்" என்றுர் சர்மா. அவரது தகப்பனுர் பானையை உதைத்துவிட்டு, கணக்கை முடித்து மகனை வீட்டுக்கழைத்து வந்து விட்டார். பிறகு டி. நாராயணசாமி என்ற டாக்டரிடம் கம்பவுண்டராக வேலை பார்த்தார் சர்மா. இப்பீரியல் ஸ்டீல் ட்ரங்க் ஒர்க்ஸ் ஸ்தாபன முதலாளி குப்புசாமி பிள்ளையின் மகளுக்குக் காதுக்குப் பின்புறமிருந்த கட்டியை சர்மாவே ஆபரேஷன் செய்தார். இந்தஅனுபவம் அவருக்குஒருபாடம் தந்தது. வீடு சென்றதும் அந்தயையும் உதறினுர். அதன்பின் வயலின் சாதகம் செய்தார். அவரது பாட்டனுர் திருகோகர்ணம் பிரபல பிடில் வித்வான் சீதாராம ஐயர். ஆனுலும் பேரனுக்கு அதில் பயிற்சி பெற நேரமில்லை! ஆகவே அதுவும் பாதியில் நின்றது. பிறகு புதுக்கோட்டையில் எஸ். ஏ. சுவாமிநாதய்யர்; டி. சாஜகோபால அய்யர், சுந்தரம் அய்யர் ஆகிய வழக்கறிஞர்களிடம் குமாஸ்தாவாகப் பணியாற்றினுர் சர்மா. ஆனுல் நடிப்பிலும் இசையிலும் அவருக்கிருந்த அனுபவமும் ஆர்வமும், இதிலெல்லாம் ஏற்படாததால் வக்கீலிடமே கட்டுக்களைக் கொடுத்துவிட்டு வீடு திரும்பினுர்.

வீட்டார் அறியாமல் பம்பாய் சென்று மௌனப்படங்களில் நடிக்க சர்மா முடிவு செய்ததை எப்படியோ அறிந்த அவரது தகப்பனுர் தன் மகன் கூத்தாடியாவதை விரும்பாமல் தடுத்து நிறுத்திவிட்டார். 1928 முதல் 33 வரை இத்தனை கலாட்டா

வேலையும். தன் மகன் எதிலும் ஒட்ட வில்லையே என்று நினைத்த தகப்பனார், முனிசிபல் ஆபீஸில் குமாஸ்தாவாக அமர்த்தினார். ஆனால் அதுவும் நிலைக்கவில்லை. தகப்பனார் ஓய்வு பெற்று ஊர் திரும்பியதால், சர்மாவும் உத்தியோகத்தைவிட்டு ஊருக்குச் சென்றார்.

தகப்பனார் கயிறு வியாபாரத்தில் ஈடுபட்டார். அதற்காக கேரளம் சென்று தொழிலாளர்களை ஏற்பாடு செய்து அழைத்து வந்தார் சர்மா. ஆனால் துரதிருஷ்டவசமாக வெள்ளத்தால் அதுவும் வீணாகிவிட்டது.

தென்னிந்தியப் படவுலகின் தந்தை டைரக்டர் ஏ. நாராயணனின் படங்களை வினியோகத்துக்கு ஏற்பாடு செய்ய சர்மா வேலைக்கமர்ந்தார். அப்போதுதான் அவரும் மே. வ. தியாகராஜன் செட்டியாரும் சென்னை வந்து படங்களை விலைக்கு வாங்க முற்பட்டனர். அதிலும் தோல்வி காணவே, செட்டியார் ஸ்டுடியோ கட்டத் தீர்மானித்தார். இதன் பிறகுதான் சர்மா, கார்த்திகேயா ஸ்டுடியோவில் பணியாற்றியதும் கார் புரோக்கராக இருந்ததும்.

எதிலும் தோல்வியுற்ற போது தான் சர்மா, எதிர்காலம் பற்றி ஜோசியம் பார்த்தார். கிரக சஞ்சாரங்களைப் பார்த்தார். நக்ஷத்திரங்களைப் பார்த்தார். அவர் கூற்றுப்படி அவருக்கு இப்போதுதான் நல்ல காலம் பிறக்கிறது.

சர்மாவுடன் பிறந்தவர்களில் தமையனார் அருணாசல சாஸ்திரி மட்டும்தான் உயிரோடிருக்கிறார். 1944-ல் சர்மா பாலையூர் சங்கரய்யரின் மகள் நாகலக்ஷ்மியை மணந்தார். இந்தத் தம்பதிகளுக்கு மஹேஸ்வர், பிரேமா, மைதிலி, காவேரி, சரஸ்வதி என்ற ஐந்து பெண் குழந்தைகளிருக்கிறார்கள். சர்மா ரேடியோ நாடகங்களில் சுமார் பத்தாண்டுகளாக தொடர்ந்து நடித்து வருகிறார். எப்போதாவதுதான் அவர் படங்களைப் பார்க்கிறார். அவருக்கு வில்லன் பாத்திரத்திலும் சோக பாத்திரத்திலும் நடிக்க மிகவும் பிரியம். சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் அவரது திறமை நன்கு வெளிப்படும். சுமார் ஐம்பது படங்களில் அவர் நடித்திருக்கிறார். இந்த அனுபவத்துடன் தகுந்த சந்தர்ப்பமும் கிடைத்தால் கலையுலகிற்கு ஒரு நல்ல நடிகர் கிடைப்பார்.

ஜோசியம் பார்ப்பதில் அவர் சூரர் என்றேன். ஜெமினியில் நடிகர் தேர்வுப் பிரிவிலிருந்த ஜெமினி கணேசன் தன் எதிர்காலம் ஜெமினியில் எப்படியிருக்கும் என்று சர்மாவிடம் கேட்டார். "நீ இங்கே ஆகஸ்ட் 1-ம் தேதி இருக்க மாட்டே" என்றார். திடுக்கிட்டார் கணேசன். "சிறந்த நடிகனாகப் புகழ்பெற நீ வெளியேற நேரும். இது நிச்சயம்" என்று எழுதிக் கொடுத்தார் சர்மா. ஜூலை இறுதியில் "தாய் உள்ளம்" படத்தில் நடிப்பதற்காக ஜெமினியிலிருந்து விலகினார் கணேசன். அதன் பிறகும் இதேபோல ஒன்று நடந்தது. "மனம்போல மாங்கல்யம்" திரையிடப்பட்டு நல்ல வெற்றி கண்டும் கணேசனுக்கு புது ஒப்பந்தங்கள் வரவில்லை. சர்மாவிடம் சென்றார். "இன்னும் நான்கு மாதங்களுக்குள் பல ஒப்பந்தங்கள் ஏற்பட்டு மிகக் குறைந்த காலத்திற்குள் நீ உச்ச நிலைக்குப் போய் விடுவாய்" என்றார் சர்மா. அப்படியே ஆகிவிட்டது. மனிதனை மனிதனால் வாழவைக்க முடியாது. காலம் மட்டும்தான் அதைச் செய்ய முடியும் என்பது சர்மாவின் திடமான நம்பிக்கை. அது எதன் மூலமாகவாவது இருக்கட்டுமே. ஜோதிடத்தில் உள்ளதெல்லாம் வெறும் கணக்குதான். கணக்கு சரியானபடி போடப்பட்டால் தவறு வராது. அதேபோல் ஜோசியமும் தவறாகப் பார்க்காமலிருந்தால் அதுவும் பொய்யாகாது என்பது சர்மாவின் நம்பிக்கை.

திறமையும் அனுபவம் கொண்ட சர்மா, எந்தப் பாத்திரத்திலும் சோபிக்கக்கூடியவர். பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தயாரிப்பாளர்களின் கடமை.

—குமார்.

ஸ்டுடியோ விஜயம்

இம்மாதம் நேயர்களை வழக்கம்போல் ஸ்டுடியோவில் நடக்கும் சில படப் பிடிப்புகளுக்கு அழைத்துச் செல்வதோடு,. சில வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப்பட்ட இடத்திற்கும் அழைத்துச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன். 'வெளிப்புறக் காட்சி படப்பிடிப்பு' என்றதும் எனக்கு முதலில் நினைவுக்கு வருவது பிரபுராம் பிலிம்ஸ் தயாரித்து வரும் படம்தான். இதற்கான சில காட்சிகள் சென்னை நகரத்தின் பல்வேறு இடங்களில் சென்ற மாதம் படமாக்கப்பட்டது. 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, பத்மினி பிரியதர்சினி முதலியோர் இந்தக் காட்சிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள். இம்முறை இதில் ஒரு புதுமையும் இருந்தது.



நான் ஆங்கிலப் படங்களைப் பற்றிப் படித்திருக்கும் சில செய்திகளை ரசிகர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஒரு ஆங்கிலப்படம் தயாராகிறது. ரோமாபுரி சாம்ராஜ்யத்தை அடிப் படையாகக்கொண்ட கதையை ஒரு ஹாலிவுட் ஸ்தாபனம் தயாரிக்கிறது. ஹாலிவுட் ஸ்டுடியோக்களுக்குள் ரோமாபுரி ராஜ்யத்தை ஸ்தாபித்து விட(!) அவர்களால் முடியும். ஆனல் அக்காட்சிகள் இயற்கையாக இருக்கவேண்டுமென்பதற்காக அந்த ஸ்தாபனத்தின் படப்பிடிப்பு யூனிட், ரோமாபுரிக்குச் செல்கிறது. சம்பவங்கள் நடைபெற்ற இடங்களிலேயே அப்படத்தின் பெரும் பகுதிக் காட்சிகள் படமாக்கப் படுகின்றன. ஸ்டுடியோவில் படமாக்க பத்துலக்ஷம் ரூபாய் செலவென்ருல், அந்தந்த இடங்களுக்குச் சென்று படமாக்கினுல் ஒரு கோடி ஆகும். ஆனுலும் காட்சியின் சுவை

கிரேனில் உட்கார்ந்து கவனிப்பவர் டைரக்டர் ஸ்ரீதர்; பக்கத்தில் நிற்பவர் ஆபரேடிவ் காமிராமென் சுந்தரம்.



நர்ஸ் உடையில் கவர்ச்சிமிக்க பி. சரோஜாதேவி, 'கிளாப்ஸ்டிக்'குடன் இங்கே காட்சியளிப்பது 'கைராசி' படப்பிடிப்பின் போது வாசு பிலிம்ஸ் தயாரிப்பு இது. வாஹினியில் வளர்ந்து வருகிறது இந்தப் படம்

சென்னை மவுண்ட் ரோடிலுள்ள உடுப்பி ஒட்டலில் சில காட்சிகள் படமாக்கப் பட்டன. காமிரா வின்சென்ட், படப்பிடிப்புக்கு வெளிச்சம் போதுமா என்று பார்க்கிறர்.

நடிகர் திலகமும், டி. ஆர். ராமச்சந்திரனும் குஸ்திப் போடவில்லை. பிரபுராம் படத்தில் இப்படி ஒரு காட்சி ஒட்டலில் நடப்பதாக வருகிறது. அதற்காகத்தான் இந்நடிப்பு.





கவர்ச்சி நடிகை சரோஜாதேவியிடம் துணியைப் பொட்டலமாகக் கட்டிக் கொடுக்கிறார் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன்.



இந்தக் காட்சி சென்னை தியாகராய நகரிலுள்ள நல்லி சின்னசாமி செட்டி ஜவுளிக் கடையின் உள்ளே படமாக்கப்பட்டது

குன்றாமலிருக்க அவை தத்ரூபமாக அமைய - அந்தந்த இடங்களுக்கே சென்று படமாக்குகிறார்கள்

இந்த வளர்ச்சி தமிழகத்திற்கும் பரவியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காட்சியின் சுவை குன்றாதிருக்க சம்பந்தப்பட்ட இடங்களுக்கே செல்கிறார்கள் என்ற அளவில் தான் இதைக் குறிப்பிடுகிறேன். இதை ஆரம்பம் செய்து வைத்த பெருமை புதிதாகத் துவங்கியிருக்கும் பிரபுராம் பிலிம்ஸாரைச் சேர்ந்ததாகும். இதைத்தான் மேலே குறிப்பிட்டிருக்கிறேன். இதற்கு முன்னர் தயாரான படங்களிலும் சில காட்சிகள் இப்படிப் படமாக்கப் படத்தான் செய்தன. ஆனால் இவர்கள், அனேகமாக எல்லாக் காட்சிகளையும், சம்பந்தப் பட்ட இடங்களிலேயே படமாக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

உடுப்பி ஓட்டல் மாடியில் டைரக்டர் ஸ்ரீதருடன் காட்சியைப்பற்றி விவாதிக்கிறார்கள் நடிகர் திலகமும், டி. ஆர். ராமச்சந்திரனும். மேலே தொங்குவது 'மைக்'

டைரக்டர் ஸ்ரீதர் மனதில் உருவகப்படுத்தி, விளக்கிச் சொன்னதை டி. ஆர். ராமச்சந்திரனும், 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனும் செய்து காட்டுகிறார்கள்.

சென்றமாத ஆரம்பத்தில் பிரபுராம் பிலிம்ஸாரின் முதல் தயாரிப்புக்காகச் சில வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப்பட்டன.

முதலில் காட்சியின் அடிப்படைக் கதைப் பகுதியைக் குறிப்பிட்டு விடுகிறேன்.

அவர் ஒரு ஸ்தாபனத்தின் முதலாளி. அவருடைய செல்வமகள் சித்ரா. முதலாளியின் கார் டிரைவர் ஒரு பிரம்மச்சாரி. அவன் ஒரு ஹோட்டலில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்குகிறான். முதலாளியின் டைப்பிஸ்ட் ஒரு இளநங்கை. அவளிடம் டிரைவருக்குக் காதல்! வேலைதேடி அலையும் லக்ஷக்கணக்கான இளைஞர்களில் சந்துரு ஒருவன், அவன் அந்த முதலாளியின் கம்பெனியில் சமீபத்தில்தான் வேலைக்குச் சேர்ந்தான். அவனும் ஒரு மணமாகாத யுவன்.

வேலைக்குச் சேரும் ஏழை சந்துருவிடம் நல்ல ஆடைகள்கூடக் கிடையாது. சித்ராவுக்கு அவனிடம் சொல்ல முடியாத ஒரு அன்பு. நாளை அது காதலாகப் பரிணமிக்கப் போகிறது! அவனுக்காக அப்பாவிடம் சிபாரிசு செய்து ஆடையணிகளுக்காக முன்பணம் வாங்கித் தருகிறாள் சித்ரா.

இனி நாம் வெளிப்புறக் காட்சிகளைப் பார்க்கச் செல்வோம்.

அதோ, சென்னை தியாகராயநகரில் பனகல் பார்க்குக்கு எதிரே, பிரபல பட்டுஜவுளி வியாபாரிகளான நல்லி சின்னசாமி செட்டிகடை இருக்கிறதல்லவா? அதற்குள்ளேயும் வெளியேயும் ஏன் இவ்வளவு கூட்டம்? ஆமாம், இங்கே கடைக்குள்ளேயே படம் பிடிக்கிறார்கள்.

சந்துரு உள்ளே நுழைகிறான். அவன் அந்தஸ்தினால் ஏழை ஆனாலும் கடைச் சிப்பந்திக்கு அது தெரியுமா? தன்னிடமிருந்த உயர்ந்த ரக துணிமணிகளை அவன் எதிரில் எடுத்து விரிக்கிறான். பிரமிப்பு நீங்குவதற்குள் வியாபாரம் நடக்க வேண்டாமா? “கெஜம் ஆறு ரூபாய். நன்றாக இருக்கும். அதுவும் நீங்க தச்சுபோட்டுகிட்டீங்கன்னா ரொம்ப ஜோராயிருக்கும்” என்றெல்லாம் வியாபார தந்திரத்துடன் பேசுகிறார். ஆனாலும் சந்துரு மயங்கிவிடவில்லை. தன் பைக்கனமும் நிலையும் அவனுக்கு நன்றாகத் தெரியும். அங்கே அவன் பேச வாய் திறக்கு முன் திரும்பிப் பார்த்துத் திடுக்கிடுகிறான்.

ஆம், சித்ராதான் அங்கே நிற்கிறாள்! அவள் அகஸ்மாத்தாக வந்தாளோ, அவனுக்காக வந்தாளோ தெரியாது; ஆனால் வந்திருக்கிறாள்!

“பரவாயில்லை. வாங்கிக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு நன்றாகவே இருக்கும். உங்களிடம் பணமில்லை என்றால், நான் கடனாகத் தரச் சோல்லுகிறேன்” என்கிறாள். நிதானம் கொஞ்சங் கொஞ்சமாக அகல, சபலத்துடனும் தயக்கத்துடனும் விழிக்கிறான் சந்துரு. சந்துரு துணியை வாங்கிக் கொள்கிறான். சித்ராவின் வற்புறுத்தலின் மீது, அவளுடன் காரிலேயே வருகிறான் சந்துரு.

டிரைவர், சந்துருவைச் சந்திக்கிறான். சந்துருவின் நிலை அனுக்குத் தெரியும். ஏன், டிரைவருக்குத் தெரியாதது பெரிய இடங்களில் எதுதான் இருக்கிறது! “சந்துரு! நானும் பிரம்மச்சாரிதான். ஹோட்டலில்தான் அறையை வாடகைக்கு

எடுத்துத் தங்கி யிருக்கிறேன். உனக்கு இடம் கிடைக்கும் வரை என்னுடன் தங்கியிருக்கலாம்'' என்கிறான். பிளாட்பாரத்திலிருப்பதை விடமேல் என்பதற்காக சந்துரு ஒப்புக் கொள்ளுகிறான்.

சென்னை மவுண்டுரோடில், அதோ கம்பீரமாக நிற்கிறதே உடுப்பி ஹோட்டல், அங்கே போகலாம் வாருங்கள். டிரைவர் பாபுவும் சந்துருவும் அங்கேதான் தங்கி யிருக்கிறார்கள்.

சந்துரு நிடுக்கிடுகிறான். ''விடியா மூஞ்சி வேலைக்குப் போனால் வேலை கிடைக்காது. வேலை கிடைச்சாலும் கூலி கிடைக்காது'' என்று கூறுவார்கள். அது அவன் வரை உண்மையாகி விட்டது. அவனிடம் அதிர்ஷ்டம் ஒட்டவில்லை.(ஆனால் இது உண்மையல்ல!) வாங்கிய துணி பார்சலை காரிலேயே வைத்துவிட்டு வந்து விட்டான். ''டிரைவர்! அதைப் போய் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அவசரப்படுகிறான் சந்துரு.

டிரைவர் சிரிக்கிறான். அவன் விஷயம் தெரிந்தவன்!

''சந்துரு! அவசரப்படாதே. அந்தப் பார்சல் எங்கேயும் போகாது. நீ போய்க் கொண்டு வரவேண்டாம்'' என்கிறான்.

''பின் யார்கொண்டு வருவார்கள்?'' என்று கேட்கிறான் சந்துரு. கடன்பட்ட துணிமணி கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயம் அவனுக்கு.

''சந்துரு! நீ ரொம்ப 'லக்கிமேன்' அப்பா. அந்தப் பார்சலை உன்னிடம் கொடுத்து விடுகிறேன் என்று நான் சொன்னேன். ஆனால் அவங்க...அதான் சித்ரா, தானே இங்கே வந்து உன்னிடம் கொடுப்பதாகச் சொல்லிட்டாங்க. நீ அதிர்ஷ்டக்காரனப்பா!'' என்று கூறி சந்துருவை கேலி செய்கிறான் டிரைவர்.

அதோ, பீச் ரோடில் ரமணியமான சூழ்நிலையிலே கட்டப்பட்டிருக்கிறதே, ஹோட்டல் ஓஷியானிக், அதன் அருகேதான் டிரைவர் லேடி டைப்பிஸ்ட் காரில் போகும் காதல் காட்சிகள் படமாக்கப்பட்டன.

இந்தக் காட்சிகளில் சிவாஜி கணேசன் சந்துருவாகவும் பி. சரோஜாதேவி சித்ராவாகவும் டி. ஆர். ராமச்சந்திரன் டிரைவராகவும் பத்மினி பிரியதர்சினி லேடி டைப்பிஸ்டாகவும் நடித்தனர். முதலாளியாக நடிப்பவர் எஸ். வி. ரங்கராவ்.

பிரபுராம் பிலிம்ஸார் இந்தக் காட்சிகளை நல்லி சின்னசாமி செட்டி கடை, உடுப்பி ஹோட்டல், ஹோட்டல் ஓஷியானிக் அருகேயுள்ள திறந்தவெளி ஆகிய இடங்களுக்கே சென்று, அங்கெல்லாம் தத்ரூபமாகப் படமாக்கிய காட்சிகளைத்தான் நீங்கள் இங்கே பார்க்கிறீர்கள். ஸ்ரீதர் கதை-வசனம் டைரக்ஷன் பொறுப்பேற்றுள்ள இப்படத்தை வேட்டைக்காரன்புதூர் முத்துமாணிக்கம், வி.சி. ஷண்முகம், வி.சி. தங்கவேல் மூவரும் சேர்ந்து தயாரிக்கிறார்கள். மற்ற காட்சிகளும் பெரும்பாலும் அந்தந்த இடத்திலேயே படமாக்கப்படும் என்று முத்துமாணிக்கம் சொன்னார் ''பேசும் பட''த்திற்கெனப் பிரத்தியேகமாக திருச்சி கே. அருணாசலத்தினால் எடுக்கப்பட்ட படங்கள் இவை.



போகுமுன் ஒரு முறை இந்த உலகத்தைத் திரும்பிப் பார்க்கிறான். உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் அவன் பார்வையில்தான் எவ்வளவு வெறுப்பு, சோகம், ஏளனம்? கமால் சகோதரர்களின் "தெய்வப் பிறவி" யில் சிவாஜி கணேசன் - பத்மினி.

சபாஷ்,
குலாலரே
இப்போது உங்களுக்கு
ஒரு கப் டீ தேவைதான்!
நான்தான் டீ -
உங்கள் வேலையில்
ஊக்கமளிக்க
உத்தமமான பானம்
TEA BOARD INDIA
PST-215


விஜயா ஆர்ட் பிலிம்ஸ்
பிறந்த நாள்
காட்சிகள்







விஜயா ஆர்ட் பிலிம்ஸார் தயாரித்து வரும் ''பிறந்த நாள்'' தமிழ்ப் படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இந்தச் சமூகப் படத்தில் அனுபவஸ்தர்களும் இளம் நடிகர்கள் பலரும் நடித்திருக்கிருர்கள். கே. நாராயணன் - ஜே. பி. ராஜ் இருவரும் டைரக்ட் செய்திருக்கிருர்கள். விரைவில் வெளிவர விருக்கும் இப்படத்தின் கதை, சமூக வாழ்வைப் பிரதிபலிக்கும் விதத்தில் பின்னப்பட்டிருக்கிறது.



உங்கள் கன்னத்தில் வைக்கும் குழந்தையின் உள்ளங்கைபோல

அத்தகைய சுகத்தை க்யுடிக்யுரா டால்கம் பவுடர் க்ஷவரம் செய்து கொண்ட முகத்திற்குத் தருகிறது. க்ஷவரத்திற்குபின் ஏற்படும் எரிச்சலுக்கு இதமளிக்கிறது. மழ மழப்பாயும் புதுமையுடனும் வைத்துக் கொள்கிறது. மிருதுவும், புத்துணர்வும், தரும் க்யுடிக்யுராவை தினசரி அழகு சாதனத்தின் அம்சமாகக் கொள்ளுங்கள். இதமும் குளுமையும் கொடுக்கும் க்யுடிக்யுரா பட்டுப் போல் மிருதுவாகவும் மிக நேர்த்தி யாகவும், அதிக உறிஞ்சும் தன்மை யுடையதாகவும் இருக்கிறது. ஒருபொழுதும் சருமத்தில் அருவருக்கும் கட்டிகளாக சேருவ தில்லை. போரேட்டும் இன்னும் சிறிது மருந்தும் கலந்து, நேர்த்தி யான மணமூட்டியுமுள்ள இது, வியர்வையின் துர்நாற்றத்தி லிருந்து உங்களை காக்கிறது. க்யுடிக்யுரா ஒரு சர்வகாரிய டால்கம் பவுடர். தூவுவதற்கும், பாதத்திற்கும் குழந்தை மற்றும் நோயாளிகளுக்கும் சிறந்த பவுடர்.

ஒரு டின்
ரூ. 1.75 ந. பை.

க்யுடிக்யுரா

எல்லாக் குடும்பத்திற்கும் ஏற்ற
ஒரு சர்வகாரிய டால்கம பவுடர்

கேள்வி-பதில்

என். கணேசன், பெரம்பூர்

இந்தியாவிலேயே நடிகை சாவித்திரியிடம்தான் புதிய செவர்லெட் கார் இருக்கிறதா? வேறு நடிகைகளிடம் இல்லையா?

பெரும்பாலான பம்பாய் நடிகைகளிடம் இந்த செவர்லெட் கார் இருக்கிறது. கிஷோர் குமார், ராஜேந்திரகுமார், பிரதீப்குமார். மாலா சின்ஹா, நிஷி, புதுமுகம் சயீதாகான், சங்கீத டைரக்டர் ஓ.பி.நய்யார் மற்றும் பலரிடம் இந்தக் கார் இருக்கிறது. பம்பாய் நடிகர்களிடையே செவர்லெட் மோகம்தான் இப்போது அதிகம் காணப்படுகிறது.

சிவாஜி கணேசன் தியேட்டர் கட்டுகிறாராமே, உண்மையா?

சென்னை தியாகராய நகரில் கணேசன் ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கி இருக்கிறார். இதில் ஒரு சிறு தியேட்டரை அவர் கட்டி வருவதும் உண்மைதான்!

சுந்தரபாண்டியன், மதுரை

எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரக்காரணமாயிருந்தது, காங்கிரஸ் கட்சி மீது அவர் கொண்ட வெறுப்பினால்தான் என்கிறார் என் நண்பர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரக் காரணமாயிருந்தவர் நடிகமணி டி. வி. நாராயணசாமிதான்! அதை எம்.ஜி.ஆரே சொல்லி யிருக்கிறார்.

வேலைப்பிடித்தவன், வாணகப்பாடி

டில்லியில் அமெரிக்க ஜனாதிபதியின் முன்பு வைஜயந்திமாலாவும் கமலா லக்ஷ்மணனும் ஆடினார்களே பத்மினிக்கு அழைப்பு வரவில்லையா?

முதலில் பத்மினிக்குத்தான் அழைப்பு வந்தது. அந்தச் சமயத்தில் தவிர்க்க முடியாத படப்பிடிப்பு இருந்ததால் பத்மினி அழைப்பை ஏற்க முடியவில்லை. இப்போதுதான் அதற்குப் பதிலாக ரஷிய ஜனாதிபதியின் முன்பு அவர் ஆடிவிட்டாரே!

பத்மினியின் கணவராகப் போகிறவர் மலாயாவில் தானே இருக்கிறார்?

அங்கு இல்லை; உள்ளூரிலேயே இருக்கிறார் என்பதைமட்டும் நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

கு.ரா. கிருட்டிணன், சிதம்பரம்

1960-ம் ஆண்டு! இதை எண்ணும் போதே, பாவம், என். எஸ். கே. மதுரத்திற்கு 'பகீர்' என்று இருக்குமல்லவா?

இருக்காது! பதிலாக கலைவாணர் எத்தனை பேராசைக்காரர் என்று தான் எண்ணியிருப்பார்! அவர் சொல்லியது ஒன்றுகூட 1960-ல் நடக்கப் போவதில்லையே!

ஆர். சம்பத்குமாரன், சேலம்

பட்டதாரிணி குமாரி வசந்தி நடிப்புத் தொழிலில் ஈடுபடுதல் முறையாகுமா?

பட்டதாரிகள் நடிக்க தடைச் சட்டம் ஒன்றும் படவில்லையே!

கேசவன், திருப்பதி

ஏவி. எம். தயாரிப்பான 'பூகைலாஸ்' படத்தில் சரோஜாதேவி நடித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர் அதில் எங்கே வருகிறார்?

பரமசிவனுடன் பார்வதியாக அந்தப் படத்தில் ஒரு சில நிமிஷங்கள் வந்து போவது சரோஜாதேவிதான்.

கண்ணன், விருதை

'இரும்புத்திரை' படத்தைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன நினைவுக்கு வந்தது?

முதலாளி, அமரதீபம், சபாஷ் மீனு, சம்சாரம், அவன் அமரன் படத்தில் வரும் சில காட்சிகள்!

ஜெமினியின் அடுத்த தமிழ்ப்படம் என்ன?

அடுத்தபடியாக ஒரு ஹிந்திப் படத்தைத்தான் ஜெமினி தயாரிக்கப்போகிறது. இதற்கான கதையைத்தான் ஹிந்தி எழுத்தாளர் ராமானந்த ஸாகருடன் தயாரிப்பாளர் எஸ். எஸ். வாஸன் தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறார். ஜெமினியில் இனி தமிழ்ப் படங்களைவிட ஹிந்திப் படங்கள்தான் அதிகம் தயாராகும்!

ரமணன், சிதம்பரம்

வடஇந்தியாவில் புது முகங்கள் அறிமுகப்படுத்தப்படுவது போல தென் இந்தியாவில் ஏன் அறிமுகப்படுத்தப் படுவதில்லை?

வட இந்தியாவில் புது முகங்களை அறிமுகப்படுத்துபவர்கள் ஸ்டுடியோ முதலாளிகளும் பிரபல தயாரிப்பாளர்களும். நம்நாட்டிலோ இவர்கள் இருவருமே புதுமுகங்கள் அருகில் போவதுகூட இல்லை. புதிதாகப் படம் பிடிக்க வருபவர்கள் புதுமுகங்களைப் போடவும் துணிவதில்லை. விநியோகஸ்தர்கள் தங்கள் படத்தை வாங்கமாட்டார்கள் என்ற பயம் இவர்களுக்கு.

மாதா மாதம் பத்திரிகை ஆசிரியர்களை விருந்துக்கழைத்து எம்.ஜி.ஆர். ஏன் விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்?

விளம்பரத்திற்காக அழைக்கவில்லை அவர்; உள்ளத்தில் இருப்பதை வெளியிடவே அழைக்கிறார்.

எம். ராதாகிருஷ்ணன், பம்பாய்

மாலாவை மணக்கப்போவது யார்?

மாப்பிள்ளை உங்கள் ஊரில் இருக்கிறார் என்றுதானே வதந்தி இருக்கிறது?

'மங்கம்மா' புகழ் வசுந்தராதேவி தன் மகள் வைஜயந்திமாலாவுடன் சேர்ந்து வசிக்கிறாரா ?

ஒரே பேட்டையில் இருந்தாலும், தனித்தனி வீட்டில்தான் வசித்து வருகிறார்கள்.

அரசியல் பத்திரிகைக்கு ஆசிரியராக இருப்பதைவிட சினிமாப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருப்பவர் அதிருஷ்டசாலி என்று என் நண்பர் கோபி சொல்லுகிறார். உண்மையா?

கோபி, அவசரக்காரர் என்று தெரிகிறது!

பழைய ராஜபக்தியில் கதாநாயகனாக நடித்தவர் யார்?

பட்டாபி பி. ஏ.

படங்களில் வரும் குழந்தைகள் எல்லாம் நடிகர்களின் சொந்தக் குழந்தைகளா அல்லது வாடகைக்கு வாங்கப் படும் குழந்தைகளா?

ஸ்ரீ வெங்கடேஷ் பிலிம்ஸார் தயாரித்து வரும் படத்தில் அசோகன்.

தபால் பில்லைகளை கவனமாக ஒட்டி

தபால்கட்டுகளின் வேகத்தை அதிகரியுங்கள்

* சரியான மதிப்புள்ள தபால் பில்லைகள் ஒட்டுங்கள்

போதுமான தபால் பில்லை இல்லாததும், தபால் பில்லையே ஒட்டப்படாததுமான கடிதங்கள் கணக்கெடுப்பதற்காகத் தனியாக வைக்கபபட்டு தாமதமாக அனுப்பப்படும்.



* விலாசம் உள்ள பக்கத்தின் வலது மேல் மூலையில் அவைகளை ஒட்டுங்கள்

கடிதங்களை பாகுபாடு செய்வதன் நேரத்தைக் குறைக்கும். தானே இயங்கும் இயந்திரத்தால் தபால் பில்லைகளில் சீக்கிரமாக முத்திரையும் இடலாம்.

* தேவையான மதிப்பிற்கு குறைந்த எண்ணிக்கையுள்ள தபால் பில்லைகளே உபயோகியுங்கள்

இதனுல் விரிவாக விலாசம் எழுத அதிக இடம் கிடைக்கும். முத்திரையையும் வேகமாக இடலாம்.

* கீழே விழும்படி தபால் பில்லைகளை ஒட்டாதீர்கள்

தபால் பில்லைகள் கீழே விழுந்தால் அக்கடிதம் தபால் தலை ஒட்டப்படாதது என்று மதிக்கப்படும். பட்டுவாடா செய்வதில் தாமதமும் ஆகலாம்.

தபால் பில்லைகள் போதுமான அளவு இல்லாமலும் சரியானபடி ஒட்டப்படாமலும் இருந்தால் அக்குறிப்பிட்ட கடிதத்தின் பட்டுவாடா தாமதமாவதுடன், இலாகாவின் வேலை முறையில் தடங்கலும் ஏற்படும்.

தபால் பில்லைகளை கவனமாக ஒட்டுங்கள்

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா.

DA 59/356 TM

செட்டில் வரும் நக்ஷத்திரங்கள் நடிக்கத்தானே வருகிறார்கள்? வீட்டுக் குழந்தைகளை கொண்டுவந்தால் நடிப்பு வராது என்று வாடகைக் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆனால் சிலர் இதற்கு மாறாகவும் இருக்கிறார்கள். 'பத்து கட்டளைகள்' படத்தில் மோசசாக நடிக்கும் சார்லஸ் ஹெஸ்டன், குழந்தை மோசசாக நடிக்க தனது சொந்தக் குழந்தையையே கொண்டு வந்து விட்டார். வேறு குழந்தையைப் போட இவர் சம்மதிக்கவில்லை!

மேனாட்டு இரும்புத்திரைகள் எல்லாம் விலகி வரும்போது, வாசன் ஏன் தன் படத்திற்கு இரும்புத்திரை எனப் பெயரிட்டார்?

ஜெமினியிலும் பழைய சம்பிரதாயங்கள் ஒழிக்கப்பட்டு வருவதைக் காட்டுவதற்காக!

வடநாட்டு நடிகர் அசோக்குமார் தன் மனைவியுடன் 'நின்று கொண்டு ஒரு பத்திரிகைக்குப் 'போஸ்' கொடுக்கும்போது பக்கத்தில் நிற்கும் நடிகை பத்மினியின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டிருக்கிறார். தமிழரின் கலாசாரப்படி சகிக்கக்கூடியதா இது?

பத்மினி—மலையாள நடிகை!

வடநாட்டு சங்கீத டைரக்டர்களுக்கு எல்லாம் விதவிதமான புதிய எண்ணங்கள் உதிக்கின்றனவே, நமது தமிழ்ப்பட சங்கீத டைரக்டர்கள் மட்டும் பழைய பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருக்கிறார்களே ஏன்?

வடநாட்டு டைரக்டர்கள் பல்வேறு நாடுகளுக்குப் பிரயாணம் செய்கிறார்கள்; பல்வேறு நாட்டு இசைகளைக் கேட்கிறார்கள். நம்மவர்கள் பம்பாய்க்கு அப்பால் பிரயாணம் செய்வதில்லையே!

வடநாட்டு தணிக்கையாளர்களுக்கும், தென் இந்திய தணிக்கையாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

அவர்கள் 'கருப்புக் கண்ணாடி'யைப் போட்டுக்கொண்டு தணிக்கை செய்கிறார்கள் என்று நினைக்கிறேன்!

வடநாட்டார்கள் தமிழ்ப் படங்களை 'மட்டம் மட்டம்' என்று கூறி தள்ளுகிறார்களே, ஏன்?

மட்டம் என்றால் அளவுகோல் என்பதும் பொருந்தும். இந்திய கலாசாரத்தை அளக்க தமிழ்ப் படங்கள் ஒரு மட்டமாக உதவுவதானால், ஹிந்திப் படங்களுக்கு மானக்கேடு அல்லவா? அதனால் பயந்து 'மட்டம்' என்று நமது படங்களை அழைக்கிறார்களோ என்னவோ!

வடநாட்டுத் தயாரிப்பாளர்கள் தமிழ்நாட்டு நடிகைகளை மட்டும் ஒப்பந்தம் செய்வதன் காரணமென்ன?

ரஞ்சனை ஏன் மறந்து விட்டீர்கள்?

பி. சாந்தகுமாரி, வேலூர்

பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் குழந்தைகள் படத்தில் சிவாஜி நடிக்கிறாரா?

இல்லை.

“இதோ பார்- நம்ம விசயத்தை யாருகிட்டேயும் சொல்லிடாதே!” ஸ்புட்னிக் பிக்சர்ஸ் 'வீரமங்கை வேலுநாச்சியார்' படத்தில் ஹாஸ்ய நடிகர் தாய் நாகேஷ் - எம். எஸ். பாக்கியம்.

துரை. முருகேசன், காரமடை

நிகழ்காலத்தின் நிழல் எது?

நாளை விளைவின் தோற்றம்!

இன்றைய படாதிபதிகளின் அட்சய பாத்திரம் எது?

விநியோகஸ்தர்களின் கையிலிருக்கும் செக் புத்தகம்.

அசு. அப்துல்ஹை, அரகண்டநல்லூர்

காக்காய் பிடிப்பது என்பது என்ன?

நான் கற்காத, கற்க விரும்பாத பாடம் இது!

தங்களுக்குச் சகுனத்தில் நம்பிக்கை உண்டா?

சில மோசமான படங்களைப் பார்க்க நேரும் போது நான் படம் பார்க்கக் கிளம்பிய நேரத்தைப் பற்றி நோவதுண்டு!

நம் நாட்டில் வள்ளுவர் தோன்றியிராவிட்டால்...?

அடுத்து, காந்தியார் பிறந்திருக்காவிட்டால் என்று கேட்பீர்கள்.



“இதென்னடா இது? ஆச்சரியமாக இருக்கே!”-“வீரமங்கை வேலு நாச்சியார்” படத்தில் தாய் நாகேஷ்.

ந. அரங்கசாமி, விருதை

அறிஞர் அண்ணா சொல்வதுபோல, சினிமாத்தொழிலை அரசாங்கம் ஏற்று நடத்தினால் அதன் நிலை எப்படியிருக்கும்?

சென்னையில் சர்க்கார் பஸ்கள் ஓடும் நிலையில் இருக்கும்!

சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்.- எம்.ஆர். ராதா ஆகியோரின் பானர்களை வைக்க, பொருட்காட்சி கண்டனம் தெரிவித்திருக்கிறதே. இதுபற்றி தென்னிந்திய நடிகர் சங்கம் நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை?

நீங்கள் கேள்விப்பட்டது போல் எதுவும் நடக்கவில்லை.

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி, இலங்கை

நீங்கள் இலங்கைக்கு எத்தனை முறை வந்திருக்கிறீர்கள்?

இரு முறைகள்!

திரையுலகில் மறக்க முடியாத சம்பவம் ஏதாவது உங்கள் மனதில் உண்டா?

எத்தனையோ உண்டு. சமயம் வரும்போது நானே சொல்கிறேன்!

ஆர். ஏ. எஸ். மணியன், பம்பாய்

நான் முரசொலி மாறன் எம்.ஏ. பட்டதாரி என்கிறேன். எனது நண்பன் மறுக்கிறான். நான் சொன்னது சரி என்றால் என் நண்பனுக்கு ஐந்து ரூபாய் நஷ்டம். முடிவு என்ன?

நஷ்டப்படும் உங்கள் நண்பரைக் கண்டு நான் அனுதாபப்படுகிறேன்.

உஷா, லக்ஷ்மிபுரம்

சிவாஜியின் பெண் சாந்திக்கு கடிதம் எழுதினால் பதில் எழுதுவாளா?

சாந்தி கான்வெண்டில் படிக்கிறாள். விடுமுறை நாளாகப் பார்த்து எழுதுங்கள்.



நாளுக்கு நாள்
நாளுக்கு ந
ரெக்ஸோனு
சோப்
உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது
ரெக்ஸோனுவில் இருப்பது கேடில்-சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய 'கேடில்' உங்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, அதிகமென்மையுடனும், அழகுடனும் மிளிரச் செய்கிறது.
உங்கள் எழிலுக்கான சோப் ரெக்ஸோனு!
Rexona
BLENDED WITH CADYL

'பொன்னியின் செல்வ'னில் அருள் மொழி, வந்தியத்தேவன், நந்தினி, குந்தவை, பூங்குழலி பாகத்தில் நடிக்க யார், யார் ஒப்பந்தமாகி யிருக்கிருர்கள்?

இன்னும் எம். ஜி. ஆர். திரைக் கதையையே அமைத்து முடிக்க வில்லையே!

ரா. ரமணி, சென்னை

வடநாட்டில் உள்ள 'பிலிம்பேர்' சஞ்சிகையைப்போல, சிறந்த கலைஞர் களைத் தேர்ந்தெடுக்க 'பேசும் படம்' கூப்பன்களை வெளியிட்டு கலைஞர்களைத் தேர்ந்தெடுத்தால் என்ன?

இதைப் பற்றி விளக்கமாக நமது முந்தைய ஆண்டு மலர்களில் வெளியிட்டிருக்கிறோம். இம்முறை ஏற்றதல்ல என்பதே நமது கருத்து. ஏனெனில் குறிப்பிட்ட நடிகரோ, பத்திரிகை வெளியிடப்படும் தினத்தில் மொத்த இதழ்களையும் விலைக்கு வாங்கி, தன் பெயரை எழுதி பத்திரிகை காரியாலயத்திற்கு அனுப்பி விட முடியும். இதில் போட்டியும் பொருமையும் வளர இடமுமிருக்கிறது. தவிர, இம்மாதிரி ஒரு முறை முன்பு ஒரு தமிழ் சினிமாப் பத்திரிகை வெளியிட்ட போதும் நேர்ந்திருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டே 'பேசும்-படம்' கூப்பன் வெளியிட்டு, சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் வழக்கத்தை ஒதுக்கி யிருக்கிறது.

டி. எஸ். சுகவனம், சேலம்

வட இந்திய டைரக்டர்களான வி. சாந்தாராம், சத்யஜித் ராய் இவர்களைப் பற்றி விவரம் தரமுடியுமா?

படப்பிடிப்பு முடிவதையும் ஆரம்பமாவதையும் அறிவிக்க ஸ்டுடியோக்களில் மணி அடிப்பதுண்டு. சாந்தாராம் இந்த மணி அடிப்பவனுகத்தான் படவுலகில் நுழைந்தார். பின்னர் படிப்படியாக முன்னேறினுர். இவர் டைரக்ட் செய்த 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' அமெரிக்காவில் திரையிடப்பட்டு, அங்குள்ள படவிமர்சகர்களால் சிறந்த படமெனப் போற்றப்பட்டிருக்கிறது. சத்யஜித்ராய் உலகப் புகழ் பெற்ற டைரக்டராக இன்று விளங்குகிருர். வங்க நாட்டைச் சேர்ந்த இவரது முதல் படமே இவருக்குப் புகழைச் சொரிந்தது. அமெரிக்காவில் இவர் டைரக்ட் செய்த 'அபுர் சன்ஸார்' மாதக் கணக்கில் ஓடியிருக்கிறது. 1959-ன் சிறந்த அந்நிய நாட்டுப் படம் என அமெரிக்கர்களின் விருதையும் பெற்றுள்ளது இப்படம். இவர் ஒரு விளம்பர ஆலோசகராகவும், ஓவியராகவும் படவுலகில் நுழைந்தார்.

டைரக்டர் பீம்சிங்-சுகுமாரி திருமணத்திற்கு நீங்கள் அழைக்கப்பட்டிருந்தீர்களா?

அதற்குக் கூட நேரமில்லாத வகையில் அத்திருமணம் நிறைவேறி விட்டது!

இதுவரை துக்கப் படாத நடிகை யார்?

அங்கமுத்து. அவரது மாட்டு வண்டி நடுத்தெருவில் நின்று நான் பார்த்தது கிடையாது!

இவர்களிருவரும் முதலாளியைக் காக்காய் பிடிக்கிருர்கள்! - ஜரிஸ் மூவீஸ் முதல் படத்தில் எஸ். வி. ரங்கராவ், கே. சாரங்கபாணி, முத்தையா.

'ஔவையார்' படம் வாசனுக்கு தோல்விப் படம் என்று, அண்ணா, 'பரிசு' என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். உண்மையா?

உண்மைதான். பண முதலீட்டைப் பொருத்தவரை ஔவையார் வாசனுக்கு ஒரு தோல்விப் படம் தான். ஆனால் வாசனைப் போன்றவர்கள்தான் இந்தத் தோல்வியைத் தாங்கவும் முடியும்; இத்தகையப் படங்களைத் தயாரிக்கவும் முடியும்!

ஹிந்திப் படங்களைவிட வங்கப் படத்தில் புதுமை அதிகம் என்பது உண்மையா?

அல்ல. இயற்கையோடு அதிகம் ஒட்டினதாக வங்கப் படங்கள் இருக்கின்றன.

எஸ். கோவிந்தராஜன், காட்டுமன்னார் கோயில்

இரவல் குரல் கொடுத்து வரும் கே. வி. ஸ்ரீநிவாசனும் 'அன்னையின் ஆணை'யில் புத்தபிக்ஷுவாக 'அசோகன்' நாடகத்தில் வருபவரும் ஒருவரா? யார் அவர்?

ஆம். இந்த கே. வி. ஸ்ரீநிவாசன் சிவாஜி நாடக மன்ற நாடகங்களில் நடித்து வருகிறார். நீண்ட நாட்களாக நாடக உலகில் இருந்து வரும் இவர் ஒரு சிறந்த நடிகர்.

'பாகப் பிரிவினை'யில் நடித்திருக்கும் சிவாஜி கணேசனின் நடிப்பைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ஒப்புயர்வற்றது. ஆனால் பல இடங்களில் 'மக்களைப் பெற்ற மகராசி'யை நினைவூட்டியது.

சி. அரங்கநாதன், மதுரை

நடிகர் அல்லது நடிகை சொந்தக் குரலில் ஒரு படத்தில் பாடுவதாக இருந்தால் அதையும் பின்னணிப் பாடல்களைப் போலவே முன் பே பதிவு செய்து கொள்வார்களா ?

அப்படித்தான் செய்து வருகிறார்கள்.

பிறமொழிக் கலப்பின்றி, தனித் இனிமையான ஒரு புனைப்பெயரை எனக்குத் தரமுடியுமா?

இனிக்க வேண்டுமானால் 'சீனி' என்றே பெயர் வைத்துக் கொள்ளலாமே!

''இனிமே ஆடு திருடமாட்டியே!'' என்கிறாளா அவள்? ஸ்புட்னிக்கின் ''வீரமங்கை வேலுநாச்சியா''ரில் சாந்தி - சந்தியா.

நா. ஆ. க. சாமி, நல்லேபில்லி

இந்தியப் படங்களில் அதிக வசூலைத் தந்த படம் எது?

ஜெமினியின் 'சந்திரலேகா'தான்.

சுந்தரம் வீராசாமி, தஞ்சை

சிவாஜி, ஜெமினி இருவரில் வயதில் பெரியவர் யார்?

ஜெமினியை 'அண்ணா' என்று தான் சிவாஜி அழைக்க வேண்டும்- வயது முறைப்படி!

எஸ். சங்கரன், கல்கத்தா

ஏ. எம். ராஜா இப்போது எத்தனைப் படங்களுக்கு இசை அமைத்து வருகிறார்?

வீனஸின் 'தேன் நிலவு', பிரபுராமின் படம், மற்றும் கால் டஜன் படங்களுக்கு இசை அமைத்து வருகிறார்.

சென்ற ஜனவரி 'பேசும்-பட'த்தில் 33-ம் பக்கத்தில் திரு. கிருஷ்ணமூர்த்திக்குப் பின்னால் நிற்பது ஏ. எம். ராஜாதானே?

உங்கள் யூகம் சரியானதுதான்.

கே. நித்தி, சென்னை

முறையோடு கத்தியை எடுத்து எந்தப் பாணியிலும் சண்டை செய்யக் கூடியவர் யார்?

நடிகர்களில் ரஞ்சன், எம். ஜி. ஆர். இருக்கிறார்கள்.

ஏழை மகிழ்ச்சி அடைவது எப்போது?

உழைப்பின் பலனை உணரும்போது

ஸ்ரீதரன், மதுரை

தற்போது தமிழ்ப்படங்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறதே. காரணம்?

'தங்கவயல்' என படவுலகை தப்புக்கணக்குப் போட்டிருப்பதால்.

ஆர். சுப்பிரமணியம், பனுவல, இலங்கை

தென்னிந்திய நடிக, நடிகையரில் அதிகம் படித்தவர் யார்?

நடிப்புச் சொல்லித்தர இங்கு ஏதும் வள்ளிக்கூடம் இல்லையே, படித்துப் பட்டம் பெற!

வி. ஆர். கே. பாலசுப்பிரமணியன் சிவகிரி

ரஞ்சன் இப்போது என்ன செய்கிறார்?

தன் வீட்டைச்சுற்றி கடைகளை, வாடகைக்குவிடக் கட்டி வருகிறார்; சில ஹிந்திப் படங்களில் நடிப்பதற்காக பம்பாய்க்கும் சென்னைக்கும் பறந்து வருகிறார்; ஸ்பெயின் நாட்டிலுள்ள படக்கம்பெனியின் கூட்டோடு படமொன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

பழனிச்சாமி, திருப்பத்தூர்

எம். ஜி. ராமச்சந்திரன் இப்போது எத்தனை படங்களில் நடித்து வருகிறார்?

சென்ற ஆண்டுவரை ஒப்பந்தமான முப்பத்தாறு படங்களுடன், சமீபத்தில் அவர் நடிக்க ஒப்புக்கொண்டுள்ள படங்களையும் கூட்டிக் கொள்ளுங்கள்.

என் நண்பர் சிவாஜி கணேசனுக்காக அவரது உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். உங்கள் கருத்து என்ன?

சிவாஜிக்கு அந்த உயிர் பயன் படாதே!

வனஜாதேவி, பூனா

சினிமாவில் பின்னணிப் பாடகியாகச் சேருவதற்கு என்ன செய்ய வேண்டும்?

உங்கள் பாட்டை டேப் ரிக்கார்டில் சுத்தமாகப் பதிவு செய்து கொண்டு படக்கம்பெனிக்குப் படக்கம்பெனி தூக்கிக்கொண்டு போய் போட்டுக் காட்ட வேண்டும்.

எம். கே. ஆதிகேசவன், அரக்கோணம்

அஞ்சலி பிக்சர்ஸ் 'ஸ்வர்ணசுந்தரி' தெலுங்கிலும் ஹிந்தியிலும் எத்தனை வாரங்கள் ஓடியது?

வெள்ளி விழா அளவுக்கு!

பி. கணேஷ், கோல்முரி

சாவித்திரி ஏன் ஹிந்திப் படங்களில் நடிப்பதில்லை?

ஜெமினியின் 'பஹுத் தின் ஹுவே' ஹிந்திப் படத்தில் சாவித்திரி சிறு பாத்திரத்தில் நடித்திருக்கிறார். "தமிழ்ப் படவுலகமும் தெலுங்குப் படவுலகமுமே போதும்" என்கிறார் அவர்.

ஜேராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்
38, தங்கசாலை வீதி. மதராஸ் - 3

தபால் பெட்டி

*அரிய யோசனை

கடந்த ஆண்டில் ஏராளமான தமிழ்ப் படங்கள் வெளிவந்தன; தோல்வியுற்றன. இதற்குக் காரணம் கதை என்ற அடிப்படைதான். நல்ல முறையில் படங்களைத் தயாரிக்கும் விதங்களைப் பற்றிப் படத் துறை சம்பந்தப்படாத ஒருவர் சில அரிய யோசனைகளைக் கூறியிருக்கிறார். மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருக்கும் பயனுள்ள வழிகளைப் பின்பற்றினால் நல்ல படங்கள் திரையிடப்பட நிறைய இடமுண்டு. வரலாறு, சமூகம், புராணக் கதைகள் நிறைந்த நூல் நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். நல்ல கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு நிர்ணயக் குழு அமைக்க வேண்டும். சரித்திரக் கதைகளுக்காக வரலாற்றுக் காலத்திலுள்ள ஆடையணிகள், பழக்க வழக்கம் முதலியவற்றைப் பற்றிய விவரங்களைத் தொகுத்துத் தர ஒரு நிலையம் ஏற்படுத்த வேண்டும். இளம் நடிகர்களுக்கான கூலியை பெரிய நடிகர்களே பேசி முடிக்க வேண்டும். இரவு நேரப் படப்பிடிப்புக்கு துணை நடிகைகளை காரில் ஏற்றிச் செல்ல வேண்டும். இதைப்போன்ற அவரது அரிய யோசனைகளை ஏற்றுக்கொண்டு செயலாற்றப் புகுந்தால் தமிழ்ப் படங்களின் தரம் உயரும். கலைஞர்கள் நிலை உயரும். அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்.

இரா. கல்யாணசுந்தரம்,
சென்னை.

**சொல் செயலானால்......

இன்று நமது அரசினர் சினிமாக் கொட்டகைகள் சம்பந்தமாக வகுத்துள்ள சட்ட திட்டங்கள் ஏட்டளவிலே தான் இருக்கின்றன. இதற்குக் காரணம் சினிமாக் கொட்டகைகள் விஷயமாக அரசாங்கம் போதுமான கவனம் செலுத்தாததேயாகும். பஸ் நிலையம், ரயில் நிலையம் இவற்றிலிருப்பதுபோல சினிமாக் கொட்டகைகளிலும் கட்டாய காவல் படை தேவை. இந்தக் காவல் படை, கொட்டகையினுள் அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், உடைமைகள் போன்றவைகளைக் காக்கும் பொறுப்பேற்க வேண்டும். இந்தக் காவல் படைக்கான செலவை அரசாங்கமும் கொட்டகை முதலாளியும் சரிபாதி ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் காவல் படையினர் அரசினரின் ஆணைக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இந்த ஏற்பாடு செயலாகுமானால் சினிமாக் கொட்டகைகளில் தீயவை ஒழிந்து நல்லவை இருக்கும்.

வி. அனந்தராமன்,
மதுரை.

இவர் ஒரு நடிகர்

எந்தப் பாத்திரம் கொடுக்கப்பட்டாலும் அதில் சிறப்பாக நடித்து மக்களைக் கவரும் ஆற்றலுடையவனே நடிகன் எனப்படுவான். தமிழகத்தின் தவப்பெரும் நடிகர் சிவாஜி கணேசன் இலங்கை வானொலி நிலையத்தினரின் பேட்டியின்போது, "புலித்தேவனாக நடிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தால் நடிக்கத் தயார்" என்று கூறியிருக்கிறார். கட்டபொம்மன் பாத்திரத்தை அவர் எந்தத் தனிப்பட்ட நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்கவில்லை. கொடுக்கப்படும்

---

* முதற் பரிசு ரூ. 15. ** இரண்டாம் பரிசு ரூ. 10.

பாத்திரத்தில் நடிக்கக்கூடிய திறன் படைத்தவர் அவர். ஆகவே புலித் தேவன் பாத்திரத்தை ஏற்கவும் அவர் தயாராக இருக்கிறார். கட்சி என்ற சகதியில் விழுந்து பாத்திரத்தை ஏளனம் செய்யாத சிவாஜி கணேசனை அறிவுலகம் பாராட்டவே செய்யும். அவர் ஒரு நடிகர். மற்றவர்களில் சிலரைப்போல வேறு புகழால் கலையில் சோபிப்பவர் அல்ல. இதுதான் அவரது பெருமை.

கு. ரா. கிருட்டிணன்,
சிதம்பரம்.

சிந்திக்கவும்

'சினிமாவினால் பலர் கெடுகிறார்கள். சினிமாவைப் பார்ப்போரில் பலரின் வாழ்வு கெட்டு விடுகிறது' என்று சிலர் கூறுகிறார்கள். சினிமாவினால் ஏராளமானவர்களுக்கு வாழ்வு கிடைக்கிறது. நாள் முழுவதும் உழைத்துவிட்டுவருபவர்களுக்கு ஓய்வு தரும் பொழுது போக்காக இருப்பது சினிமா. ஏராளமானவர்கள் பற்பல சினிமாத் துறையில் வேலை செய்து வாழ்வு பெறுகிறார்கள். கொட்டகை, ஸ்டுடியோ இவற்றுக்கருகே ஏராளமானவர்கள் பல கடைகள் வைத்துப் பிழைக்கிறார்கள். இப்படிச் சினிமாவினால் லக்ஷக்கணக்கானவர்கள்பிழைக்கும் போது, அதனால் வாழ்வு போகிறது; கெடுகிறார்கள் என்றால் அது தவறல்லவா?

வி. நாராயணசாமி,
பொன்மலை-திருச்சி.

பிரிவு வேண்டும்

தேசத்தில் பிரிவினை கூடாது என்று அரசியல் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் படத்துறையில் பிரிவினை தேவைப்படுகிறது. துண்டாடுவதை நான் குறிப்பிடவில்லை. போட்டி முயற்சிகூடாது என்கிறேன். சென்ற ஆண்டில் ஏராளமான படங்கள் திரையிடப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டுதான் வெற்றிபெற முடிந்தது. தரம் ஒருபக்கம் இருந்தாலும் நேரம் தான் இங்கே தோல்வியின் காரணமாக அமைந்தது. பொங்கல், தீபாவளி, வெள்ளிக்கிழமை என்று நாட்களைக் கணக்கிட்டுப் பலரும் ஒரே சமயத்தில் தங்கள் படங்களைத் திரையிட்டு விட்டார்கள். ஆகவே தியேட்டர் நெருக்கடி ஏற்பட்டது. நல்ல படங்கள் நகரங்களில் வெளியிடப்படாமல் தோல்வியுற்றன. சில, காலமின்மையால் விளம்பரப் படுத்தப்படாமல் தோல்வியுற்றன. சில ஒத்திட்டுப் பார்த்ததால் தோல்வியுற்றன. 'அடுத்த படம் புதிது. ஆகவே சென்ற வாரம் திரையிட்டதை நிறுத்த வேண்டும்' என்ற எண்ணம் தியேட்டர்காரர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே பெரும்பாலான படங்கள் வீழ்ச்சியுற்றன. ஆகவே தியேட்டர்கள் கிடைக்காமல் அவதிப்படுவதை விட, போட்டி மனப்

அளந்து பார்த்தால் எட்டடி. அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா? சிவகாமி பிக்சர்ஸ் "குமாரராஜா"வில் நடிகை சூர்யகலா.

பான்மையைக் குறைத்து நிதானமாகவும் நல்ல படங்களாகவும் குறைந்த அளவிலும் திரையிட்டால் அவை வெற்றி பெறும். தயாரிப்பாளர்கள் இதை நன்கு சிந்திக்க வேண்டும்.

இரா. ரங்கராஜன்,
மீஞ்சூர்.

எங்கள் ஆசை

சிவாஜி கணேசன் மனோகரனாக, சாக்ரடீஸாக, அசோகனாக, கட்டபொம்மனாக தோன்றி அந்தந்தப் பாத்திரங்களிலேயே வாழ்ந்து ரசிகர் உள்ளத்திலே அழியா இடம் பெற்றிருக்கிறார். இன்று கப்பலோட்டிய தமிழனாகவும் நடிக்கப் போவதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அவருக்குப் பட்டமோ சிவாஜி கணேசன். ஆகவே அவர் சிவாஜியின் பாத்திரத்திலே தோன்றுவதை என்னைப் போன்ற லக்ஷக்கணக்கான ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். எங்கள் ஆசை நிறைவேறுமா?

வி. ஜி. சங்கர்,
கோவை.

[இதைப்போல் ஏராளமான கடிதங்கள் நமக்கு வந்திருக்கின்றன. எல்லோர் ஆசையும் நிறைவேறும் நாள் அதிக தூரத்தில் இல்லை. ஆ-ர்.]

முன்னேற்றம் இதுதானா?

சமூக வாழ்வில் முன்னேற்றம் தேவை என்கிறார்கள் பலர். இவர்களில் பலரும் அரசியல் தலைவர்கள். சமீபத்தில் ஒரு படம் பார்த்தேன். தன் மகள் திருமண மாகாமல் கர்ப்பமுற்று விடுவதைக் கண்ட தாய், ஊராரின் வதந்திகளுக்குப் பயந்து, தானே தன் பெண்ணுக்கு ஒரு தாலியைக் கட்டி விடுகிறாள். இதனால் பழிபாவங்கள் நேராது என்று நினைக்கிறது அவளது தாயுள்ளம். ஆனால் அது நாட்டுக்கு நன்மை பயக்குமா என்பதைக் கதாசிரியர் சிந்திக்கவில்லை. இதனால் சமூக வாழ்வு கெடுமே தவிர, ஜாதி மதபேதங்கள் ஒழியாது.

எம். ஆறுமுகம்,
பாண்டமங்கலம்.

[கதாசிரியர் முன்பொரு சமயம் எழுதிய கதை இது. கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாகி விட்டது! ஆ-ர்]

உலகப்பிரசித்
பெற்ற தொண்
மற்றும் மார்
உபாதைகளுக்
குணமளிக்கு

பெப்ஸ்
வில்லைகள்
உட்கொண்டு
பிராங்கைடிஸ்
விரைவில் அகன்றது.

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்
வில்லைகளை உட்கொண்டு தொண்டைப். புண்
பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்
சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்
வில்லைகளைச் சுவைத்து குணமளிக்கும் ஆ
போன்ற அதன் சத்து வேலை செய்வதை உண
ங்கள் . . . வேதனையைக் குறைக்கவும கிருமிக
அகற்றவும் உதவியளிக்கிற

பெப்ஸ்
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளு
க்குக் குணம்
அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லி

FPY-56-TAM

சோல் ஏஜெண்டுகள்:
தாதா & கோ.,
86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

"அதோ பார். அவங்களுக்கு நம்ம கல்யாணம் செஞ்சிக்கறதுலே இஷ்டம்தான்"
—ஐரிஸ் மூவீஸ் முதல் தயாரிப்பில் டி. எஸ். துரைராஜ் - பி. எஸ். ஞானம்.

வேண்டாம் உபதேசம்

பத்திரிகைகளில் நட்சத்திரங்கள் எழுதும் கட்டுரைகளை நான் படிப்பதுண்டு. புதுமைகள் வேண்டும் என்றுதான் அவர்களில் பெரும்பாலோர், அதுவும் புகழ் பெற்றவர்கள் கூறுகிறார்கள். அந்தச் செய்தியே பழசாகி விட்டது. ஆனால் அதே கலைஞர்களில் சிலர் நடிக்கும் படங்களில் புதுமைகள் இல்லாததோடு, பழைய - சலித்துப்போன சம்பவங்கள் அதிகமாக இடம் பெறுகின்றன. இதில் போட்டி வேறு! இந்தக் கலைஞர்கள் மனம் வைத்தால் எதுவும் செய்ய முடியும்; செய்கிறார்கள். ஆனால் நல்லதை அல்ல. ஆகவே உபதேசம் செய்யப் புகுவதை விட்டுவிட்டு தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள இந்தக் கலைஞர்கள் முன் வரவேண்டும். அப்போதுதான் கலை கலையாக இருக்கும்.

டி. எஸ். சுகவனம்,
சேலம்.

உதவி கிடைக்குமா?

இங்கே எப்போதாவது தான் ஒரு தமிழ்ப் படம் வருகிறது. அதற்குக்கூட ஒரு காட்சிக்குத்தான் இடம் கிடைக்கும். காலை ஏழுமணி ஆட்டம் ஒன்றுதான் உண்டு. அதுவும் குளிர் காலத்தில், அந்த நேரத்திலே யாரால் போக முடியும்? ஆகவே இங்கே ஒரு தென்னிந்திய தியேட்டர் கட்டப்பட வேண்டியது அவசியம். அதில் தமிழ்ப் படங்கள் அதிகமான எண்ணிக்கையில் திரையிடப்பட வேண்டும். இதை இங்கே வந்திருந்த பொழுது சிவாஜி கணேசன் கூறினார். இதற்காக அவரும் சாவித்திரி கணேஷும் பண உதவி செய்தார்கள். இவர்களைப் பின்பற்றி மற்ற தென்னிந்திய நடிக, நடிகையரும் உதவினால் இங்கே ஒரு தியேட்டர் நமக்கென்று எழும்பிவிடும் நல்ல படங்களைத் திரையிட்டு இங்குவரும் அயல்

அதிக தொழில்கள்

மெட்ரிக்

முறைக்கு மாறுகின்றன

1958 அக்டோபர் முதல் தேதி, மெட்ரிக் முறைக்கு மாறுதல் தொடங்கியவுடன். சணல், இரும்பு-உருக்கு. ஆலைத் துணி. சிமெண்ட். காகிதம், உப்பு, இன்ஜீனியரிங். காப்பி. இரும்பு கலப்பில்லாத உலோகங்கள், கச்சா ரபபர் ஆகிய பல முக்கிய தொழில்கள் மெட்ரிக் எடைகள், அளவுகளை பின்பற்றத் தொடங்கின.

அதுமுதல் இன்னும் பல தொழில்களில் இம்முறை அமுலாக்கப்பட்டு வருகிறது.

கயிறு தொழிலில் 1959 அக்டோபர் முதல் மெட்ரிக் முறை அனுமதிக்கப் பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழிலிலும் 1959, நவம்பர் முதல்தேதி மாறுதல் ஆரம்பமாகிவிட்டது.

1960 ஏப்ரல் முதல் வனஸ்பதி மற்றும் பெயின்ட் தொழில்கள் மெட்ரிக்குக்கு மாறும்போது மாறுதலின் வேகம் இன்னும் அதிகரிக்கும்.

பெட்ரோலும். பெட்ரோலியப் பொருள்களும் 1960 ஏப்ரல் 1ந் தேதி முதல் லிட்டரிலும் மெட்ரிக் யூனிட் டிலுமே விநியோகிக்கப்படும்.

கஸ்டம்ஸ் மற்றும் சென்ட்ரல் எக்ஸைஸ் பிரிவும் 1960 ஆகஸ்டு முதல் மெட்ரிக் முறையை பின்பற்றும்போது. அதிக தொழில் களில் மாறுதல் நடைபெற்றதாகிவிடும்.

சுலபமான. ஒரே சீரான

மெட்ரிக் முறையை

பின்பற்றுங்கள்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 59/432

நாட்டவருக்கும் காட்டி தமிழ்மணம் பரப்ப முடியும். உதவி கிடைக்குமா?

அல்லி,
புதுடில்லி.

மனம் மாறுமா?

தமிழ்ப்பட ரசிகர்களின் ஒரு சாராரிடையே 'புராணம் குப்பை' என்ற தவறான அபிப்பிராயம் நிலவி வருகிறது. மாயா பஜாரிலும், கிருஷ்ணலீலாவிலும் அற்புதமான தந்திரக் காட்சிகள் இருந்தன. காத்தவராயனில் மந்திரக் காட்சிகள் இருந்தன. இவற்றை அபத்தம், குப்பை என்று ஒதுக்கினார்கள். தரக்குறைவாகப் பேசினார்கள். ஆனால் 'உலகிலேயே மிகச்சிறந்த தயாரிப்பாளர், டைரக்டர்' என்று பாராட்டப்பட்ட சிசில் பி. டிமிலி கோடிக்கணக்கான பொருட் செலவில் தயாரித்த 'பத்துக் கட்டளைகள்' படத்தில்வந்த தெய்வக் காட்சிகளை இதே ரசிகர்கள் 'அபாரம் அற்புதம் ஆஹா' என்று பாராட்டிப் போற்றி ஆரவாரித்தார்கள். தாய் தாராபுரத்தில் பிச்சையெடுக்கையில் பழனியில் அன்னதானம் செய்யும் தனயனைப் போலிருக்கிறது இவர்கள் செயல். இந்த மனப்பான்மை ஒழிந்தால் தமிழ்ப் படவுலகின் நிலை உயரும். ரசிகர்கள் மனம் அந்த அளவுக்கு மாறுமா - உயருமா?

ஆர். எம். பழனிசாமி,
திருப்பூர்.

செய்வார்களா?

ஜேம்ஸ் டீன் என்ற அமெரிக்க நடிகர் மூன்றே படங்களில் நடித்தார். திறமை மிக்க அவர் இறந்தபோது அமெரிக்க ரசிகர்கள் கதறினார்கள். ஜேம்ஸ் டீன் பற்றிய முழு நீளப்படம் கூட வெளியிடப்பட்டது. ஆனால் அவரை விடப் பல மடங்கிலும் உயர்ந்த கலைவாணரைப் பற்றியும் இப்படி ஒரு படம் வெளியிட நடிகர் சங்கம் முன்வர வேண்டும். செய்வார்களா?

பிரேமா,
சென்னை.


அருணாசலம்
பிக்சர்ஸ்
பொன்னித்
திருநாள்
காட்சிகள்









பொதுமக்களுக்குத் தேவையான எல்லா அம்சங்களையும் புகுத்தி, கதை, வசனம், தயாரிப்பு, டைரக்ஷன் ஆகியவைகளுக்கும் தானே பொறுப்பேற்று ஏ. கே. வேலன் நமக்களிக்கப் போகும் படம் ''பொன்னித் திருநாள்.''

நான் ரஸித்த காட்சி

இரும்புத் திரை

மில் முதலாளி மோகனரங்கத்தின் மாளிகையிலே ஒரே பரபரப்பு. முதலாளியைச் சந்தித்துப் பேச மாணிக்கம் செல்கிறான். ''பிரசவ கேஸ் நடக்கிறது. உள்ளே போகக் கூடாது'' என்கிறான் காவலாளி. மாணிக்கம் வெளியே நிற்கிறான். நர்ஸுகள் அங்கு மிங்கும் ஓடுகின்றனர். அறையை விட்டு வெளியே வருகிறார் டாக்டர். ''டாக்டர்!'' என்று ஜாடையால் ஏதோ கேட்கிறார்கள் முதலாளியும் அவர் மகளும். ''நான்கு'' என்கிறார் டாக்டர். நர்ஸ் ஒரு பேஸினை எடுத்துக் காட்டி அதன் மேல் மூடியுள்ள துணியை விலக்குகிறாள். அங்கே நான்கு நாய்க் குட்டிகள் இருக்கின்றன! நாய்க் குட்டிக்காக டாக்டரை வரவழைக்கும் முதலாளியைக் கண்டு சிரிக்கிறோம். அதே சமயம் தொழிலாளர்களுக்குப் பணம் தர மறுக்கும் அவர், நாய்க் குட்டிகளுக்காக டாக்டரை வரவழைக்கிறார். சிரிப்பூட்டும் அதே சமயம் சிந்தனையைக் கிளறும் இக் காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

சி. முத்துக்குமரன்,
கிழக்கு தாம்பரம்.

தொழிலாளர்களுக்குத் தீபாவளியை முன்னிட்டு போனஸ் வழங்க உத்தர விடுகிறார் முதலாளி மோகனரங்கம். கையொப்பமிட்டு விட்டு மானேஜர் கொடுக்கும் பணத்தை மற்ற தொழிலாளிகள் பெற்றுச் செல்கின்றனர். ஆனால் உண்மை ஊழியனும் நேர்மையாளனுமான மாணிக்கமோ பட்டியலில் கையெழுத்துப் பெறும் தொகையைத் தராமல் குறைவாகக் கொடுப்பதை வாங்க மறுக்கிறான். இது முறையல்ல என்று கண்டித்துக் கூறுகிறான். அத்துடன் விடாமல் யூனியன் தலைவனாக முன்னின்று இதை முதலாளிக்கும் தெரிவிக்கிறான். மேலிடத்தார் அறியாதவாறு சில்லறை சிப்பந்திகள் செய்யும் ஊழல்களை ஒரு உண்மை ஊழியன் எடுத்துக் காட்டி அம்பலப் படுத்தும் இக் காட்சியை நான் மிகவும் ரசித்தேன்.

கே. தங்கம்,
விழுப்புரம்.

மோகனரங்கம் தன் தாய்க்குத் துரோக மிழைத்தவர் என்றறிந்த ஜெயந்தி, அவரைப் பழிவாங்கும் நோக்கத்துடன் அவர் மில்லுக்குத் தீயிட்டு விடுகிறாள். நேர்மையே உருவான தொழிற்சங்கத் தலைவன் மாணிக்கம், அவள் செயலைத் தகாதது எனக் கண்டித்து அவள் இட்ட தீயையும் அணைக்கிறான். ஆனால் அவள் மேலும் தீயிட முயற்சிக்

சர்வாணியின் ''வெண்ணிலாவே நீ வாராய்'' படத்தில் கே. கண்ணன்.

கிறுள். அவளை அடித்து நிப்பந்தத்தைப் பிடுங்குகிறுன் மாணிக்கம். நேர்மையான தொழிலாளர் சங்கத் தலைவன் நாசவேலையில் ஈடுபடமாட்டான்; அந்த அழிவு வேலையைச் செய்வது தன் காதலியானுலும் அதைக் கண்டித்துத் தடுப்பான் என்ற அருமையான உண்மையை விளக்கும் இந்தக் காட்சியை யாவரும் ரசிக்கவே செய்வார்கள்.

கடத்தூர் ஏ. ராமனுதன்,
சென்னை.

மில்லின் இயந்திரம் பழுது படுகிறது. அதை இந்தியாவில் சரி செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. அப்போது அங்கே மாணிக்கம் தோன்றுகிறுன். "கலைநுட்பம் மிகுந்த தாஜ்மகாலை ஆக்கியோனும் தன் நிழலைக் காணக் கொடுக்காத தஞ்சைக் கோயிலைக் கட்டியோனும் காவிரிக்குக் கரையமைத்தோனும் நம் நாட்டில் உதித்தோர் தானே? இந்த இயந்திரத்தின் பாகத்தை மட்டுமல்ல, இந்த இயந்திரத்தையே உண்டாக்கும் திறன் படைத்

"பயந்து விடாதே! யார் வந்தாலும் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்கிருர் அவர். ஆனுலும் அவள் பயம் தெளிந்ததாகத் தெரியவில்லை! ஏ.எல்.எஸ். புரொடக்ஷன்ஸ் "திருடாதே" தமிழ்ப் படத்தில் 'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி.

தவர்கள் நம் நாட்டிலே ஏராளம்'' என்று நாட்டுப் பெருமையைவிளக்க விறுகொண்டெழும் மாணிக்கத்தின் பண்பு கண்டு பெருமிதமடைகிறோம். அத்துடன் இயந்திரத்தைச் சரி செய்து விட்ட அவனுக்கு முதலாளி வெகுமதி வழங்க வரும்போது அதை ஏற்க மறுத்து, ''பல ஆயிரக் கணக்கான இந்தியத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கல்லவா நான் நன்றி செலுத்த வேண்டும்!'' என்று மாணிக்கம் நன்றி மொழி பேசும் காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

எம். நாராயணன்,
சிதார் குண்டா.

சகோதரி

மீனாக்ஷியை அவள் கணவன், தன் நண்பர்களைத் திட்டி அனுப்பி விட்டாள் என்பதற்காகச் சினங்கொண்டு கர்ப்பிணி என்றும் பாராமல் கண்டபடி அடித்துப்போட்டு விட்டுப்போய் விடுகிறான். பிறகு அவன் தெளிந்து அவளிடம் மன்னிப்பு கேட்பதற்காக ஓடி வருகிறான். அவள் எழுந்து தள்ளாடித்தடுமாறி வந்து விழுந்து கிடக்கிறாள். அவன் நன் தவறுக்கு மன்னிப்பு கேட்க ஆரம்பிக்கிறான். ஆனால் அவள், இனி அவன் விருப்பத்துக்கு மாறாக நடப்பதில்லை என்று கூறி மன்னிக்கும்படிக் கதறுகிறாள். அவன் மனம் மேலும் புண்பட்டு ''மீனாக்ஷி !'' என்று கதறி விடுகிறான். ஒரு உத்தம மனைவியின் பண்பை விளக்கும் இந்தக்காட்சி, பெண்களின் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையால் கணவன் சீர்திருந்தி விடுவான் என்பதையும் விளக்குகிறது.

சுஜாதா.
சென்னை.

ஆனந்தக்கோனாரின் முயற்சியால் எல்லாம் நல்லபடி நடந்து விடுகிறது. யாவரும் ஒன்று கூடியிருக்கும்போது குப்பம்மாள் அங்கே வந்து ஆனந்தக்கோனாரிடம் மன்னிப்பு கேட்டுத் தன்னை ஏற்கும்படி ஜாடையாக வேண்டுகிறாள். அவன், 'இனி, நீ ஒழுங்கா நடத்துக்க. நீ என் சகோதரி' என்று கூறி அனுப்பி

''ஆட்டம் அழகாக இருக்கிறதா?'' என்று கேட்கிறாள் இந்தக் குறும்புக்காரி! - சுபாஷ் மூவீஸ் தயாரிப்பான ''ஆளுக்கொரு வீடு'' படத்தில் நடன நடிகை ரீடா.

விடுகிறான். வாழ்வில் தவறி விட்ட அவளை பணம், உறவு என்ற முறை காட்டி அவன் ஏற்றுக்கொண்டிருந்தால் அவன் பாத்திரத்தின் தூய்மை பழுதுபட்டிருக்கும். இந்தக்காட்சி அவன் சிறப்பை அதிகப்படுத்துகிறது. ஆகவே இதை நான் நன்கு ரசித்தேன்.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

சிங்காரம் காரியாலய பணத்தைக் கையாடி விடுகிறான். மானேஜர் அவன் கணக்கைச் சரி பார்க்காமலேயே கையெழுத்திட்டு விடுகிறார். பிறகு அங்கே ஆனந்தக்கோனார் வந்து, அவரை அலக்ஷியப்படுத்துகிறான். அவர் கோபிக்கிறார். அலக்ஷியமாக உட்கார்ந்து, கண்ணை மூடிக்கொண்டு, பொறுப்பில்லாமல் கையெழுத்திட்ட அவரைக் கடுமையாகப் பேசிவிட்டுச் செல்கிறான். அவன் யாரோ ஒரு மூன்றாமவன் தான். ஆனால் மானேஜர் அவ

னுடைய பேச்சிலிருந்துதான் உண்மையை அறிந்து மன்னிப்பு கேட்கிறார். பொறுப்பின்றி நடந்து கொள்ளும் காரியாலய சிப்பந்திகளுக்கு எச்சரிக்கை விடும் இந்த அருமையான போதனைக் காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

ஸ்ரீநிவாஸன்,
அனகாவூர்.

தன் மருமகளிடம் சென்று அவமானப்பட்டுத் திரும்பிய மாமனார், தன் மகள் மீனாக்ஷியின் வீட்டுக்கு வருகிறார். தன் மருமகன் தன் மகள் மீனாக்ஷியின் நகைகளை யெல்லாம் அடகு வைத்திருப்பதறிந்து, வேறு நகைகள் வாங்கி வருகிறார். தன் நகைகள் உள்ளே இருப்பதாக அவள் கூறுகிறாள். ஆனால் உண்மை அதுவல்ல. ஆகவே அவர் மிக அழகாக வட்டிக் கடையிலிருப்பதைவிட அவள் உடலில் இருப்பது நல்லது என்று ஜாடையாகக் குறிப்பிட்டு நகைகளைக் கொடுத்துவிட்டுப் போகிறார். குடும்பத்தின் நன்மையைக் கருதி தன் வேதனைகளை உள்ளடக்கிக்கொண்டு உபதேசிக்கும் ஒரு ஆதர்ச தந்தையின் பாத்திரத்திலே அந்தக் காட்சியில் அற்புதமாக நடித்திருக்கிறார் நாகய்யா.

இதை யார் தான் ரசிக்காமலிருக்க முடியும்?

எம். கே. ஆர்.,
செங்கற்பட்டு.

பாகப்பிரிவினை

தன் தம்பியின் மனமாற்றங் கண்டு வேதனைப்படும் கன்னையன், தன் திருமணத்திற்கு அவனை அழைக்கச் செல்கிறான். அதனுடன் உறவு மீளுமென்ற நம்பிக்கை அந்த அப்பாவிக்கு. ஆனால் சிங்காரத்தின் பேச்சைக்கேட்டு அவன் தம்பி மணி அர்த்தமில்லாமல் உளறுவதுடன், தன் செல்வநிலை காரணமாக ஒட்டிக்கொள்ள முயற்சிப்பதாகக் கூறுகிறான். கன்னையன் ஆத்திரமடைகிறான். 'நான் பிச்சையெடுத்துத் தெருவிலே செத்துக் கிடந்தாலும் கிடப்பனே தவிர, ஒரு வேளைகூட ஒன் சோத்தைத் தின்ன மாட்டேன்' என்று கூறுகிறான். சகோதர பாசத்தையும் தன் மானத்தையும் விளக்கும் இந்த அருமையான காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

ஜி. சுப்பிரமணியன்,
சென்னை.

இவர்களிருவரும் சிலை போல நிற்பதை அறியாமல் சிலைகளுக்கிடையே இவர்களைத் தேடுகிறார்கள் அங்குள்ள காவலாளிகள்! - மேகலாவின் "குறவஞ்சி"யில் சிவாஜி கணேசன் - மைனாவதி முதலியோர்.

Agfa

35mm and 16mm

Raw Cinefilm

for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS:
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE
POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B, 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors:

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

"ஓடாதே நில்" தமிழ்ப் படத்தில் புதுமுகம் சுசீலாதேவி.

கன்னையனுக்குக் குழந்தை பிறக்கிறது. உடனே பெருமகிழ்ச்சியால் துள்ளும் கன்னையன் வேதனையாலும் வெடித்துவிடும் இதயத்தோடு பொன்னியருகே செல்கிறான். 'நொண்டிக் குழந்தைதான் உனக்குப் பிறக்கும்' என்று பெரியம்மா சொன்னது அவன் செவிகளிலே எதிரொலிக்கிறது. நடுங்கும் கரங்களால் குழந்தையின் கை கால்களைத் தூக்கிப் பார்க்கிறான். நம் நெஞ்சம் நெகிழ்ந்து விடுகிறது இக்காட்சியில். தன் வேதனை தன் மகனுக்கு ஏற்படக்கூடாது என்ற பெற்றவனின் புத்திரபாசத்தை விளக்கும் அற்புதமான காட்சி இது. சிவாஜி சிறப்பாக நடித்திருக்கிறார்.

மனோ,
பொள்ளாச்சி.

வைத்தியலிங்கத்திற்கு தன் சகோதரனின் மூத்த மகன் கன்னையனிடம் அளவற்ற பாசம். ஆனால் துரதிருஷ்ட வசமாக அவனுடன் சேர்ந்து வாழ முடியாமல் போய்விடுகிறது. கன்னையன் குழந்தையுடன் கொஞ்ச ஆசைப்படுகிறான். ஆனால் மனைவியின் நினைவு வந்ததும் பயமும் வேதனையும் அடைகிறான். அப்போது கன்னையன் தன் குழந்தையுடன் வேலிக்கு அந்தப்புறம் வருகிறான். தன் பெயரே அதற்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதறிந்து வைத்தியலிங்கம் மகிழ்ந்துபோய் குழந்தையை வாங்கிக் கொஞ்சுகிறான். உறவு முறை எதனால் பாதிக்கப்பட்டாலும் குழந்தைப்பாசம் என்பது பிரிக்கமுடியாத ஒன்று என்பதை விளக்கும் இந்த அருமையான காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

ஆர். பி. ஈஸ்வரன்,
பெங்களூர்.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
T.S.R'S
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

லைட்பாய் மாணிக்கம்

சொல்லாத விவரங்கள்

ஸார், வந்து ஸார், என் பேரு 'டேப்' மாணிக்கம்ங்க. என் பரட்டைத் தலையிலே கந்தல் ஒண்ணை டேப் மாறி நான் சின்னதுலே கட்டுவேனுங்க. அதனாலே 'டேப் மாணிக்க' மாயிட்டனுங்க.

நான் வந்துங்க ஸார், லைட் பாயா ஆன கதையே படா தமாசுங்க! எங்கப்பன் டீ கடை பக்கத்திலே காய்கறி கடைவச்சிருந்தாரு. அதுக்குப் பக்கத்துலே ஒரு எலெட்ரிக் கம்பெனிங்க. எங்கப்பனோட நான் போவனுங்க. என்னைக் கண்டுகிட்ட எலெக்ட்ரிக்கடை முதலாளி 'ஷாக்' மாறி என்னைப் புடிச்சுட்டாருங்க. அங்கயே அப்படியே இருந்தனுங்க. சம்பளம்னு கொடுக்கக் காணோங்க.

ஒரு நாள் எங்கப்பன் வீட்லே சொல்லி சம்பளம் கேட்கச் சொன்னாருங்க. என். எஸ். கிருஷ்ணன் நாடகத்துலே ஒரு படா தாமாஷ் வருதுங்க "சம்பளம்னு ஒண்ணும் போடலை; நான் கேக்கற போதும் குடுக்கறதுல்லே" அப்படீன்னு வருங்க. அதே மாதிரிதான் சம்பளம் கேட்ட என் கதையும் ஆயுடுச்சி.

அப்போங்க வந்துங்க, சினிமாலே நடிக்க ஆளுவேணும்னு சொன்னாங்க. எஷ்ட்ரா வேஷங்க. நான் போனனுங்க. போன இடத்துலே தான் லைட் பாயா ஆள் எடுக்கறதா கேள்விப் பட்டனுங்க. இந்த எல்டிரிக் கம்பெனி அனுபவம் பத்திச் சொன்னனுங்க. நடிக்கவந்த என்னெ லைட் பாயின்னுட்டானுங்க. அன்னேலே நந்துங்க நான் 'லைட்பாய் மாணிக்க' மாயிட்டனுங்க.

நானும் எட்டு பத்து வருசமா இந்த ஸ்டுடியோலே இருக்கனுங்க. பாலத்து மேலே நடக்கற மாறி, பொய் விடுங்க, பங்களாங்க மேலே பலகை போட்டிருப்பானுங்க. அதுலே லைட்டை வச்சிக் கட்டியிருப்பானுங்க. போட்டோப் பிடிக்கிற காமிராக்காரர் சொல்றபடி அந்த பாலத்து மேலே ஓடியாடி லைட்டைப் போடணுங்க; இடம் மாத்தி வைக்கணுங்க. கீழே கூட, தரையிலே லைட்டை ஸ்டாண்ட்லே நிக்க வச்சிருப்பாங்க.

நானுங்க லைட் போட்டோதான் சூட்டிங் நடக்கும்; லைட் போடல்லேனா நடக்கறதும் வேறு விஷயமாகத்தானிருக்கும்!

இந்த எட்டு பத்து வருசத்துலே படா படா கில்லாடி ஆக்டர்களைப் பாத்திருக்கனுங்க; எம்மாஞ் சூட்டிங்கு பாத்திருப்பேன் தெரியுமுங்களா? ஆனால் அப்போ நடந்தமாதிரி இப்போ இல்லைங்க; எல்லாமே மாறிப் போச்சுங்க.

முன்னேங்க டைரக்டரு தயாரிப்பாளரைக்கண்டு பயப்படுவாரு; நடிகருங்க டைரக்டருக்குப் பயப்படுவாங்க. இப்போ விஷயமே தலைகீழுங்க.

காலைலே சூட்டிங்னா, கத்தை பீடி வாங்கி ஜேபிலே போட்டிக்கினு நான் கால் நடையா வந்துடுவேனுங்க. நான் போயி செட்டிலே சுத்திப்பூட்டு, அரட்டை அடிக்க வெளியே வந்துடுவனுங்க. பீடி ரெண்டை ஊதிட்டு உள்ளே போவனுங்க. புரொடக்சன் மானேஜரு வருவாருங்க. அவரு அப்பாவிங்க! 'யாரும் வரலையா? இன்னிக்கு சூட்டிங் இருக்குன்னுவது தெரியுமா'ன்னு அவரா கத்திப்பாருங்க. பின்னே வெளியே போயிடுவாருங்க!

அவருகிட்ட கடன்வாங்கி ஒரு பிடி பிடிப்பனுங்க.

மணி பத்தாயிடும். உதவி டைரக்டர் வருவாரு. காமிராக்காரர் வருவாரு. அவங்கல்லாம் ஏதோகொஞ்சம் சிரிச்சு தமாஷ் பண்ணிக்குவாங்க. பின்னாலே ஏதோ கலந்து பேசி ஸெட்டுக்கு வருவாங்க. ''லைட்பாய்! அந்த லைட்டை இங்கே போடு; இதை அங்கே போடு'' அப்படி இப்படின்னுங்க 'காமிரா உதவி' சொல்லுங்க. பிற்பாடு காமிராக்காரர் வந்து அதைமாத்தி வேறுவிதமா- முன்னாலே இருந்தபடி மாத்துவாருங்க!

மணி பதினென்னு அடிக்குங்க. ஹீரோயினி வந்தாச்சுன்னு டைரக்டர் உள்ளே ஓடிவருவாருங்க. எக்ஸ்ட்ராக்கள் எல்லாம் ஸெட்டிலே என்னை மாதிரி காலேலே வந்துப் பூடுவாங்க.

சமூகப் படம்னு பதினெண்ணரைக்கு ஹீரோயினி வந்துடுங்க. ராஜா ராணி கதைன்னு பன்னெண்டாகுங்க. அழகு பண்ணிக்க, அலங்காரத்துக்கு ஒரு மணியாவது பிடிக்குமுங்க. இதே கதைதான் ஹீரோவுர். சில சமயம் இந்தச் சமயத்திலே கூட 'கான்ஸல்னு' அவங்க வூட்டு வேலைக்காரன் போன் பண்ணிப்பிடுவாங்க.

இப்போ, ஒரு ஹீரோயினிங்க. நான் பாத்த அந்தநாள்லே சின்ன நடிகைங்க. ''சௌக்யமா மாணிக்கம்''னு கேட்பாங்க. இப்ப நானா ''வணக்கம்''னு சொன்னாலும் பாக்கறதில்லேங்க! இனம் கேட்டுடுவேன்னு பயந்துட்டாங்களோ; அல்லது அவங்களோட ஹீரோவா போடச் சொல்லுன்னு கேட்டுடுவேனேன்னு நினைச்சுட்டாங்களோ.

ஒரு சமயங்க ஹீரோ வந்தாருங்க. நான் மேலே இருந்து லைட் போட்டுக்கிட்டிருந்தனுங்க. ''ஏய் மாணிக்கம் என் மூஞ்சிலே லைட்டே விழலே. திருப்பேன்''னாருங்க. காமிராக்காரர் சொல்றபடிதான் நான் கேட்கணுங்க.

''எல்லாம் காமிராக்காரருக்குத் தெரியும்னு'' சகஜமா சொன்னனுங்க. உடனே அவரு தன் கூட வந்தவங்ககிட்ட என்னமோ சொன்னாருங்க. அவரு தயாரிப்பாளருகிட்டே ஓடிப்போனாருங்க. தயாரிப்பாளர் டைரக்டருக்கிட்டே பறந்து வந்தாரு. டைரக்டரு காமிராக்காரர் காதில் ஏதோ முணுமுணுத்தாரு. காமிராக்காரர் என்னைக் கூப்பிட்டு வெளியே போகச் சொல்லிட்டாருங்க. அப்புறம் ஷூட்டிங் முடிஞ்சதும், ''மாணிக்கம், நீ சொன்னது சரிதான். இருந்தாலும் நம்ம குடுமி அவரு கையிலே தானே இருக்கு'' அப்படின்னு சொல்லி என்னை காமிராக்காரர் தட்டிக்கொடுத்தாரு. டைரக்டரும் கூட இருந்து 'ஆமாம்' போட்டாரு.

இந்த ஹீரோ, ஹீரோயினி வந்தாலே ஸெட்டே கலகலத்துடுங்க.

ஒரு சமயம் எங்களுக்குள்ளாரப் பந்தயம் கட்டிக்கிட்டமுங்க. இன்னிக்கு ஹீரோதான் லேட்டா வருவாருன்னேங்க. இன்னொரு பையன் ஹீரோயினின்னுங்க. முடிவு என்ன ஆச்சு தெரியுங்களா? அன்னைக்கு ரெண்டுமே வரலைங்க!

ஒரு நடிகரு 'மாணிக்கம்'னு கூட்டாரு.

"அக்கா...அக்கா! நான் ஒன்னை ஒண்ணு கேக்கறேன். கோவிச்சுக்காமெ 'சரி'ன்னு சொல்லுவியா!"—இந்திரா பிலிம்ஸ் தயாரித்து வரும் "கலீர் கலீர்" தமிழ்ப் படத்தில் இ. வி. சரோஜா - அஞ்சலிதேவி.

நான் போனனுங்க. 'கையிலே சில்லறை இல்லே. உன்னண்டே இருந்தா போயி ரெண்டு சிகரெட் வாங்கியா'ன்னாருங்க. நான் வூட்டுக்குப்போக வச்சிருந்த காசை எடுத்து ரெண்டு சிகரெட் வாங்கிக் கொடுத்தனுங்க. அன்னைக்கு நான் நடந்தே போனனுங்க. வழியிலே அவரு கார்லே தனியா போறதையும் பார்த்தனுங்க. என்னைப்பார்த்து அவரு சிரிச்சாருங்க. நான் சலாம் வச்சேன்.

இது நடந்து ரொம்ப ரொம்ப நாள் ஆயிடுச்சி. நானும் அவரும் பல தடவை பாத்து பேசிக்கிட்டமுங்க. இன்னும் அவர் அந்த 'சிகரெட் சில்லறை'யைத் தரலைங்க. எனக்கும் அதை' நினைவுபடுத்திக் கேட்க வெக்கமாயிருக்குங்க!

எனக்குத் தெரிஞ்சிங்க எடுத்த நல்லதையெல்லாம் விட்டுட்டு, மீதியைத்தானுங்க காட்றானுங்க. அதனாலேதான் படம் ஓடமாட்டேங்குதுங்க. கதைலேகூட புது 'ஐடியா' கொறச்சலுங்க.

கதாசிரியர் வந்து எழுதறது ஒண்ணுங்க; ஸெட்டிலே அதை அப்படியே மாத்திப்புடறாங்க. அவரு 'ஐடி'யாவெ விட, வெளியார் 'ஐடி'யாதான் அதிகங்க. ஆனா படம் படுத்துதுன்னா, அவரு பேரு தாங்க அடிபடுது! பாவங்க கதாசிரியரு!

இதெல்லாம் சொன்னா யார் சார் கேட்கறாங்க?

"போடா! லைட்பாய்"ன்னுடு வாங்களே!

— ஸா.

வேலையில்லாதவர்களுக்கு லாபகரமான வேலை



அனுபவம் வாய்ந்த உள்ளூர் நபரின் திறமையான நிர்வாகமும், தேர்ச்சியடைந்த தொழில் ஸ்தாபன அமைப்பும், ஒரிஸ்ஸாவில் பூரி ஜில்லா, டைஸ்பூர் கிராமத்தினருக்கு லாபகரமான வேலை வாய்ப்புகள் அடைய புதிய வழிகள் வகுத்துத்தந்துள்ளன.

அக்கிராம வாசியான அர்ஜுன்தாஸ், பல நலன்தரும் ஒரு கூட்டுறவு சங்கத்தை தொடங்கினார். அச்சங்கம் கிராமத்தில் வேலையில்லாதவர்களுக்கு தற்போது மரத் தச்சு வேலையில் பயிற்சி அளித்து வருகிறது. அவர்கள் நாற்காலிகள், மேஜைகள், ஜன்னல்கள், கதவு நிலைகள் ஆகியவைகளை தயாரித்து அரசாங்கம் மற்றும் இதர பொது ஸ்தாபனங்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

சங்கத்தால் தொடங்கப்பட்ட கயிறு தொழிலும், இம்மாதிரியே உபயோகத்துடன் பணிபுரிந்து வருகிறது. கயிறுகள், கயிற்றுப்பாய்கள் மற்றும் இதர பொருள்களை சுற்றுப்புறகிராமங்களில் விற்பனைக்காக தயாரித்து அளித்து வருகிறது.

கிராம தொழில்களுக்கு ஊக்கமளியுங்கள்—அவை அதிக வேலை வாய்ப்பும் அதிக வருமானமும் அளிக்கும்.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

DA 59/314



என். பி. பிலிம்ஸார் வெளியிடவிருக்கும் மஹேஷ் பிக்சர்ஸாரின் "ரோட் நெ. 303" ஹிந்திப் படத்தில் ஆடலழகி ஹெலனும் மொஹமதும்.

வெட்டுங்கள் / வெட்டுங்கள்

சகோதரி

மீனாக்ஷி, தன் கணவன் அறையில் குடித்து விட்டுக் கும்மாள மடிக்கும் அவனது நண்பர்களை வீட்டை விட்டு விரட்டி விடுகிறாள். இதனால் வெகுண்ட சிங்காரம் அவளை நையப் புடைத்து விட்டுச் சென்று விடுகிறான். அதன் பிறகு அவள் மயக்கம் தெளிந்து எழுந்து ஒரு நீண்ட பாடலைப் பாடுகிறாள். சிங்காரம் தவறுணர்ந்து கிளம்பி வீட்டுக்கு வரும் வரை அப்பாடலைப் பாடுகிறாள். இது விறுவிறுப்பைக் குறைத்து விடுகிறது. ஆகவே இப் பாடலை வெட்டி விடலாம்.

ஏ. கே. அருணாசலம்,
திருச்சி.

பாகப்பிரிவினை

புலி வந்திருப்பதாகப் பேசிக் கொண்டு அங்கு மிங்கும் ஓடுகிறார்கள் ஊர் மக்கள். தன் கணவனைத் தேடி, அவனால் எதுவும் ஆகாதே என்பதற்காக ஓடுகிறாள் பொன்னி. புலி ஒரு மரத்தடியிலே நின்று ஏறவும் முயற்சிக்கிறது. மரத்தின்மேலே பார்த்தால் கன்னையன்! அவனால் தாலி கட்ட முடியவில்லை; அவனால் தண்ணீர் இழுக்க முடியாது; அவனால் சரியாகச் சாப்பிடக் கூட முடியாது; குளிரும்போது அவனால் சரியாகப் போர்த்துக் கொள்ளக் கூட முடியாது. ஆனால் அவன் அழகாக ஒரு மரத்தின் மேலேறி உட்கார்ந்து கொண்டிருக்கிறான்! இந்தக் காட்சி வெட்டப் படவேண்டும். ஏதாவது குடிசைக்குள் அவன் நுழைந்து உட்புறம் தாளிடுவதாகவும் தன் இரையை இலகுவில் விட்டுவிட விரும்பாத புலி குடிசையைப் பிராண்டும் போது பொன்னி வருவதாகவும் காட்டி யிருக்கலாம்.

ஜி. சுப்பிரமணியன்,
சென்னை

"இந்த டிரஸ் அணியவும் கழற்றவுமே நேரம் சரியாக இருக்கிறது!" என்கிறார் அவர்! மதராஸ் பிக்சர்ஸ் "செந்தாமரை"யில் எஸ். வரலக்ஷ்மி, முஸ்தபா.

இரும்புத்திரை

மாணிக்கத்தின் தாயார் இறந்து விடுகிறாள். அவளைப் பாடை கட்டித் தூக்கிப் போவதும் சங்கு ஊதுவது முதலியன செய்வதும் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கின்றன. சாவுக்காட்சிகளை இப்படி முழுசாகக்காட்ட வேண்டியது அவசியம் தானா? இதை வெட்டி விடுவதால் எதுவும் கெட்டுப் போய்விடாது. செய்வார்களா?

கே. வாஞ்சீஸ்வரன்,
அருப்புக்கோட்டை.

"நான் ஆம்பிளை மாதிரி இல்லையா? போலீஸ்காரி வந்தா உடனே டாக்ஸிகாரியும் வரவேண்டாமா?," என்கிருளா இவள்? பயனீர் பிலிம்ஸ் "கேப்டன் ரஞ்ச"னில் ஜோதி.

பாகப்பிரிவினை

கணவனுக்குப் புலியினுல் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற பயத்துடன் ஓடுகிருள் பொன்னி. அப்போது மரந்தடியிலே புலி. மரத்தின் மேலே கன்னையன் இருக்கக் கண்டு கூச்சலிடுகிருள். உடனே புலி ஓடி விடுகிறது! கன்னையன் கிடைக்காத ஆத்திரத்திலே பொன்னியைக் கொன்று விட்டுத் தூக்கிப் போயிருக்கும் அந்தப் புலி. ஆனுல் இங்கே ஓடி விடுகிறது! இந்தப் புலிக் காட்சிகளே அலுத்து விட்டன. இதை வெட்டிவிட வேண்டும். பொன்னியுடன் பலர் கழி, கம்புகளுடன் வருவதாகக் காட்டியிருக்க வேண்டும். 'ஆங்கிலப்படப் புலி'தானே என்று அலக்ஷியமாக இருந்து விட்டார்கள் போலும்!

எஸ். சம்பந்தன்,
திருச்சி.

இரும்புத்திரை

ஜெயந்தியின் தாயாருக்கு உடல் நிலை மோசமாகி விடுகிறது. உடனே அவள் டாக்டரிடம் ஓடுகிருள். ஆபத்தில் தன்னிடம் வரும் ஒரு யுவதியிடம் டாக்டர், ரூபாய் பத்து பீஸ் கொடுத்தால்தான் வரமுடியும் என்று கண்டித்துக் கூறுகிருர். இது சமீபமாக நடைபெருத ஒரு நிகழ்ச்சி. டாக்டர்களில் பெரும்பாலோர் வந்து சிகிச்சை செய்த பின்தான் பணம் கேட்கிருர்கள். அல்லது மருந்து வாங்கித் தரும்படிக் கூறுகிருர்கள். இன்றைய நிலை அது. டாக்டர் ஆபத்தில் காக்கும் கண்கண்ட தெய்வம். அவருக்கு இழுக்கு தரும் இக்காட்சி படத்திற்குச் சுவை கூட்டாததால் வெட்டிவிடலாம். ஓரிருவர் அப்படி யிருப்பதாகக் கொண்டாலும் சமூக நன்மையை முன்னிட்டு இப்படிக் காட்டாமலிருக்கலாம்.

பி. ராமதுரை,
மேலமையூர்.

சகோதரி

ஆனந்தக்கோனர் இந்தக் கதையின் சூத்திரதாரியாகி விடுகிருர். அவர் சில இடங்களில் பேசும் வசனங்கள் வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்கின்றன என்ருலும் தமிழகப் பண்பை விளக்குவனவாக இல்லை! சில வார்த்தைகள் மனதிற்கு வேதனை தருவதாகக்கூட இருக்கின்றன. இவைகளில் சில வெட்டப்படவேண்டும்.

ஆர். சேதுராமன்,
திருநெல்வேலி.

இரும்புத்திரை

ஜெயந்தி என்ற ஒரு இளம் பெண் டாக்டரிடம் உதவிக்கு ஓடி வருகிருள். 'தாயாருக்கு உடம்பு சுகமில்லை. வரவேண்டும்' என்று கெஞ்சுகிருள். டாக்டர் பத்து ரூபாய் பணம் தேவை என்கிருர். பின்னுல் சிறிது தூரத்தில் மாணிக்கம் என்ற ரிக்ஷாக்காரன் இருக்கிருன். அவன் காதில் இவர்கள் சம்பாஷணை விழுந்

மகேஸ்வரி பிக்சர்ஸ் 'ராக் - என் ரோ'லில் எம். ஆர். ராதா

திருக்க நியாயமில்லை. அப்படியே வைத்துக் கொள்வோம். அவன் சொல்லி வைத்தார்ப்போல் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொண்டு வந்து டாக்டரிடம் கொடுக்க முற்படுகிருன். ஒரு ரிக்ஷாக்காரன் பத்து ரூபாய் கொடுப்பதாகக் காட்டியிருப்பது சாத்தியமா? உழைத்து ஓடாகும் நிலை அவனுக்குப் பின் ஏன் வருகிறது? நான் ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு, மீதியைப் பிறகு தருகிறேன் என்ருல் நம்பும்படியாக இருக்கும். இந்தக் காட்சியை வெட்டிவிட்டு, அவன் டாக்டருக்கு அடிக்கடி சவாரி போவதாயும் அதனுல் அவன் அந்தப் பணத்தைக் கொடுப்பதாகக் கூறி டாக்டர் அதை ஏற்பதாயும் காட்டலாம்.

சப்பத்,
சென்னை.

இரும்புத்திரை

ஜெயந்தி சைக்கிளில் செல்கிருள். மாணிக்கம் அவளைப் பின் தொடருகிருன். நடுவீதியில் சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு இருவரும் செல்கிருர்கள். நடுவீதியில் - அது ஊருக்கு வெளிப்புறமாக இருந்தாலும், படித்தவர்கள் இப்படிச் சைக்கிளைப் போட்டுச் செல்வது புறம்பானதாகத்தான் இருக்கிறது. இதை மாற்றி எடுத்திருக்கலாம்.

காதலுக்குக் கண்ணில்லை என்பது உண்மையாக இருக்கலாம். அதற்காகப் படித்தவர்கள் பண்பில்லாதவர்களாக இருப்பார்கள் என்று காட்டவேண்டுமா? வீதியில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை படித்தவர்கள் பின் பற்றுவதில்லை என்று காட்டப்படுவது அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல.

செங்கமலம்,
வாணியம்பாடி.

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள், வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர், ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க நீலா இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.

பேசும்படம்

போட்டோ ஆல்பம்

இந்தக் கனத்தைத ஒரு ஆடவன் தூக்கினுல்
அலுத்துக் கொள்வான். ஆனுல் இவளுக்
குத்தான் இத்தனை நகைகளையும் சுமந்து
கூட எவ்வளவு மகிழ்ச்சி பார்த்தீர்களா ?
சரோஜாதேவி இப்படி அழகாகச் சிரிப்பது
ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரிக்கும் "எல்லா
ரும் இந்நாட்டு மன்னர்" தமிழ்ப் படத்தில்.

"இப்படி ஏராளமான ஆபரணங்களையும் கவர்ச்சிகரமான ஆடைகளையும் அணிந்தி ருக்கிறேமே, அவர் வந்தால் இவற்றை ரசிப்பாரா, என்னை ரசிப்பாரா?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொள்ளுகிருள் இவள். உமா பிக்சர்ஸ் தயாரிக்கும் "சித்தூர் ராணி பத்மினி"யில் வைஜயந்திமாலா.

காணுததைக் கண்டு விட்டால் ஆச்சர்யம் விரியும் விழிகளில். ஆனுல் இங்கே இருப்பது போன்ற இளம் பெண் ஆச்சர்யப்படுவதானுல் அவளது 'அவர்' எதிர்பாராமல் அங்கு வந்து விட்டார் என்றுதானே பொருள்! வி. பி. டியின் 'மணிமண்டபம்' படத்தில் சாவித்திரி.

"யாரடா இவள், எங்கேயோ பார்த்தமாதிரி யிருக்கிறதே! கொஞ்சம் அழகாகக்கூட இருக்கிறாளே!" என்று யோசிக்கிறார், கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கும் இந்த வாலிபர்! கமால் சகோதரர்கள் ஏவி. எம். மில் மிக வேகமாகத் தயாரிக்கும் "தெய்வப் பிறவி"யில் சிவாஜி கணேசன்.

'நீதான் அழகானவள்' என்று ஒரு பெண்ணைப் பார்த்து நேரிடையாகச் சொல்லி விட்டால், அவளது ரோஜா மலர் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்து விடும். இங்கே இவளை நாணம் மூடக்காரணமும் இதுவாக இருக்குமோ? சுபாஷ் மூவிஸ் 'ஆளுக்கொரு வீடு' படத்தில் விஜயலக்ஷ்மி.

"என்னைப் பார்! என் அழகைப் பார்! என் விழியைப் பார்! என் விழி அழகைப் பார்!" என்று 'மங்கம்மா சபத'த்தில் வரும் பாட்டு, ஆடாமல் அசையாமல் கற்சிலை போல் நிற்கும் இவளைப் பார்த்ததும் நினைவுக்கு வருகிறதல்லவா? இந்திரா பிலிம்ஸ் 'கலீர் கலீர்' படத்தில் இ. வி. சரோஜா.

புகைப்பட நிபுணர் தன்னைக் கவர்ச்சிகர
மாகப் படமெடுப்பதற்காகக் கொடுத்த
'போஸ்'களில் இந்த யுவதி தரும் இதுவும்
ஒன்றுபோலும்! ஆனால் இது 'வில்லி'யின்
பார்வையல்ல! காதல் ததும்பும் பார்வை!
கமால் சகோதரர்கள் ஏவி. எம்.மில் தயாரிக்
கும் 'தெய்வப் பிறவியி'ல் எம். என். ராஜம்.

அகராதியில் உள்ள கவர்ச்சிகரமான, அன்பு ததும்பும் அத்தனைச் சொற்களும் இவர்களிருவரிடையே இப்போது உருண்டோடி விளையாடும் என்பதுமட்டும் நிச்சயம்! பி. வி. என். புரொடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பான 'நாக நந்தினி'யில் தேவிகா, வில்லன் எம். என். நம்பியார்.

ஆசை உள்ளத்தைக் கிள்ளும்போது இனம் தெரியாத ஒரு வகை பரபரப்பு எல்லைமீறி நம்முள் எழுகிறது. அடுத்து என்ன செய்யலாம் என்ற ஆவலும் பொங்கி வருகிறது. உள்ளே அமர்ந்திருந்த அஞ்சலிதேவியை, துள்ளி ஓடிவரச் செய்து திரையை விலக்கிப் பார்க்குமளவுக்கு செய்திருப்பது எது என்பதை அறியவும் நீங்கள் ஆவலாக இருப்பீர்கள். இதற்கான விடையையும் அஞ்சலிதேவி, சென்ற மாதம் தென்னுடெங்கும் திரையிடப்பட்டுள்ள தன் சொந்தப் படமான 'அடுத்த வீட்டுப் பெண்'ணில் வெளியிட்டிருக்கிறார்.

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கை வசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கை வசம் வைத்துக்கொண்டு தியானம் பண்ணும்போது. இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3-12 நயா பைசே. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத்தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)
JULLUNDUR CITY (Pb)

1960-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுதும் கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிமளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)
JULLUNDUR CITY (Punjab)

தங்கம் மனசு தங்கம்

அறிமுகம்

ராஜா, ராமு, தங்கம் மூவரும் பள்ளி நண்பர்கள். ராஜா பணக்காரன், புத்திசாலி. அவன் தாய் பார்வதி அவனைக் கண்ணும் கருத்துமாய் வளர்க்கிறாள். ராமு கொஞ்சம் மக்கு. தங்கம், பழனி என்ற ஆசிரியரின் மகள். ஏழைக் குடும்பம். மேட்ச் பாக்டரி முதலாளி பரமசிவத்தின் பேத்தி இந்திரா கொஞ்சம் படித்தவள், பகட்டுக்காரி, கர்வம் பிடித்தவள். அவர் மகன் கந்தன் ஒரு உதவாக்கரை.

காட்சி 1

முதல் சந்திப்பு

ராஜா மேல்நாடு சென்று டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பி வருகிறான். வரும்போது வழியிலே ஒரு நிமிஷம் தங்கத்தைச் சந்திக்க நேர்ந்தபின் வீடு திரும்புகிறான். பரமசிவம் முதலியோர் வரவேற்கின்றனர். பிறகு சந்தர்ப்பம் வரும்போது, தங்கத்தை அவள் வீட்டில் சந்திக்கப் போகிறான் ராஜா. அப்போது துளசி பூஜை செய்து கொண்டிருக்கிறாள் அவள்.

ராஜா : தங்கம்!

தங் : யாரு? வாங்க.

ராஜா : பாடித் துதிக்கும்போது நான் குறுக்கே வந்துட்டேன் இல்லையா?

தங் : பரவாயில்லே, பூஜை முடிஞ்சாச்சு.

ராஜா : ப்ரஸாதம்?

தங் : ஏழை வீட்டுக் கடவுள் ஏழைதான். அவர் எங்களுக்குக் கை நிறையக் கொடுத்தாத்தானே நாங்க அவருக்கு நெய்ப் பொங்கல் வைப்போம்?

ராஜா : நீ பழைய தங்கமில்லே!

தங் : உருவத்திலா? பேச்சிலா?

ராஜா : ரெண்டுலேயுந்தான். உம், தங்கம்! அன்னிக்கு என்னைப் பார்க்க எல்லாரும் வந்திருந்தாலும் அந்த இடத்திலே நீ இல்லாமே இருந்தது எனக்கு குறையாத்தான் இருந்தது.

தங் : பெரிய டாக்டரை பார்க்க பெரிய மனுஷங்கெல்லாம் வந்திருக்கும்போது இந்தச் சின்னவ வந்தா நல்லா இருக்குமா ?

நகர்ந்து திண்ணையில் தட்டை வைக்கிறாள்.

ராஜா : இந்தக் குறும்புப் பேச்சுத்தானே வேண்டாங்கறேன். தங்கம். இந்த வீட்டுத் திண்ணையையும் வாசலையும் பார்க்கும்போது நம்ம பாடம் படிச்ச நாட்களும், ஆடி ஓடி விளையாடிய நாட்களும் என் நினைவுக்கு வருது.

தங் : வேறே ஒண்ணும் நினைவுக்கு வல்லையா?

ராஜா : என்ன?

தங் : நீங்க பாடம் ஒப்பிக்காமப் போக, நான் உங்க தலையிலே குட்டுவேனே!

ராஜா : ஹி.. ஹி...அந்த பாக்கியம் இப்ப கிடைக்குமான்னு தான் பாக்கறேன்.

தங் : நாம் குழந்தைகளாக இருந்தால் ஓடியாடி விளையாடலாம்; இஷ்டப்படி பேசலாம். பெரியவங்களானதே தப்பு. உம்...இப்ப எவ்வளவு தடைகள்?

இருவரும் பின்பக்கம் திரும்புகிறார்கள். பழனி வருகிறார்.

பழ : இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்! அடே...வா தம்பி!

ராஜா : வணக்கம்.

பழ : வணக்கம். வந்து நேரமாச்சா? தங்கம்! தம்பிக்கு இளநீர் கொண்டா. உட்காரு தம்பி. நீ வீடு தேடி வந்ததிலே எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? வரவேற்பு நடந்தன்னிக்கு

பாத்திரங்கள்	
பிரேம்நசீர்	ராஜா
டி. கே. ராமச்சந்திரன்	ராமு
எம். என். ராஜம்	தங்கம்
விஜயகுமாரி	இந்திரா

கதை :

கே. பி. கொட்டாரக்கரா

வசனம் :

ஏ. எல். நாராயணன்

டைரக்ஷன் :

ஆர். எம். கிருஷ்ணசாமி

உன்னைப் புகழ்ந்து ஒரு பெரிய பாராட்டுப் பாடல் பாடலாம்னு இருந்தேன். குரல் கரகரப்பா இருந்துச்சு. கூடாதுன்னு விட்டுட்டேன்.

ராஜா : அதனாலே என்னையா...இன்னொரு முறை கேட்டுக்கிட்டா போவுது.

பழ : தம்பி. எங்கிட்ட படிச்ச நீ பெரிய மனுஷனானதிலே எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா? ஆனா பாவம், நம்ம ராமுதான் ஒரு வேலையுமில்லாமெ...

ராஜா : ஐயா! நீங்க கவலைப்படாதீங்க. ராமுவுக்கு வேலை வாங்கித் தர்ற பொறுப்பு என்னுடையது.

பழ : இதுதான் நட்பின் இலக்கணம்.

தங்கம் இளநீருடன் வருகிறாள். குடிக்கிறான் ராஜா.

பழ : ஏன் தம்பி இளநீர் துவர்க்குதா?

ராஜா : இல்லே, இனிக்குது. தங்கத்தின் கைபட்டதும் இதிலே ஒரு தனிச் சுவை கலந்திருக்கு.

பழ : பழைய குறும்பு போகுதா பார்த்தாயா? தம்பி, தமிழ்லே பல ஆராய்ச்சிகள் பண்ணியிருக்கேன் கேளு.

ராஜா : இல்லையா...எனக்கு கொஞ்சம் வேலை யிருக்குது. சாவகாசமா வர்றேன்.

விடை பெற்றுப் போகிறான்.

காட்சி 2

தாயும் மகனும்

பார்வதி தன் மகனிடம் அவன் திருமண விஷயம் பற்றிப் பேசுகிறாள்

பார் : எவ்வளவு நாளைக்குத்தான் நீ இப்படி ஒண்டிக் கட்டையா இருக்கப் போறே?

ராஜா : இப்படியே பேசி கல்யாண விஷயம் ஆரம்பிப்பீங்க. ஏண்டா இவன் சுதந்திரமா இருக்கான்னு பாக்கறியாம்மா...?

பார் : கேலியா பேசாதே ராஜா. பரமசிவம் பிள்ளை பேத்தி இந்திராவை உனக்குக் கொடுக்கறதாகப் பேச்சு.

ராஜா அதிர்ச்சி யடைகிறான்.

ராஜா : என்ன, இந்திராவா?

பார் : ஆமா...உங்கப்பா உயிரோட இருக்கும்போதே கொடுத்த வாக்கு

அது. அதைக் காப்பாத்தினுல்தான் அவர் ஆத்மா சாந்தி அடையும். என் கோரிக்கையும் அதுதாண்டா ராஜா. ஏன் பேசாமே இருக்கே?

ராஜா : ஒண்ணுமில்லேம்மா ... இவ்வளவு நாளா உங்கிட்டே சொல்லாம இருந்தேன். என்னை மன்னிச்சுக்க அம்மா. நம்ம தங்கத்தைதாம்மா நான் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்.

பார் : என்ன? தங்கமா? நம்ம பழனியப்ப புலவர் மகளா?

ராஜா : ஏம்மா...அந்தஸ்து தடுக்குதா? கௌரவம் குறுக்கே நிக்குதா?

பார் : அதெல்லாம் ஒண்ணும் இல்லேப்பா. உங்க அப்பா வாக்கே நம்பி உனக்கே இந்திராவை கொடுக்கறதுன்னு பல வருஷமா காத்திருக்காங்க. அவங்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னு...

ராஜா : பையனைக் கேட்டேன். பெண்ணைப் பிடிக்கலேன்னு சொல்லிட்டான்னு சொல்லம்மா.

பார் : இல்லே, பெரிய இடத்து விவகாரம். அங்கே பொல்லாப்பு வச்சிக்கிட்டா...

ராஜா : பொழைக்க முடியாதா? இல்லே, நான் டாக்டர் தொழில் செய்ய முடியாம கெடுத்துடுவாங்களா? நீ ஒரு பயந்தாங் கொள்ளி அம்மா.

ராஜா போய் விடுகிருன். பார்வதி யோசிக்கிருள்.

காட்சி 3

அப்பனும் மகளும்

தங்கம் வாசற்படியை அலங்கரித்துக் கொண்டிருக்கிருள்.

பழ : பாத்தியா, மறந்திட்டேன். வயசும் ஆயிடுச்சு. ஞாபக சக்தியும் ரொம்ப குறைஞ்சுபோச்சம்மா. இது என்னம்மா இது?...அலங்காரமா பண்றே? ஹி...ஹி ... ஏழைப்புலவன் வீட்டுக்கு ஏம்மா இதெல்லாம்?

தங் : ஏழ்மையிலும் அழகு இருக்குனும்பா.

பழ : தேனீ மாதிரி ரொம்ப சுறுசுறுப்பம்மா நீ...ஹி...ஹி...தாயைப்போல புள்ளே. உங்கம்மாவும் இப்படித்தான். என்னமோ, அவபோனது என் சக்தியே போனுப்போல இருக்கு.

தங்கம் அவர் அருகில் வருகிருள்.

தங் : என்னப்பா எப்பவும் அம்மாவுடைய சிந்தனைதானு?

பழ : இருக்காதாம்மா? வள்ளுவனுக்கு வாசுகிபோல எனக்கு அவ. உங்கம்மா உன்னை நல்லாப் படிக்க வைச்சு நம்ம ராமுவுக்கு கல்யாணம் பண்ணி வைக்கச் சொன்னு...

தங் : என்ன, ராமுவுக்கா?

பழ : ஏம்மா...அவனுக்கென்ன? மாமன்மகன். பாவம், வீட்டுச்சோறு திங்காம ஓட்டல்சோறு தின்னு உடம்பைக் கெடுத்துக்கிருன். அவனுக்கு ஒரு நல்ல காரியம் செய்து வைக்க வேண்டியது நம்ம கடமைதானேம்மா?

ராமு வருகிருன். பழனி அருகில் செல்கிருன். கட்டிலின் அருகில் நிற்கிருன்.

ராமு : மாமா...

பழ : அடே வா தம்பி. ஆயுசு நூறுடா...உனக்கு.

ராமு : ஆசீர்வாதம் இருக்கட்டும் மாமா. முதல்லே ஆன்னு வாயைத் திறங்க.



ராமு ஒரு பொட்டலத்தை பிரிக்கிருன்.

பழ: டேடேடே! என்னடா இது சின்னப்பிள்ளேங்க மாதிரி? யசோதா வாயைத்திறக்கச் சொல்லி கண்ணன் மண்ணைப் போட்டானும். அந்த மாதிரி நீ...

பழனியின் வாயில் ராமு தித்திப்பைப் போடுகிருன்.

ராமு: என்னபோடறேன் பாருங்க.

பழ: டேடே... அட இது இனிப்பு.

ராமு பொட்டலத்தை தங்கத்திடம் கொடுகிருன்.

ராமு: வேலேக்குச் சேர்ந்து விட்ட களிப்பு மாமா...ம்.

தங்: வேலேயா?

ராமு: ஆமாம் தங்கம். நம்ம ராஜா வோட சிபார்சுலே இந்திரா மேட்ச் பாக்டரியிலே எனக்கு உத்தியோகம் கிடைச்சிடுச்சு.

தங்: அப்படியா...அவர் ரொம்ப நல்லவர்.

பழ: மனுஷனிலேயே கடவுள் இருக் காருன்னு சொல்றுங்களே அதுதான் நம்ம ராஜா. குறள் போல அவன் குறை யாத வளமோடு வாழணும். தங்கம்! குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு கிட்டு வாம்மா.

அவள் வெளியேறுகிருள்.

பழ: உட்காரு தம்பி. தம்பி எண் ணியபடி எல்லாம் முடிஞ்சது. இனி நீ என் கன்னிமக கழுத்திலே தாலியைக் கட்டணும். அவ்வளவுதான். அதோட இந்தக் கிழட்டுப் புலவனுடைய கடமை யும் எம் மனேவியினுடைய ஆசையும் முடிவடையும்.

ராமு: மாமா கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம்?

பழ: அட பைத்தியம். உடலே மறைக்கத் துணிவேணும். உள்ளத்தை நிறைக்க ஒரு துணே வேணும்ன்னு....

ராமு: நீங்க சொல்றீங்க. அதை நானும் ஆமோதிக்கிறேன். மாமா! எனக்கு உத்தியோகம் கிடைச்ச செய் தியை என் நண்பர்களுக்கெல்லாம் சொல்லணும். நான் சொல்லிட்டு வந் திட்றேன். நான் வரட்டுமா மாமா?

அவன் எழுந்து போகிருன்.

பழ: தங்கம்...அட...நீ இங்கதான் நிக்கறையாம்மா. தங்கம்! நான் ராமு கிட்டே பேசிகிட்டிருந்ததை யெல்லாம் கேட்டியில்லே?

தங்: கேட்டேம்பா...அப்பா! எனக் கிப்ப கல்யாணமே வேண்டாம்.

பழ: வேண்டாமா?...அஞ்சு பத்து வருஷம் தள்ளிப்போடறதுக்கு நீ என்ன ஆம்பளேயாம்மா? நீ பொண்ணம்மா பொண்ணு.

தங்: நான் நிலேமறந்து பேசலேப்பா. எனக்குத் திருமணமே வேண்டாம். உங்களுக்கு நான் செய்யற கடமை யோடு என் ஆயுள் முடிஞ்சா அதுவே போதும்.

பழ: ஹி...ஹி...அட நீ என்ன ஔவையாராம்மா?

சின்னத்தம்பி வந்து தங்கத்தை பார்வதி அழைப்பதாகக் கூறுகிருன்.

இடையே

மணவாளன் பழைய பேப்பர் வியாபாரத்திலே ஆரம்பித்து,

மஞ்சள் பத்திரிகை வரை வந்து ஊராரை மிரட்டிப் பணம் பறித்துப் பணக்காரனுகிருன். உதவாக்கரையான கந்தசாமி அவனிடம் நட்பு கொள்ளுகிருன்.

காட்சி 4

பார்வதியின் பிரார்த்தனை

தங்கம் தன் வீட்டுக்கு வரும்போது எதிர்கொண்டழைக்கிருள் பார்வதி.

பார் : நானே உன்னைப் பார்க்கலாமின்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். உட்காரு.

தங் : பரவாயில்லே. என்னைப் பாக்க நீங்க வர்றதா? நான் என்ன அவ்வளவு பாக்கியசாலியா அம்மா?

பார் : நீ பாக்கியசாலிதான் தங்கம். ராஜா உன்னையே கல்யாணம் செய்துக்கணும்ன்னு ஒத்தக் கால்லே நிற்கிருன். உனக்கும் அவன் மேலே ஆசைதானே!

தங் : உம்...

பார் : உம். உன் அதிர்ஷ்டத்திலே நான் குறுக்கே நிக்க வேண்டியிருக்குது தங்கம்.

தங் : (திடுக்கிட்டு) என்னம்மா?

பார் : ராஜாவை நீ கல்யாணம் செய்துக்க முடியாது அம்மா...

தங் : என்னம்மா சொல்றீங்க?

பார் : அதிர்ச்சி அடையாதே தங்கம். மனசார நானே செய்யும் காரியமில்லே இது. இறந்துபோன என் வீட்டுக்காரர் எங்கிட்டே விட்டுப்போன பொறுப்பை நான் நிறைவேத்தறேன்.

தங் : என்னம்மா, பிள்ளைப் பருவத்திலிருந்து பழகி வர்ர எங்க ஆசையில் மண்ணைப்போடுன்னு அவர் சொன்ஞரா? ஒரு ஏழைப் பெண்ணுடைய உயிரைப் பறிச்சிடுன்னு அவர் சொன்ஞராம்மா?

பார் : கோபப்படாதே அம்மா!

தங் : கோபமில்லேம்மா. கொதிக்கிற இதயத்தின் குமுறல். எண்ணம் மண்ணுகும்போது ஏற்படும் வேதனை!

பார் : அழாதே அம்மா! ராஜாவினுடைய நல்வாழ்வை நீ விரும்பறவ தானே?

தங் : என் மனசு தெரிஞ்சிருந்தும் ஏம்மா இந்தக் கேள்வி கேக்கறீங்க?

பார் : காரணம் இருக்கு...தங்கம்... ராஜா லண்டன் போய் டாக்டருக்குப் படிக்கணும்ன்னு பிடிவாதம் பிடிச்சான். செல்லமா வளர்த்த பிள்ளைக்கு வீட்டுத் தொல்லைகள் தெரியக் கூடாதுங்கிற ஆசையிலே அவர் பரமசிவம் பிள்ளையிடம் கடன் வாங்கி ராஜாவை மேனடு அனுப்பி வச்சார். அந்தச் சந்தர்ப்பத்திலே பரமசிவம் பிள்ளை பேத்தி இந்திராவை ராஜாவுக்குக் கல்யாணம் செய்துக்கிறதாக வாக்குக் கொடுத்தார். நிறைவேற்ற வேண்டியது என் கடமையில்லையா?

தங் : வியாதிதான் மனுஷனைக் கொல்லும்ன்னு சொல்லுவாங்க. வார்த்தையே கொல்லுதம்மா.

தங்கம் நகர, பார்வதி தொடருகிருள்.

பார் : தங்கம், ராஜா இந்திராவை மணக்காமபோன ஏற்படும் ஆத்திரத்திலே பரமசிவம்பிள்ளை வட்டியையும் முதலையும் கேட்டுட்டா நிலைமை என்னுகும்? யோசிச்சுப்பார் தங்கம்?

தங் : நான் என்னம்மா சொல்லுவேன்?

பார் : கௌரவமாக வாழ்ந்த எங்க குடும்பம் தெருவிலே நிக்கவேண்டிய நிலைமை ஏற்படும். துன்பத்தின் சாயலே தெரியாத ராஜா, இந்த வேதனையில்

சிக்கினுல் ஏற்படும் விபரீதம் என்னுன்னு சிந்திச்சுப்பார் தங்கம். ராஜாவை மறந்துடம்மா...

தங் : போதும்மா...போதும்...

பார் : உன் ஒரே வார்த்தையிலே தான் தங்கம் இந்தக் குடும்ப கௌரவமே இருக்குது. என்னம்மா சொல்றே?

தங்கம் கிளம்புகிருள்.

பார் : நில்லு தங்கம், நாம் பேசிய எந்த வார்த்தையும் யாருக்கும் தெரியக் கூடாது.

தங்கம் தலையசைக்கிருள். பார்வதி சந்தேகத்துடன் அவளைப் பார்க்கிருள்.

இடையே

பரமசிவம் தன் பேத்தியை ராஜாவுக்கு மண முடிக்கத் தீர்மானிக்கிருர். அவர் மகன் கந்தசாமி தானே மணக்க விரும்புகிருன். இதனுல் அந்தக் குடும்பத்தில் ஒரே கலாட்டா. ராஜா, தங்கம் ராமுவை மணக்கத் தீர்மானித்த காரணமறிய முற்பட்டுத் தோல்வியுற்றுத் திரும்புகிருன். ராமு-தங்கம் திருமணம் நடைபெறுகிறது.

காட்சி 5

தங்கத்தின் கண்ணீர்!

ராஜா வாழ்க்கையையே வெறுத்து விட்டு அலேவதாக ராமு மூலமாகக் கேள்விப்பட்ட தங்கம் அவனைச் சந்திக்கிருள்.

ராஜா : ஆ...நீயா தங்கம்? நிஜமாகவே நீயா? நெனேவிலே வந்த உன் உருவமோ என்று எண்ணி நீரைக் கலக்கி விட்டேன். ஏன் இந்த நேரத்தில் இங்கு வந்தாய் தங்கம்?

தங் : உங்களைச் சந்திக்க.

ராஜா : என்னையா? யாருக்காவது உடல் நலமில்லேயா? மன்னிக்க வேண்டும் தங்கம். நான் டாக்டர் தொழிலே மறந்து நாட்கள் பலவாகி விட்டன. பிறர் வியாதியைத் தீர்க்கும் எனக்கும் என்னைப் பிடித்துள்ள மனே வியாதியை தீர்க்க மார்க்கம் தெரிய வில்லேயே.

தங் : டாக்டர்!

விம்முகிருள்.

ராஜா : என்ன தங்கம்? நீ ஏன் அழுகிருய்?

தங் : உங்களே இந்தக் கோலத்தில் பார்க்கும்போது என் உள்ளம் கலங்குகிறது. ஏன் இந்தப் பிரமையான போக்கு? எதற்காக இந்தத் தனிமை நிலே? ஏன் டாக்டர், ஏன்?

மண்டபத்திடம் செல்கிருன். கம்பத்தில் கரம் வைத்து வேதனேயோடு பேசுகிருன்.

ராஜா : காயத்தை உண்டாக்கி விட்டு வலியின் காரணத்தைக் கேட்கிருயே தங்கம். வேரை வெட்டிவிட்டு செடி ஏன் வாடுகிறது என்று கேட்கிருயே தங்கம்?

தங் : வேதனே நிறைந்த வார்த்தைகளால் என்னைக் கொல்லாதீர்கள். உங்கள் நலனே எண்ணி நான் செய்த காரியம்தான் அது. உங்களே இந்தக் கோலத்தில் காணபேன் என்று தெரிந்திருந்தால் நான் மணமேடையை நாடியிருக்கமாட்டேன். பிணமாகி யிருப்பேன் டாக்டர், பிணமாகியிருப்பேன்.

ராஜா : எனக்காக நீ ஏன் சாக வேண்டும்?

தங் : நீங்கள் வளமோடு வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையால்தானே நான் என் காதலேத் தியாகம் செய்தேன். அந்தத் தியாகத்துக்குப் பயனில்லே என்ருல் நான்வாழ்ந்துதான் என்ன பயன்?

ராஜா : தங்கம் அந்த முடிவுக்கு வந்துவிடாதே. என் ஆசிரியரின் மகள் நீ. என்னுல் உங்கள் குடும்பவிளக்கு அணைந்து விடக்கூடாது. அந்தப் பழியை என்மேல் போட்டுவிடாதே தங்கம், போட்டுவிடாதே.

தங் : வாழ்வை வெறுத்து, வேதனேயில் பைத்தியக்காரனேப்போல் நீங்களிருந்தால் அந்தப்பழி என்னே மட்டும் சேராதா? அதைப் பொறுத்துக் கொண்டு நான் மட்டும் வாழமுடியுமா?

ராஜா : தங்கம்! என்னே என்ன செய்யச்சொல்கிருய்? மாண்ட குழந்தையின் நினேவு மாதாவை வருத்துவது போல் உன் நினேவு என் நெஞ்சை அறுக்கிறதே. தங்கம், மனக் கொடுமையை மாற்றமுடியவில்லேயே.

தங் : நினேத்தோம் நடக்கவில்லே. எண்ணினேம் ஈடேறவில்லே. என்னேப்

பாருங்கள். பெண்ணுய்ப் பிறந்தநான் என் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, கரம் பிடித்தவரோடு களிப்போடு வாழ வில்லையா?...கண்யமான மனைவியாக இருக்க வில்லையா? ஆசைப்பட்ட தெல்லாம் முடிந்துவிட்டால் தெய்வமும் விதியும் இருக்கவேண்டிய அவசியமே இல்லையே.

ராஜா : தங்கம்!

தங் : உண்மை. நான் சொல்கிற படி நடந்தால் நீங்களும் வாழமுடியும். எங்கள் குடும்பமும் வாழமுடியும்.

ராஜா : என்ன தங்கம்?

தங் : இந்திராவை நீங்கள் மணக்க வேண்டும்.

ராஜா : தங்கம்! பிடிக்காத ஒரு காரி யத்தை செய்யச் சொல்கிருயே!

தங் : தவறு டாக்டர். இந்திரா உங் களை மணக்கப் பேராவல் கொண்டிருக் கிருள். என்னைப்போல் நீங்களும் நிம்மதி யாக வாழவேண்டும் என்ற என் கோரிக் கையைப் பூர்த்தி செய்யுங்கள்.

ராஜா : என்ன தங்கம்?

தங் : உங்கள் சகோதரியின் வேண்டுகோள்...மறுக்காதீர்கள். மறுத் தால் எனக்கு மன அமைதியிருக்காது. வேதனையால் நீங்களிருக்க அதே வேதனையால் நானும் துடிக்க நம் இருவர் வாழ்வும் கால நெருப்பில் கருகிப் போய்விடும்.

ராஜா : என்னுல் உன் வாழ்வு பாழா கும் என்ருல் அந்தக் கொடுமைக்கு நான் ஆளாக மாட்டேன்.

தங் : டாக்டர்!

ராஜா : இந்திராவை நான் மணந்து கொள்கிறேன்.

தங் : மனப்பூர்வமாகத்தானே சொல்கிறீர்கள்?

ராஜா : மனப்பூர்வமாக...

தங்கம் ஆனந்தக்கண்ணீர் வடிக்கி ருள். இருவரும் பிரிகின்றனர்.

இடையே...

தங்கம் இரு குழந்தைகளுக்குத் தாயாகிருள். இந்திராவும் தாய்மை யெய்துகிருள். ராமுவுக்கு வேலை போய் விடுகிறது. அக்குடும்பத்தை வறுமை வாட்டுகிறது. இந்திரா, வேலைக்காரி மூலமாக தங்கமும் தன் கணவன் ராஜாவும் மாஜி காதலர் கள் என்று தீர்மானித்து வேதனைப் படுகிருள். அது பொருமையாக மாறுவதால்தான் ராமுவின் வேலை போய் விடுகிறது. தங்கம் கூலிவேலை செய்தும், பழனி பாடம் சொல்லிக் கொடுத்தும் அக்குடும்பத்தை நிர் வகிக்கிருர்கள். வீட்டாருக்குத் தெரி யாமல் ராணுவத்தில் சேர்ந்து விடு கிருன் ராமு.

ராஜா அடிக்கடி தங்கத்தின் குடும் பத்துக்கு உதவிகள் பல செய்கிருன். இதனுல் இந்திரா பொருமிவிட்டின் அமைதியைக் குலைக்கிருள். ராமு ராணுவத்தில் சேர்ந்த விவரம்பற்றி தங்கத்துக்கு கடிதம் எழுதுகிருன்.

தவறுதலாக ராமு ராணுவத்தில் இறந்துவிட்டதாகத்தந்திவருகிறது. இந்த அதிர்ச்சியால் பழனி இறந்து விடுகிருர். ராஜா அவர்களைக் காப் பாற்றுகிருன். கந்தசாமியின் சேஷ்டையால் மணவாளன் தனது மஞ்சள் பத்திரிகையில் ராஜா, தங்கம் இருவரைப்பற்றியும் ஜோடி சேர்த்து ஆபாசமாக எல்லாம் எழுதுகிருன்.

காட்சி 6

இந்திராவின் கோபம்

வீட்டைவிட்டுப் பெட்டியுடன் கிளம்புகிருள் இந்திரா. தடுக்கிருள் பார்வதி.

இங் : மோகன்...மோகன்...மோகன்!

பார் : நில் இந்திரா! எங்கே புறப் பட்டே?

இங் : எனக்குச் சுதந்திரமில்லாத வீட்டிலே நான் இருந்து என்ன பிர யோசனம்?

பார் : இப்ப யார் உன்னை என்ன சொல்லிட்டாங்க?

இங் : யார் சொல்லலே? மாமியா ருங்கிற அதிகாரத்திலே உங்க கண்டிப்பு. புருஷங்கற அதிகாரத்திலே அவர் கண்டிப்பு. உங்க ரெண்டு பேருகிட்டே அடிமையா இருக்கவா நான் இந்த வீட்டுக்கு வந்தேன்?

பார் : இந்திரா! வயசாச்சே தவிர, இன்னும் பச்சைக் குழந்தையாத்தான் இருக்கே.

இரவில் தனியாக இருக்கும்
போதுதான் பார்த்துக்
கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்றாகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் மிக நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை. ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறை படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள், 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ. வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE
Durgiana (P.P.M.) Amritsar

இங் : ஆமா. பச்சைக்குழந்தையாத் தான் ஆக்கிட்டீங்க. ஒண்ணும் தெரியாத பொம்மையாத்தான் இருக்கச் செஞ்சுட்டீங்க.

பார் : என்ன இந்திரா இது?

இங் : தவறுதலா நடக்கற புள்ளையைக் கண்டிக்காம அவர் செய்யற அடாத காரியத்துக்கெல்லாம் கூட சேர்ந்து தாளம் போடறீங்க. நான் கேக்கப்போனா என் வாயை மூடறீங்க. தாயும் பிள்ளையுமா சேந்து நடத்தற இந்த திருகுதாள நாடகத்தை நான் ஏன் பாத்துக்கிட்டு இருக்கணும்? நான் போறேன், நீங்க இருங்க.

பார் : நான் இங்கே இருக்கிறதுனாலயா நீ போறேங்கிறே?

இங் : ஆமாம். நீங்க இருக்கிறவரைக்கும் இந்த வீட்டிலே நிம்மதி இருக்காது. அவருக்கும் பெண்டாட்டியோட அருமை தெரியாது. எனக்கும் அமைதி இருக்காது. சுருக்கமா சொல்லப்போனா இந்தக்குடும்பத்திலே சுகம் ஏற்படாது.

பார் : வீணா சந்தேகத்தாலே உன்னையே நீ வேதனைப் படுத்திக்கிறே இந்திரா. இனிமே உங்க விஷயத்துலே நான் தலையிடமாட்டேன். ஏதாவது உன் மனசு புண்படும்படி பேசியிருந்தா என்னை மன்னிச்சுக்கம்மா. நீ எங்கேயும் போகவேண்டாம். இங்கேயே இரு. கூடிய சீக்கிரம் நானே போயிடறேன்.

இந்திரா பெட்டியுடன் உள்ளே போகிறாள். வேதனையுடன் பார்க்கிறாள் பார்வதி.

இடையே

மணவாளனின் அக்கிரமம் அளவுக்கதிகமாகி விடுகிறது. தங்கம் - ராஜாபற்றி அபத்தமான செய்திகளை யெல்லாம் வெளியிட்டு, அவர்கள் நடத்தைக்கு மாசு கற்பித்து விடுகிறான். ஆனாலும் 'கவலை வேண்டாம் நானிருக்கிறேன்' என்று ஆறுதல் தருகிறான் ராஜா. தங்கமும் ராஜாவும் சந்திக்கும்படி ஏற்பாடு செய்கிறான் கந்தசாமி. வீட்டில் ஏற்படும் ரகளை பொறுக்காமல் காசிக்குக் கிளம்பிவிடுகிறாள் பார்வதி.

காட்சி 7

ராமு வந்தான்

ராமு கால்களில் பட்டு நொண்டியானுனே தவிர, உயிரிழக்கவில்லை. அவன் ஊர் திரும்பியதும் தங்கம் ராஜாபற்றிய மஞ்சள் பத்திரிகைச் செய்திகளைப் படிக்கிருன். வீட்டுக்கு வருகிருன்.

ராமு: ஏம்மா...இந்த வீட்டிலே பழனியப்பபுலவர் குடும்பம் இருந்திச்சே அவங்க எங்கே அம்மா இருக்காங்க?

காவே: அந்த வாத்தியார்தானே? வாத்தியார்தான் வாயைப் பொளந்துட்டாரே.

ராமு: தங்கம், குழைந்தங்க?

காவே: தங்கத்துக்கென்ன, தங்கமா இருக்கா!

ராமு: எங்கேம்மா இருக்காங்க?

காவே: எங்கே...டாக்டர் ராஜா கூடத்தான். ஏமாந்த புருஷன் பட்டாளத்திலே உயிரெ விட்டான்.

ராமு: ஆ!

காவே: இவ என்னடான்னு ஏக போகமா இருக்கா. உம். அதை ஏன் கேக்கறே? காலம் கெட்டுப் போச்சு உம்....

அவன் உள்ளத்திலே அவள் வெறுப்பைக் கிளறிவிட்டுப் போய் விடுகிருள்.

காட்சி 8

ராஜாவின் சீற்றம்

ராஜா மனைவியைக் கோபிக்கிருன்

ராஜா: கட்டின புருஷனை இப்படி அவமானப்படுத்துவேன்னு நான் நெனைக்கவே இல்லே.

இந்: ஆமா...கட்டினவனை விட்டு கண்டவளோடு களியாட்டம் நடத்தறவனு நீங்க மாறுவீங்கன்னு நானும் நெனைக்கவே யில்லே...

ராஜா: படிச்சவ...பண்புள்ளவளாயிருப்பேன்னு நெனைச்சுத்தான். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனு...

இந்: ஆமா, நான் படிச்சவளாயிருந்தும் இது வரைக்கும் நீங்க நடிச்ச நாடகத்தைப் புரிஞ்சிக்க முடியாத பேதையா இருந்திட்டேன்.

ராஜா: உண்மையைப் புரிஞ்சிக்காம எதையோ சொல்லி உளராதே.

இந்: என்னுடைய உள்ளக் குமுறல் எல்லாம் உங்களுக்கு உளறலாத்தான் தெரியும்.

ராஜா: உன்னுடைய மனசை நீயே புண்ணுக்கிக்கிறே. இந்திரா! உன் சந்தேகமும் அவநம்பிக்கையும் எவ்வளவு பெரிய விபரீதத்தை ஏற்படுத்தி யிருக்குன்னு யோசித்துப் பார்.

இந்: நெருப்பில்லாமல் புகையாது!

ராஜா: உன்னுடைய போக்கே ஒரு மாதிரியாத்தான் இருக்கு.

இந்: உங்க போக்குத்தான் புரியாத புதிரா இருக்கு.

ராஜா: ஆமாம். புரையோடிப் போன உன் கண்களுக்கு என் போக்கு புதிராகத்தான் தெரியும். கௌரவ வாழ்க்கை நடத்தின உன் கணவனை பொது ஜனங்களுக்கு முன்னுல் ஒரு காமுகனுகக் காட்டியிருக்கே. மானத்தோடு வாழும் மாசில்லா மாணிக்கத்தை வேசீன்னு விளம்பரப்படுத்தி யிருக்கே. மத்தவங்க மதிக்க வாழ்ந்த என் குடும்ப கௌரவமும் மானமும் இந்த பித்தலாட்டப் பத்திரிகைக் காரங்களின் பேனுக்களுக்கு இரையாக்கிட்டே. அந்த ஏழைப்பெண்ணின் நெஞ்சிலே புயல். என் நெஞ்சிலே சூருவளி இந்திரா. இத்தனைக்கும் காரணமான நீமட்டும் இன்பத்திலா மிதக்கிருய்? இல்லையே. பிரளயம் அல்லவா ஏற்பட்டிருக்கிறது?

இந்: ஆமாம்...கொண்டவனை மறந்து கண்டவளோடு திரிகிற புருஷனேடு வாழ்க்கை நடத்தி வேதனைப் படறதைவிட பிரிஞ்சுபோய் வாழறது எவ்வளவோ மேல்.

ராஜா: ஓகோ! பிரிஞ்சு வாழணுங்கற முடிவுக்கு வந்தாச்சா?

இந்: இந்த மாதிரி புருஷன்கிட்டே வேறே எந்த மாதிரி முடிவுக்கு வரமுடியும்?

ராஜா: உம். உன்னுடைய போக்குத் தவறுங்கறதை உணரும் நாள் வெகுதூரத்திலே இல்லே.

ராஜா பத்திரிகையை எறிந்து விட்டு வெளியேறுகிருன்.

தானுகவே 50 முறை சுடும்

பிஸ்டல்

தானுகவே 50 முறை சுடும் லைஸன்ஸ் அவசியமில்லாத அமெரிக்கன் மாடல் பிஸ்டல். சுடும்போது வரும் ஓசை மிருகங்களேயும் விரோதிகளேயும் நடுங்கச் செய்யும். இதை சினிமா, நாடகங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். இது உங்களே ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறது. டிலக்ஸ் மாடல்; விலை ஒன்று ரூ. 10/50. வி. பி. சிலவு ரூ. 2/50. இலங்கைக்கு ரூ. 4/50. 25 குண்டுகள் இலவசம். தனி குண்டுகள் டஜன் ரூ. 1/- பிஸ்டலின் கேசும், பெல்டும் ரூ. 4/50. ரிப்பேர் செய்ய எண்ணெ ரூ. 1/-

அருமையான புத்தகங்கள்

இல்லறப் படங்கள் 88 கொண்டது. ரூ. 5/- கொக் சாஸ்திரம் ரூ. 3/- காமசூத்திரம் (படங்களுடன்) ரூ. 6/- பெண்களே வசீகரப்படுத்தும் முறை ரூ. 4/. செக்ஸ் அட்லாஸ் (325 படங்களுடன்) ரூ. 5/- செக்ஸ்லைப் (150 படங்களுடன்) ரூ. 4/- செக்ஸ் மர்மங்கள் படங்களுடன் ரூ. 10/- அழகிகள் 50 படங்களுடன் ரூ. 7/- ரதி சாஸ்திரம் ரூ. 3/- நவீனமுறை கர்பத்தடை ரூ. 4/ ஆண் பெண், சேர்க்கை (இரண்டு பாகங்கள்) ரூ. 5/- தேன் நிலவு ரூ. 4/- ரகசியக் காதல் கடிதங்கள் பதிலுடன் ரூ. 4/- வி. பி. சிலவு ஒன்று முதல் 3 புத்தகங்கள் வரை ரூ. 1/25.

GLOBE TRADERS,
(p. p. 500) Post Beat, 19,
ALIGARH

காட்சி 9

களங்கமில்லா மணம்

ராமு, ராஜாவை தவருக நினைத்து அடிக்கப்போய், தோல்வியுற்றுத் திரும்பி விடுகிருன். ராஜா தங்கத்தின் வீட்டுக்கு வருகிருன். இது கந்தசாமியின் சூழ்ச்சியால் வந்த கடிதத்தின் விளைவு.

ராஜா : தங்கம்!

தங் : வாங்க டாக்டர். அன்னிக்கு உன் மனசெ ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்.

ராஜா - இல்லே தங்கம், தவறு என்னுடையதுதான். நான்தான் உன் மனசெ புண்படுத்திட்டேன்.

தங் : இல்லே டாக்டர். உங்கள் மனம் நோக நான் அந்த வார்த்தைகளே பேசியிருக்கவே கூடாது.

ராஜா : ஊராரின் பழிச்சொல்லுக்குப் பயந்து நீ அப்படிப் பேசியதில் தவறில்லே. நான்தான் உன் வேதனையை புரிந்து கொள்ளாமல் இனி உன் வீட்டுக்கு வருவதில்லே என்று சொல்லி விட்டேன். அது என் தவறுதான் தங்கம்.

தங் : இல்லே டாக்டர். ஆணேவிட பெண்ணுக்குத்தான் பொறுமை அதிகம் வேண்டும். அந்த நிலேமாறி நான் உங்களே பேசிவிட்டேன். எனக்குத் திருமணமான பின்பு தன் துயரை மறந்து என்னே தங்கள் தங்கையாக்கிக் கொண்டீர்கள். நான் கண்ணீர்விட்டுக் கொண்டவுடன் இந்திராவைக் கல்யாணம் செய்துகொண்டீர்கள்.

இந்திரா அங்கே வருகிருள்.

தங் : எனக்கு இன்பம் வரும்போது சிரித்து, துன்பம் வரும்போது அழுது, என் சந்தோஷத்திலும் சங்கடத்திலும் எனக்குச் சகோதரனுக இருந்து உதவி செய்தீர்கள். ஊராரின் சந்தேகப் பேச்சுக்குப் பயந்து உங்கள் உள்ளம் நோகப்பேசியது, என் தவறுதான். என்னே மன்னித்து விடுங்கள் டாக்டர்.

ராஜா : அழாதே தங்கம். என் தாயின் வற்புறுத்தலுக்கு இணங்க. இந்திராவை நான் கல்யாணம் செய்து கொள்வதற்காக நீ செய்த தியாகத்திற்கு முன்னுல் நான் செய்த உதவி பெரிதாகாது தங்கம். நான் மனிதனுகத்தான் நடந்தேன். நீ என்னிலும் மேலாக, தெய்வமாக நடந்துகொண்டாய்

இனாம் ! இனாம் !! இனாம் !!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை] ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

ரூ. 1000 ரொக்க இனாம்!
நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லா விதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாயஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், தக்ஷணமே வசியமாய் விடுவார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்ரி, வியாபாரம் பந்தயம், சூதாட்டம், வழக்கு பரீட்சை இவற்றில் வெற்றி பெறுவீர்கள். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். ஜீவிய காலம் சுகமாக கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1. 94. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3. 00. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3. 99. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும். இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படி பலன் இல்லையென்றால் இரட்டிப்புசார்ஜ் வாபஸ்-க்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவருக்கு ரூ. 1000 இனாம்!

***Principal,* BENGAL MESMERISM HOUSE**
(P. P. M.) JULLUNDUR CITY

இந்திரா ஒளிந்திருந்து பார்க்கிருள்.

ராஜா : தவறு என்னுடையதுதான் தங்கம். நீ எனக்கு எழுதிய கடிதத்திலே நான் வார்த்தைகளைப் பார்க்கவில்லை. வேதனையால் நொந்துகொண்டிருக்கும் என் தங்கையின் கண்ணீரைத்தான் பார்த்தேன்.

தங் : என்ன...நான் உங்களுக்குக் கடிதம் எழுதினேனு?

ராஜா கடிதத்தைக் காட்டிப் பேசுகிருன்.

ராஜா : ஆமாம்...இதோ!

தங் : இது நீங்கள் எனக்கு எழுதிய கடிதந்தானே?

ராஜா : நான் உனக்கு எழுதவில்லையே!

தங் : என்ன?

ராஜா : யாரோ திட்டமிட்டு சூழ்ச்சி செய்திருக்கிருர்கள்.

பிரபல டி. எஸ். ஆர். கம்பெனியின் உரிமையாளரும், கும்பகோணம் முனிசிபல் சேர்மனுமான திரு. டி. எஸ். ராஜகோபால அய்யங்காரின் குமாரர் சிர. டி. ஆர். ராகவனுக்கும், சௌ. பத்மாசனிக்கும் ஜனவரி மாதம் 22-ம் தேதியன்று வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

தங் : அய்யய்யோ...ஏற்கனவே சந்தேகப்படும் இந்த உலகத்திற்கு இந்தச் சம்பவம் ஒரு சாட்சியாகி விடுமே டாக்டர்.

ராஜா : நம்ம மனதில் களங்க மில்லாத போது நாம் எதற்காகப் பயப்பட வேண்டும்? கவலைப்படாதே தங்கம்.

இருவரும் பிரிகின்றனர். இந்திரா தன் தவறுணர்ந்து வருந்துகிருள். இதன் பலனுக கந்தசாமியையும் மணவாளனையும் போலீஸார் அழைத்துப் போகின்றனர். வீடு திரும்பிய இந்திரா, தற்கொலை செய்து கொண்டு விடுகிருள். தங்கத்தை பழிவாங்கத் தீர்மானிக்கிருன் ராமு.

காட்சி 10

தங்கம் மனசு தங்கம்

ராமு தங்கத்தைக் கொல்ல அவள் வீட்டுக்குள் நுழைய முயற்சித்து, ராஜா வரவே ஒளிந்து கொள்ளுகிருன். ராஜா, தன் குழந்தை மோகனுடன் அங்கே வருகிருன்.

ராஜா : வந்தது தவறுதான் தங்கம்! ஆனு சந்தர்ப்பம் என்னை இங்கே வரச் செய்துவிட்டது.

தங் : என்ன?

ராஜா : தங்கம். மோகனை உங்கிட்டே ஒப்படைச்சுட்டுப் போகலாம்னு வந்தேன்.

தங் : நீங்க சொல்றது ஒண்ணும் எனக்குப் புரியலியே?

ராஜா : பெற்ற தாயை இழந்த அவனுக்கு வேறு புகலிடம் ஏது?

தங் : என்ன? தாயை இழந்துட்டானு?...என்ன சொல்றீங்க நீங்க?

ராஜா குழந்தையை தரையில் விட்டு விடுகிருன்.

ராஜா : சொல்றதுக்கென்ன இருக்குது? இந்திராவின் வாழ்க்கைச் சரித்திரம் முடிந்துவிட்டது. அவளுடைய மனச்சாட்சி அவளை பலியாக்கிவிட்டது.

தங் : விவரமாகச் சொல்லுங்க. வேதனைப்பட்ட எம்மனசெ மேலும் குழப்பாதீர்கள்.

ராஜா : குற்றவாளிகளும் கோழைகளும் தன்னைத்தானே கொன்று

கொள்வார்கள். அந்த வரிசையில் இந்திராவும் ஒருத்தியாகி விட்டாள். ஆம்...அவள் தற்கொலை செய்து கொண்டாள்.

தங் : ஆ...இந்திரா தற்கொலை செய்து கொண்டாளா? காரணம்?

ராஜா : கூடாத சந்தேகத்தின் பிடியிலே சிக்கி, வேண்டாத நண்பர்களின் தூண்டுதல் வார்த்தைகளை நம்பி, கட்டிய கணவனை வெறுத்து, குடும்ப அமைதியைக் கெடுத்து அத்தனை குற்றங்களும் வெளிப்பட்டதும் தன் தவறை உணர்ந்து இனி வாழக்கூடாது என்று ...தற்கொலை செய்து கொண்டாள்.

தங் : ஐயோ...அத்தனைக்கும் நான் தானே காரணம்? பாவி! நான் உலகத்தில் பிறந்திராவிட்டால் இந்த பயங்கரக் காரியங்களெல்லாம் நடந்திருக்காது.

ராஜா : நீ என்ன சொல்றே தங்கம்?
தங் : சொல்றதென்ன டாக்டர்? நான் ரொம்பவும் துரதிருஷ்டசாலி.

ராமு கதவண்டை வருகிறான். திடீரென்று நிற்கிறான். உன்னிப்பாகக் கவனிக்கிறான்.

தங்: கணவனை இழந்தேன். கண்ணான தந்தையையும் இழந்தேன். காப்பாற்றிய நண்பரின் வாழ்வைக் குலைக்கும் கொடுமைக்காரியானேன். எல்லோருடைய முடிவுக்கும் காரணமான நான் மட்டும் உயிரோடு இருக்கவேண்டுமா டாக்டர்?

ராஜா : தன் வினை தன்னைச்சுடவே தற்கொலை செய்து கொண்டாள் இந்திரா. அதற்கு நீ எப்படிப் பொறுப்பாளியாக முடியும்? பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே தங்கம்.

தங் : டாக்டர்?

ராஜா : இந்த நிலையில் நீயும் மனமுடைந்து விட்டால் உன்னை நம்பி மோகனை ஒப்படைக்கலாம் என்று வந்திருக்கும் நான் ஏமாற்றம் அடைந்து விடுவேன்.

தங் : மன்னித்து விடுங்கள் டாக்டர்! ஏதேதோ பேசி உங்களையும் வேதனைப் படுத்திவிட்டேன்.

ராஜா : தங்கம். இனி மோகனைக் காப்பாற்றுவது உன் பொறுப்பு. அவன் உன் மகன். காசிக்குப்போன என் தாய் திரும்பியவுடன் நீயும் குழந்தைகளும் என் வீட்டிலேயே வாழலாம்.

தங் : டாக்டர்! எங்கே போகிறீர்கள்?

ராஜா : நிம்மதியைத்தேடி.

தங் : மனம் சோர்ந்து போயிருந்த பல சந்தர்ப்பங்களில் எனக்குப் புத்திமதி சொன்ன நீங்களே வாழ்வை வெறுத்து விட்டால்?

ராஜா : தங்கம் நான் இங்கே இருந்தால்...உனக்குத்தான் துன்பம். பால்ய சிநேகிதத்தால் ஏற்பட்ட நம் நட்பைச் சந்தேகித்த இந்த உலகம், உயிர் நண்பனின் மனைவி உலகில் வாடக்கூடாது என்று நான் செய்த உதவிக்கு சோரத்தனம் என்று பட்டம் சூட்டிய இந்த உலகம், என் மனைவியின் மரணத்துக்கு நாம் தான் காரணம் என்று ஏன் கதை கட்டி விடாது? உண்மை பரவாது தங்கம். பொய்தான் பரவும். இங்கே நல்லவர்கள் வாழமுடியாது; துரோகிகள் தான் வாழ முடியும்.

தங் : டாக்டர்! தமையனைப்போலிருந்து காப்பாற்றி எங்களுக்குத் துன்பம் நேர்ந்த போதெல்லாம் துணையிருந்து ஆறுதல் சொல்லி, தரை மட்டமாயிருந்த எங்கள் குடும்பத்தைத் தழைக்கச் செய்த நீங்கள்...நீங்கள் ஊர்ச் சொல்லுக்குப் பயந்து ஓடுவதாக இருந்தால் எங்களுக்கு இந்த உலகமே தேவையில்லை டாக்டர், உலகமே தேவையில்லை.

ராஜா : என்னைத் தடுக்காதே தங்கம். மனிதத் தன்மைக்கு இங்கே நல்ல பரிசு கிடைப்பதில்லை. கிடைக்கவும் கிடைக்காது. நான் வருகிறேன்.

ராஜா நகர எத்தனிக்கிறான். கத்தியைக் கீழே போட்டு விட்டுக் கண்ணீருடன் நின்று கொண்டிருந்த ராமு கூவுகிறான்.

ராமு : நில்லுங்கள் ராஜா.
ராஜா : யாரு?
ராமு : ராமு!...
ராஜா : ராமு...நீயா?
தங் : அத்தான்...நீங்களா?

அவன் காலில் விழுகிறாள். ராமு எழுப்பி விடுகிறான்.

ராமு : தங்கம்...எழுந்திரு தங்கம்! ஏன் இந்த கோலம்?

தங் : நீங்கள் வருவதாக எழுதிய கடிதம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும்போது கார் விபத்தில் நீங்கள்... அத்தான்!...அதிர்ச்சியால் அப்பா இறந்தார். அமங்கலியாக நானும் மாறினேன்.

ராமு : உண்மை. நான் இறந்ததும் உண்மை. இன்று மீண்டும் பிறந்திருப்பதும் உண்மை.

ராஜா : என்ன சொல்றே ராமு?

தங் : ஒண்ணும் புரியவில்லையே.

ராமு : ஆமாம். பழிகாரன், தாலி கட்டிய மனைவியைக் கொல்ல இருந்த சண்டாளன், என் குடும்பத்தைக் காப்பாற்றிய உத்தமத்தோழனையும் கொலை செய்யக் காத்திருந்த சதிகாரன் நான்....டாக்டர்...ஊர் பேச்சைக்கேட்டு நெஞ்சிலே சந்தேகம் கொண்டு உங்களை வஞ்சம் தீர்த்துக் கொள்ள வந்த ராமு செத்துவிட்டது உண்மை. இப்பொழுது உங்கள் முன்னே நிற்பவன் மன்னிப்புக்கேட்க வந்திருக்கும் மறு பிறவி. டாக்டர்! என்னை மன்னித்து விடுங்கள் டாக்டர்.

அவர்கள் காலில் விழுகிறான்.

ராஜா : ராமு! இந்த நாட்டில் திண்ணைச் சோம்பேறிகளும் பிறர் வாழப் பொறுக்காதவர்களும் இருக்கும்வரை சந்தேக நோய்க்கு மருந்தே கிடையாது. இது உன் பிழையல்ல.

ராமு : தங்கம். நான் உன்னைத் தவறாக எண்ணியதற்கு நீயும் என்னை மன்னித்துவிடு. தங்கம்! உன் மனசு தங்கம்.

அவள் போகிறாள்.

ராமு : டாக்டர்! நீங்கள் நட்பி இலக்கணம்; நல்லெண்ணத்தின் பொச ஷம்; தியாகத்தின் இலக்கியம்! டாக் நீங்கள் ஒரு தெய்வப்பிறவி.

தங்கமும் சுகுணவல்லியும் வ கிறார்கள்.

தங் : சுகுணா...இதோ அப்பா...

ராமு : சுகுணா...!

சுகு : அப்பா...

ராஜா : தங்கம் என் பால்ய சிநேகி உன் இருண்ட வாழ்க்கை ஒளிபெற வேண்டுமென்று நான் பாடுபட்டேன் ராமு! என் உயிர் நண்பனின் குடும் விளக்கு இன்று மங்களமாக பிரகாசிப் பதை நான் பார்க்கிறேன். என் கடமை முடிந்தது...

ராஜா விநாயகர் படத்திடம் போகிறான். விளக்கேற்றுகிறா ர். ராஜா கடமைக்காக வாழ்ந்தா அதற்காக அவன் பட்ட கஷ் ம் கொஞ்சநஞ்சமல்ல. ஆனாலும் அ ர் வெற்றி பெற்று விட்டான். அவன் ஒரு கடமை வீரன்.

Statement about ownership published under th Registration of Newspapers Central Rules, 1956.

Form IV (See Rule 8)

(1) Arcot Road, Madras 24. *(2)* Monthly *(3)* Ramanath Press. Occupier: T. V. Ramanath, Indian, Arcot Road, Madras-24. (4) Ramanath Publications. Proprietor: T. V. Ramanath, Indian, Arcot Road, Madras-24. *(5)* Managing Editor: T. V. Ramanath, Indian, Arcot Road, Madras-24. *(6)* T. V. Ramanath, Sole Proprietor.

I, T. V. Ramanath, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) T. V Ramanath, *15-3-1960.*